# உதயன்




www.onlineuthayan.com

32: பக்கங்கள் சுடர் 27 கதிர் 287 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 23 சனிக்கிழமை (08/09/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00


# கிழக்குத் தேர்தல் இன்று

## தமிழ்க் கூட்டமைப்பு - மு.கா.- அரச தரப்பு இடையே கடும் போட்டி

கொழும்பு, செப்.8

பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் இன்று நடைபெறுகின்றது. இங்கு இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகள் இடையே கடுமையான போட்டி ஏற்பட்டுள்ளது. அத்துடன் வட மத்திய, சப்ரகமுவ ஆகிய மாகாண சபைகளுக்கும் இன்று நடைபெறுகின்றது.



**மூன்று மாகாண சபைகளுக்கு தேர்தல் நடைபெற்றாலும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் குறித்தே அனைவரதும் கவனமும் திரும்பியுள்ளது.**

இந்தத் தேர்தலில் 108 உறுப்பினர் தெரிவிற்காக 3,073 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் போட்டியிடுகின்றனர்.

மூன்று மாகாண சபைகளுக்கு தேர்தல் நடைபெற்றாலும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் குறித்தே சர்வதேசநாடுகள் உட்பட அனைவரினதும் கவனமும் திரும்பியுள்ளது. இதனால் கிழக்குத் தேர்தல் ஒரு ஜனநாயகச் சமராக மாறியுள்ளது.

2011 ஆம் ஆண்டின் தேர்தல் இடாப்பின் பிரகாரம் இன்று நடைபெறுகின்ற தேர்தலில் 33 இலட்சத்து 36 ஆயிரத்து 417 பேர் வாக்களிக்க தகுதிபெற்

பார்க்க பக்கம் 4

### தடுப்பில் உள்ள புலிகளை விசாரிக்க சுவிஸ் அரச சட்டவாளர்கள்

கொழும்பு,செப் 8

விடுதலைப் புலிகளின் நிதி வலையமைப்புக்கு எதிரான வழக்கில், இலங்கையில் தடுப்பில் உள்ள விடுதலைப் புலிகளிடம் குறுக்கு விசாரணை செய்ய சுவிற்சர்லாந்து அரச சட்டவாதிகள் கொழும்பு வரவுள்ளனர்.

அவர்கள் இலங்கையில் தடுப்பில் உள்ள விடுதலைப் புலிகளிடம் இந்த வாரமும் அடுத்தவாரமும் குறுக்கு விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. எனினும், இந்த விசாரணைகளில் பங்கேற்க கொழும்பு

பார்க்க பக்கம் 4

## 2

இலங்கை விடுத்துள்ள தமிழ் நாட்டுக்கான பயண எச்சரிக்கை வெகு விரைவில் நீக்கப்படும்- என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

## 5

யாழ். மாவட்ட மக்களுக்கு இன்னும் சில வாரங்களில் மேலதிக 24 மெகா வொட்ஸ் மின்சாரம் கிடைக்கும். இதன்மூலம் மொத்தம் 2லட்சத்து 50 ஆயிரம் மக்கள் வரையில் பயனடைவர்

## 8

கேரள மாநிலம் கொச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில், முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே.அப் துல் கலாமுக்கு சவரா சம்ஸ்க்ருதி புரஸ்கார் 2012 விருது வழங்கப்பட்டது.

## 10

இந்திய வம்சாவளி அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் அதிக நேரம் விண்வெளியில் நடந்த பெண் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

# இலங்கையர்கள் மீதான தாக்குதல் இந்தியாவுடன் நேரில் பேசுவேன்

## பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி தகவல்

கொழும்பு, செப்.8

இந்தியாவுக்குச் செல்லும் இலங்கையர்கள் மீது தமிழகத்தில் நடத்தப்படும் தாக்குதல்கள் குறித்து இந்திய மத்திய அரசுடன் தாம் முக்கிய பேச்சுகளை நடத்தவுள்ளார் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பொன்று நேற்றுக்காலை சபாநாயகரின் வாசஸ்தலத்தில் நடைபெற்றது. பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற அமைப்பின் 58 ஆவது மாநாடு கொழும்பில் நடைபெறுவது பற்றி விளக்கமளிக்க



இந்த ஊடக சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் கலந்து கொண்டபோது கருத்து வெளியிட்ட

பார்க்க பக்கம் 4

# வன்முறையற்ற தேர்தல் கிழக்கில் நடைபெறும்

## தேர்தல் ஆணையாளர் சம்பந்தனுக்குக் கடிதம்

கொழும்பு, செப்.8

தேர்தலின்போது கிழக்கு மாகாணத்தில் சுதந்திரமான வாக்களிப்புக்கான அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளையும், தேர்தல் திணைக்களம் செய்துள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பந்தனுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே தேர்தல் ஆணையாளர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் ஆளுங்



கட்சியினரால் நடத்தப்படும் தேர்தல் விதி மீறல்கள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சம்பந்தன் கடிதமொன்றை அனுப்பியிருந்தார். அந்தக் கடிதத்தின் பிரதியொன்று தேர்தல் ஆணையாளருக்கும் அனுப்பப்பட்டிருந்தது. இந்தக்

பார்க்க பக்கம் 4

# மஹிந்தவின் நிகழ்ச்சி நிரலை உறுதிப்படுத்த டில்லிக்கு குழு

கொழும்பு,செப் 8

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நிகழ்ச்சிகள் தொடர்பான ஏற்பாடுகளை இறுதி செய்வதற்கு, இலங்கையில் இருந்து முன்னோடி குழுவொன்று அடுத்த வாரம் புதுடில்லி வரவுள்ளதாகத் தகவல் அறிந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

தனிப்பட்ட பயணமாக இந்தியா செல்லவுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 20ஆம் திகதி புதுடில்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்திப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன.

இதற்கு முன்னோடியாக அவரது புதுடில்லிப் பயண நிகழ்ச்சிகள் குறித்த பணிகளை மேற்கொள்ள உயர் மட்டக் குழுவொன்று அடுத்த

பார்க்க பக்கம் 4

# தமிழக மக்களின் மனோநிலையை அரசு புரிந்துகொள்ள வேண்டும்

## சுட்டிக் காட்டுகிறது தமிழ்க் கூட்டமைப்பு

கொழும்பு,செப் 8

இந்திய - இலங்கை உறவுகள் திருப்திகரமாக இருக்க வேண்டுமாயின், தமிழக மக்களின் மனோநிலை, தமிழக அரசின் மனோநிலையையும், தமிழக அரசியல் கட்சிகளின் மனோநிலைகளையும் இலங்கை அரசு புரிந்துகொள்ள வேண்டும். இலங்கை அரசின் எதிர்காலச் செயற்பாடுகளில்தான் இந்திய- இலங்கை நல்லுறவும் தமிழகத்துடனான நல்லுறவும் தங்கியுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் நாட்டுக்குச் சென்ற இலங்கை யாத்திரிகர்கள் தமிழக மக்களால் தாக்கப்

பார்க்க பக்கம் 4

# எமது வெளியுறவுக் கொள்கை சரியில்லை என்று ஐ.தே.கவின் எந்தக்குழு சொன்னது

## நகைச்சுவையாக கேட்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,செப் 8

''எமது வெளிநாட்டுக் கொள்கை சரியில்லை என்றபடியால்தான் தமிழகத்தில் இலங்கையர்கள் தாக்கப்படுகிறார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் எந்தக் குழு கூறுகிறது?''

- இவ்வாறு நகைச்சுவையாகக் கேள்வியெழுப்பினார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நேற்று சபாநாயகரின் வாசஸ்தலத்தில் நடைபெற்ற பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையர்கள் தமிழகத்தில் தாக்கப்படுவது அரசின் வெளிநாட்டுக் கொள்கை சரியில்லாத காரணத்தால் தானென்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டுகிறதே என்று பத்திரிகை ஆசிரியர் ஒருவர் கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, ''ஐக்கிய தேசியக் கட்சியின் எந்த குரூப்

பார்க்க பக்கம் 4

# நாட்டின் அபிவிருத்திப் பணிகளை நேரில் பார்த்து முடிவெடுங்கள்

## பிரிட்டன் எம்.பிக்களை அழைக்கிறார் பீரிஸ்

கொழும்பு, செப்.8

இலங்கை வாருங்கள், வந்து போருக்குப் பின்னர் எமது நாடு அடைந்துள்ள அபிவிருத்தியை நேரில் பார்த்து நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

இவ்வாறு பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து அழைப்பு



விடுத்திருக்கிறார் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

எங்கு வேண்டுமானாலும் சென்று பாருங்கள், வெளிப்படைத் தன்மையும் நேரில் பார்வையிடுவதும் தான் எமது நாடு பற்றிப் பரப்பப் பட்டுள்ள உண்மைக்கு [illegible]

பார்க்க பக்கம் 4

# இந்திய எம்.பிக்கள் குழுவிடம் டக்ளஸ் குறித்து விசாரியுங்கள்

## சென்னை உயர்நீதிமன்றில் வழக்கு

சென்னை,செப் 8

இலங்கைக்கு வந்த இந்திய நாடாளுமன்றக் குழுவினர் இந்தியாவில் ஒரு கொலை வழக்கில் தேடப்படும் குற்றவாளியான இலங்கை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா [illegible] உள்ளனர். இதனையடுத்து இந்திய நாடாளுமன்றக் குழுவிடம் டக்ளஸ் தேவானந்தா பற்றி விசாரிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றக் கிளையில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மதுரையை சேர்ந்த மனித உரிமை ஆர்வலர் இருளாண்டி சென்னை உயர்நீதிமன்றில் வாசிப்பு மனுத்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பயண எச்சரிக்கை வெகு விரைவில் நீக்கப்படும்

**இலங்கையில் இருந்து தமிழகம் செல்பவர்களுக்கான பாதுகாப்புக் குறித்து மத்திய அரசின் பிரதிநிதிகள் உத்தரவாதம் வழங்கி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கொழும்பு,செப்.8

இலங்கை விடுத்துள்ள தமிழ் நாட்டுக்கான பயண எச்சரிக்கை வெகுவிரைவில் நீக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்திய மற்றும் இலங்கை அரச பிரதிநிதிகளுக்கு இடையில், இது தொடர்பிலான பேச்சு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இலங்கையில் இருந்து தமிழகம் செல்பவர்களுக்கான பாதுகாப்பு குறித்து மத்திய அரசின் பிரதிநிதிகள் உத்தரவாதம் வழங்கி இருப்பதாகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது வெளியுறவுத் துறை அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம ஆகியோர் இலங்கையில் இல்லாத நிலையில், அவர்கள் நாடுதிரும்பிய பின்னர் இது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## கொழும்பின் பல பகுதிகளில் நீர்வெட்டு

கொழும்பு,செப்.8

களுகங்கைத் திட்டத்தின் கீழ் புதிய நீர்விநியோகக் குழாய்களைப் பொருத்தவேண்டியுள்ளதால் கொழும்பின் பல பகுதிகளிலும் இன்று காலை 8 மணியிலிருந்து 12 மணித்தியால நீர்வெட்டு மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மாளிகாவத்தை, பண்டாரநாயக்க மாவத்தை, பாலத்துறை சந்தி, ஜெயந்த வனசந்தி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் நீரைச் சேமித்து வைத்து பயன்படுத்துமாறு தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. (த)

# ஆஸி. செல்ல முயன்ற 58 பேர் நேற்றுக் கைது

கொழும்பு,செப்.8

மீன்பிடிப் படகு மூலம் சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியா தப்பிச் செல்ல முயற்சித்த 58 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டதாக இலங்கைக் கடற்படையினர் தெரிவித்தனர்.

தெவ்மினி என்ற படகு திருகோணமலை கடற் பரப்பில் இருந்து 19 மைல் தூரத்தில் பிடிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் 35 தமிழர்களும் 20 முஸ்லிம்களும் 3 சிங்களவர்களும் அடங்குகின்றனர்.

இவர்களில் 44 ஆண்களும் 6 பெண்களும் 8 சிறுவர்களும் அடங்குவர்.

இவர்கள் வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மூதூர், கல்பிட்டி, நீர்கொழும்பு, முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர்.

கைது செய்யப்பட்டோர் திருகோணமலை துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டுக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (த)

# வடக்கு மக்களுக்கு ஆறாயிரம் வீடுகள்

## வீடமைப்பு அதிகார சபை அமைக்கிறது

கொழும்பு,செப். 8

வடக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களின் நலன் கருதி 6ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்குத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தீர்மானித்துள்ளது.

இந்திய நிதி ஒதுக்கீட்டின் கீழ் வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதாக அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த வீடுகள் யாவும் இந்திய நிதியுதவியை மாத்திரம் பயன்படுத்தி நிர்மாணிக்கப்படவுள்ளதால் மக்களின் பங்களிப்பையும் பெற்றுக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் புதிதாக வீடொன்றை நிர்மாணிப்பதற்கு ஐந்து லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதமும் புனரமைப்பதற்கு இரண்டு லட்சத்து 50ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

உத்தேச வீடமைப்புத் திட்டத்துக்கு உள்வாங்கப்படவுள்ள பயனாளிகள் வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களின் அரச அதிபர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களால் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

புதிய வீடமைப்புத் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு அடுத்த மாதம் முதலாவது வாரத்தில் வவுனியாவில் நடைபெறவுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## இரு வாக்காளருக்காக மாந்தீவில் வாக்குச் சாவடி

மட்டக்களப்பு,செப். 8

மட்டக்களப்பில் இரண்டு வாக்காளர்களுக்காக, மாந்தீவில் ஒரு வாக்களிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணசபைக்கு இன்று தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் வாக்களிப்பதற்கு மாந்தீவில் இரண்டே இரண்டு வாக்காளர்கள் மட்டும் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு வாவியின் நடுவே அமைந்துள்ள மாந்தீவில், இவர்களுக்காகத் தனி வாக்களிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.இந்த வாக்களிப்பு நிலையத்துக்கு படகு மூலம் அதிகாரிகள் வாக்குப்பெட்டியை கொண்டு செல்வர். (த)

# ஒன்றிணைந்த எதிர்க்கட்சியை உருவாக்கும் தேவை இல்லை

## ஹிருணிகா பிரேமசந்திர கூறுகிறார்

கொழும்பு,செப்.8

தமக்கு ஒன்றிணைந்த எதிர்க்கட்சியைத் தோற்றுவிப்பதற்கு எந்தவொரு தேவைப்பாடும் இல்லை என்று ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

தாம் இலங்கை பொதுஜன கட்சியின் உறுப்பினர் என்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி என்ற வகையிலும் தமக்கு எதிரணியை உருவாக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிரணியை உருவாக்கும் தேவை இல்லாத அதே வேளை, எதிர்க்கட்சியிலும் இணைவதற்கு தாம் எதிர்பார்க்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாகச் சீர்குலைந்துள்ள எதிர்க்கட்சியுடன் இணைந்து கொள்வதற்குத் தமக்கு எந்தவொரு முக்கிய தேவைப்பாடும் இல்லை என்றும் ஹிருணிகா தெரிவித்துள்ளார்.

ஹிருணிகா பிரேமசந்திர ஒன்றிணைந்த எதிர்க்கட்சியுடன் இணையப் போவதாக முன்னாள் அமைச்சர் ஹேமகுமார நாணயக்கார அண்மையில் தெரிவித்திருந்தார்.பின்னர் ஹிருணிகாவின் கூற்று தொடர்பில் முன்னாள் அமைச்சரிடம் வினவிய போது, அவர் அதற்குப் பதிலளிக்க மறுத்துவிட்டார். (த)

# தேர்தல் விதிகளுக்கு முரணாக பொருள் விநியோகித்தவர் கைது

மட்டக்களப்பு,செப்.8

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பிரிவுக்குட்பட்ட குருமண்வெளி பகுதியில் தேர்தல் சட்டவிதிகளுக்கு மாறாக மக்களுக்கு பொருள்கள் விநியோகம் செய்ததாகக் கூறப்படும் ஒருவரைக் களுவாஞ்சிக்குடி பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை கைதுசெய்துள்ளனர்.

உணவுப் பொருள்கள் மற்றும் ஆடைகள் இவ்வாறு விநியோகிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலைத் தொடர்ந்து உரிய இடத்துக்கு விரைந்த பொலிஸார் மேற்படி நபரை கைது செய்ததாகவும் மேற்படி நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## டிரான் அலஸ் பதவி விலகல்

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனநாயகத் தேசியக் கட்சியின் செயலாளருமான டிரான் அலஸ் அந்தக் கட்சியில் இருந்து பதவி விலகியுள்ளார்.

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு சரத் பொன்சேகா தலைமையில் செயற்பட்டு வரும் கட்சியாகும். இந்தக் கட்சியின் செயலாளர் பதவியில் இருந்த டிரான் அலஸ் விலகியுள்ளார்.

# நூற்றுக்கணக்கான பொலிஸார் மன்னாரில் இருந்து கிழக்குக்கு

## பஸ் சேவைகள் பாதிப்பு

மன்னார், செப்.8

கிழக்கு மாகாண சபைத் தேர்தலையொட்டிப் பாதுகாப்பைப் பலப்படுத்தும் முகமாக மன்னாரில் இருந்து நூற்றுக்கணக்கான பொலிஸார் கிழக்கு மாகாணத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

மன்னார் அரச போக்குவரத்துச் சேவைக்குச் சொந்தமான சுமார் 10 இற்கும் மேற்பட்ட பஸ்களில் இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இதனால் மன்னாரில் போக்குவரத்துச் சேவைக்காக அரச பஸ்கள் பற்றாக்குறையாக உள்ளன. உள்ளூர் மற்றும் வெளியூர் சேவைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் உள்ளூர் சேவைகள் பல இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் பயணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் திணைக்களங்களின் பணியாளர்களும் உரிய நேரத்துக்குத் தமது இடங்களுக்குச் செல்ல முடியாத நிலையில் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

எனினும் தனியார் பஸ்கள் உள்ளூர் சேவையினை காலை 9 மணிமுதல் இரவு வரை மட்டுமே மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-12)

# தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் காட்டுமிராண்டித்தனமான செயல்

## தாக்குதல் குறித்து அமைச்சர் சம்பிக்க சீற்றம்

கொழும்பு,செப்.8

தமிழ்நாட்டில்இடம்பெறும் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளைத் தடுக்க இந்திய மத்திய அரசு முயற்சிகளை மேற்கொள்ளா விட்டால் இங்கு இந்தியாவுக்கு எதிரான அரசியல் சமூக எதிர்ப்புக்கள் கிளம்பும் என்று அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான சம்பிக ரணவக்க எச்சரிக்கை விடுத்தார்.

தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் ஒழுக்க விழுமியங்களற்ற காட்டுமிராண்டிகள் என்பதனை நிரூபித்துள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தமிழ் நாட்டுக்குப் பயணம் செய்த இலங்கை யாத்திரிகர்கள் மீதான தாக்குதல் தொடர்பாகத் தமது கண்டனத்தை வெளியிட்டுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மின்சக்திஅமைச்சர் சம்பிக்க ரணவக்க இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கை அரசு மக்களைக் கொலை செய்ததாகவும் யுத்தக் குற்றங்களைப் புரிந்ததாகவும் அரசின் மீது குற்றங்கள் சுமத்தப்படுகின்றன. அவ்வாறு எம் மீது குற்றம் சுமத்தும் தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் காட்டுமிராண்டிகளைப் போல் ஒழுக்கக் கேடாக நடந்து கொள்கின்றனர். ஆலய வழிபாட்டுக்காகச் சென்ற யாத்திரிகர்கள் மீது தாக்குதல்களை நடத்தி தமது ஒழுக்கக் கேட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆனால் இந்த ஆண்டு ஒரு லட்சத்திற்கு மேல் இந்திய உல்லாசப் பயணிகள் இங்கு வந்துள்ளனர். அவர்களுக்கு எதிராக எமது நாட்டு மக்கள் ஏதேனும் ஆர்ப்பாட்டங்களைச் செய்தார்களா? தாக்குதலை மேற்கொண்டார்களா? அது மட்டுமல்லாது தமிழ் நாட்டில் தயாரிக்கும் ரி.வீ.எஸ். மோட்டார் சைக்கிள்கள் இங்கு அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றன.

அந்த நிறுவனத்துக்கு இங்கு கிளை அலுவலகமும் உள்ளது. அதுமட்டுமல்லாது எயார்டெல், இந்தியன் ஒயில் நிறுவனங்கள் உட்படப் பெருமளவிலான நிறுவனங்கள் இயங்குகின்றன.

ஒருபோதும் எமது நாட்டு அரசியல்வாதிகள், பொது மக்கள் இவற்றுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தவில்லை. தாக்குதல்களை மேற்கொண்டதில்லை. அந்தப் பண்பாடு தமிழ் நாட்டில் இல்லை. அவ்வாறானவர்கள்தான் எம் மீது குற்றம் சுமத்துகின்றனர் - என்றார். (த)

## தேர்தல் முறைப்பாடு இன்று மாலை வரை தெரிவிக்கலாம்

கொழும்பு,செப்.8

தேர்தல்தொடர்பான முறைப்பாடுகளை தேர்தல் ஆணையாளருக்குத் தெரிவிப்பதற்கான விசேட நிலையமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இன்று மாலை 5 மணிவரை இந்தத் தொடர்பாடல் நிலையத்தில் முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியுமென தேர்தல்கள் திணைக்களம் தெரிவிக்கிறது.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, அநுராதபுரம், பொலன்னறுவை இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களிலிருந்து முறைப்பாடுகளை தெரிவிப்பதற்கு தனியான தொலைநகல் மற்றும் தொலைபேசி இலக்கங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

முறைப்பாடுகளுக்காக 011 2877611-4, 011 2877616-8 என்ற தொலைபேசி இலக்கங்களைப் பயன்படுத்த முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

# எஸ்.எஸ்.பி. ரணகலவுக்கு உயர்நீதிமன்றம் அழைப்பு

அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரேமலால் ரணகலவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு மீதான வழக்கு தொடர்பாக, எதிர்வரும் 17ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அவருக்கு உயர் நீதிமன்றம் நேற்று அழைப்பாணை விடுத்ததுடன் 17 ஆம் திகதிக்கு இந்த வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த மனுவினை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் எம்.ரி.ஹசன் அலி, அந்தக் கட்சியின் அக்கரைப்பற்று அமைப்பாளர் ஹனீபா (மதனி) மற்றும் கிழக்கு மாகாண சபை வேட்பாளர் எம்.தவம் ஆகியோர் தாக்கல் செய்துள்ளனர்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரேமலால் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளார் எனக் குற்றம் சுமத்தியும் அவரை உடனடியாக இடமாற்றம் செய்ய நீதிமன்றத்தின் உத்தரவினை கோரியும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, சட்டமா அதிபர், பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் மற்றும் கிழக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுதாரர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணிகளான கலாநிதி ஜயம்பதி விக்ரமதுங்க மற்றும் நிசாம் காரியப்பர் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளலாய் வடக்கு பகுதி மக்கள் மீளக்குடியமர்வதில் நெருக்கடி

## காணிகள் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதே காரணம்

*யாழ்ப்பாணம், செப். 08*

*கோப்பாய் செயலர் பிரிவில் வளலாய் வடக்கு பிரதேசம் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் தொடர்ந்தும் இருப்பதன் காரணமாக 129 குடும்பங்களைச் சேர்ந்த 446 பேர் சொந்த இடங்கள் இன்றித் தவிக்கின்றனர்.*

இதேவேளை இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் கண்ணி வெடிகள் அகற்றப்படாததன் காரணமாக 326 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 85 பேர் மீளக்குடியமர முடியாதுள்ளனர்.

இவ்வாறு கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், மீள்குடியமர்வு நிலைமை தொடர்பில் தெரிவிக்கப்பட்டபோதே இந்த விடயமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 28 ஆம் திகதி இடைக்காடு பிரதேசத்தில் விடுவிக்கப்படாதிருந்த பகுதிகள் முழுவதும், வளவாயில் வளலாய் வடக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளிலும் மக்கள் குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இருப்பினும் இடைக்காட்டின் அக்கரைப்பகுதி, வளலாயில் மக்கள் மீள் குடியமர அனுமதிக்கப்பட்ட ஒரு பகுதி என்பனவற்றில் கண்ணிவெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் கிடைக்கப் பெறாமையால் விடுவிக்கப்பட்ட குறித்த பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படவில்லை.

இதன் காரணமாக அக்கரைப் பகுதியில் மீளக்குடியமர விண்ணபித்த 116 குடும்பங்களைச் சேர்ந்த 442 பேரும் , வளலாயில் 210 குடும்பங்களைச் சேர்ந்த 643 பேரும் மீளக்குடியமரவில்லை.

படையினர் வளலாய் வடக்குப் பிரதேசத்தை விடுவிக்காததன் காரணமாக 129 குடும்பங்களைச் சேர்ந்த 446 பேர் மீளக்குடியமரவில்லை.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மொத்தமாக 455 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 98 பேர் மீளக்குடியமரவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டது. (ம-5)

# வறண்டு போயுள்ள யாழ். புல்லுக்குளம்



யாழ்ப்பாணம், செப்.8

தற்போதைய கடும் வறட்சி காரணமாக யாழ். நகரின் மத்தியில் உள்ள புல்லுக்குளத்தில் நீர் முழுமையாக வற்றியுள்ளதால் அது வறண்டு போயுள்ளது.

குளத்தின் ஒரு கரையில் உள்ள சிறிய குழியில் மட்டும் தண்ணீர் உள்ளது.

கடந்த வருடத்தில் இந்தக் குளம் சுற்றுலாப்பயணிகளைக் கவரும் வகையில் ஆழமாக்கிப் புனரமைக்கப்பட்டது. புனரமைப்புப் பணிகளும் இதுவரை முழுமையாக முடிவடையவில்லை.

தற்போது குளத்தில் நீர் வற்றி நிலப்பகுதி வறட்சியால் வெடித்துக் காணப்படுகிறது. (த-17)

# யாழ். மாவட்ட பயனாளிகளுக்கு பயன்தரும் பழ மரக் கன்றுகள்

## 30 வருடங்களின் பின் வட்டவன திணைக்களம் திட்டம்

யாழ்ப்பாணம் . செப். 08

யாழ். மாவட்டத்தில் 30 வருடங்களின் பின் வட்டவன திணைக்களத்தின் ஊடாக புதிய மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என்று யாழ். மாவட்ட வட்டவன அதிகாரி ஆர். ரவிராஜ் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வட்டவன திணைக்களத்தின் ஊடாக 15 ஆயிரத்து 500 புதிய மரக்கன்றுகள் 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இவற்றில் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் பொருட்டும் பயன்தரு மரங்களும் நிழல்தரும் மரங்களும் உற்பத்தியாகின்றன.

தற்போது 60 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 40 குடும்பங்களும், உடுவில் பிரதேச செயலக பிரிவில் 20 குடும்பங்களும் தெரிவாகியுள்ளன. இவர்களுக்கு பலா, தேசி, கஜு ஆகிய பழமரக் கன்றுகளும் வழங்கப்படவுள்ளன

ஏனைய மரக்கன்றுகளான தேக்கு, மகோகனி, மரவேம்பு, வாகை, சமண்டலை ஆகிய பயன்தரு மரங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

நாற்று மேடைகள் அமைக்கப்பட்டு கன்றுகள் வளர்ப்பதற்கு போதிய இடவசதிகள் இல்லை. இதனால் கச்சேரிக்கு அண்மையில் தற்காலிக இடம் ஒதுக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்தார். (ம-13)

# கிணறை வெட்டியபோது கிளம்பின ஷெல் பூதங்கள்

தென்மராட்சி,செப்.8

கிணறு வெட்டும்போது அங்கிருந்து ஷெல்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் எழுதுமட்டுவாழ் கரம்பக பகுதியில் இடம்பெற்றது.

இந்தப் பகுதியில் கிணறு வெட்டிய தொழிலாளர்கள் 6 அடி ஆழம்வரை வெட்டிய போது அங்கு வெடிக்காத நிலையில் 46 ஷெல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததை அவதானித்தனர்.

ஷெல் கிடந்ததைக் கண்ட தொழிலாளர்கள் அருகில் உள்ள படைமுகாமுக்கு அறிவித்தனர். அங்கு விரைந்த குண்டு அகற்றும் பிரிவினர் ஒன்றன் பின் ஒன்றாக 46ஷெல்களையும் மீட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் இடம் பெயர்வின் பின், குறித்த காணியில் இருந்த கிணறு முழுமையாக சேதமடைந்ததால் புதிய கிணறு அமைப்பதற்காக வெட்டியபோதே ஷெல்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# மோ. சைக்கிளில் பயணித்தோர் மின் கம்பத்துடன் மோதி விபத்து

## தலைக் கவசம் அணியாமையால் படுகாயம்

*வடமராட்சி,செப்.8*

*மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மின் கம்பத்துடன் மோதிப் படுகாயம் அடைந்தனர்.*

*இவர்கள் தலைக்கவசம் அணியாமல் சென்றமையால் படுகாயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*சம்பவம் துன்னாலை கலிகைச் சந்தியில் செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணியளவில் நடைபெறவுள்ளது.*

*இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அ.புவநேசன் (வயது20), ர.பத்மரூபன் (வயது 16 ) ஆகிய இரு இளைஞர்களுமே படுகாயமடைந்தவர்களாவர்.*

*படுகாயமடைந்தோர் சிகிச்சைக்காக உடனடியாக பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.*

*இரு இளைஞர்களும் தலைக்கவசம் அணியாமல் மந்திகையில் இருந்து கலிகை நாற்சந்தியை நோக்கிச் சென்ற போது, நேர் வீதியில் கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறை டிப்போவைச் சேர்ந்த கொழும்பு பஸ் நாற்சந்திக்கு வந்துகொண்டிருந்தது.*

*இந்த நிலையில் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து சந்தியிலிருந்த மின்கம்பத்துடன் மோதியது. இதனால் இருவரும் படுகாயத்துக்கு ஆளாகியுள்ளனர். (ம-8)*

ஓவியர்கள் தேவை

சுவர் விளம்பரம் எழுதக்கூடிய அனுபவம் உள்ள ஓவியர்கள் தேவை.

தொடர்புகளுக்கு : 077 2023857, 077 2718103

# சேவையின் ஊடாக சமாதானம் றோட்டறிக் கழகத்தின் கருத்தரங்கு



*('ஆறுதல்' அமைப்புக்கு ஒரு தொகுதி நிதியை றோட்டறிக் கழகம் வழங்குகிறது. முன்பள்ளி ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக இந்த நிதி வழங்கப்பட்டது.)*

வலி வடக்கு, செப்.8

யாழ். மாவட்ட றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் 'சேவையின் ஊடாக சமாதானம்' என்னும் கருப்பொருளிலான கருத்தரங்கு யாழ். நகரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதம விருந்தினராக ஹற்றன் நஷனல் வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆர். தியாகராசாவும் சிறப்பு விருந்தினராக சிரேஷ்ட வரி ஆலோசகர் என்.கஜேந்திராவும் கலந்து கொண்டனர்.

மங்கல விளக்கைப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆர்.தியாகராசா, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட என்.கஜேந்திரன், இலங்கை றோட்டறிக் கழகத்தின் (மாவட்டம் 3220) டி. ஜீ. தர்சன் ஜோன், மாவட்ட செயலாளர் லால் விஜயரட்ண, பொருளாளர் சண்முகநாதன், யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய் வைத்தியர் என். ஜெயக்குமாரன், யாழ். மாவட்ட றோட்டறிக்கழக முன்னாள் தலைவர் ஈ.சரவணபவன், கொழும்பு தெற்கு முன்னாள் தலைவர்களான குஞ்சிதபாதம், என்.சரவணபவன், கொழும்பு கிழக்கு முன்னாள் தலைவர்களான லசந்த விஜயவீரா, மகிழன் நடராசா, கொழும்பு மேற்கு முன்னாள் தலைவர்களான கருணாகரன் ஜெறோம், இராஜேந்திரா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

விசேட உரைகள், கலை நிகழ்வுகள் என்பனவும் இடம் பெற்றன. (ம-86-14)

# 23 பேருக்கு கடந்த மாதம் மட்டும் ஜெய்ப்பூரால் செயற்கை அவயவம்

யாழ்ப்பாணம், செப். 8

மிதிவெடி விபத்து போன்ற காரணங்களால் கை, கால்களை இழந்த 23 பேருக்கு கடந்த மாதம் யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் நிறுவனம் செயற்கை அவயங்களை பொருத்தியுள்ளது.

இதற்கமைவாக முழுங்காலுக்கு மேல் செயற்கை கால்களை 5 பேருக்கும், முழங்காலுக்கு கீழ் செயற்கை கால்களை 16 பேருக்கும், முழங்கையுக்கு கீழ் செயற்கை கைகள் 3 பேருக்கும் பொருத்தியுள்ளதுடன் மிதிவெடியால் கை, கால்களை இழந்த 8 பேருக்கும், போரின் போது கை, கால்களை இந்த 2 பேருக்கும், எறிகணையால் பாதிக்கப்பட்ட 5 பேருக்கும், நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட 3 பேருக்கும், துப்பாக்கிச் சூட்டால் பாதிக்கப்பட்ட 3 பேருக்கும், விபத்தால் பாதிக்கப்பட்ட 2 பேருக்கும் செயற்கை அவயங்களையும் பொருத்தியுள்ளது . இதனைவிட 17 பேருக்கு சார் புறுப்புகளும், 28 பேருக்கு நடமாடும் உபகரணங்களையும் வழங்கியுள்ளதாக யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ம-14)

# வாள் வெட்டுக்கு ஆளாகி மூவர் வைத்தியசாலையில்

வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் மூவர் காயமடைந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

கொடிகாமம் நகர்ப் பகுதியில் இரவு உணவு வாங்கி வந்த கொடிகாமம் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் நிரோஜன் (வயது-21) என்பவரும் கொடிகாமம் கெற்பேலிப் பகுதியில் காணித்தகராறு தொடர்பாக இதே இடத்தைச் சேர்ந்த முருகர் பஞ்சாட்சரம் (வயது- 58) என்பவரும் பளை இத்தாவில் பகுதியில் மீள்குடியமர்வுக்காக வீடு அமைத்ததில் ஏற்பட்ட தகராறு காரணமாக இதே இடத்தைச் சேர்ந்த தம்பையா கந்தசாமி (வயது 45) என்பவருமே வெட்டுக் காயங்களுக்கு இலக்கானவர்களாவர். இவர்கள் மூவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-9)

*நிகழ்வு.*

# இன்று

### பொதுக்கூட்டம்

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன யாழ்வெளிக்கள உத்தியோகத்தர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு சுண்டுக்குளியிலுள்ள பஸ்ரியன் விடுதியில் நடைபெறவுள்ளது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பட்டமையானது பல்வேறுபட்ட சர்ச்சைகளை உருவாக்கியிருக்கின்றது. அப்பாவி மக்கள் அவர்கள் எத்தரப்பினராக இருந்தாலும் தாக்கப்படுவது அங்கீகரிக்கப்பட முடியாததும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததுமாகும். அந்த வகையில், தமிழகத்துக்கு யாத்திரை சென்ற இலங்கை மக்கள் தாக்கப்பட்டமையானது துரதிஷ்டமானதும் வருத்தத்துக்குரியதுமாகும்.

ஆனால், இந்தநிலை ஏன் தோன்றியது என்பதே இங்கு முக்கியமானது. யுத்தம் முடிந்து மூன்றாண்டுகளின் பின்னரும் வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் இராணுவ ஆக்கிரமிப்புக்குள் உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

நிரந்தர இராணுவக் குடியிருப்புக்கள் நவீன மயப்படுத்தப்பட்ட இராணுவ முகாம்கள் என்பவை சீன உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்ப் பெண்கள் சிங்கள இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுகின்றனர். தமிழ் மக்களின் நிலங்கள் இராணுவத்தினரால் கபளீகரம் செய்யப்படுகின்றது. தமிழ் மக்கள் தொடர்ந்தும் துன்புறுத்தப்படுகின்றனர்.

இவ்வாறான துன்புறுத்தல்களைப் பார்க்கக்கூடிய கேட்கக்கூடிய யாவரும் சிங்கள அரசின்மேல் ஆத்திரமும் கோபமும் கொள்வது இயற்கையே.

அந்த ஆத்திரத்தின் வெளிப்பாடுதான் யாத்திரிகர்கள் தாக்கப்பட்டமை என்பதை இலங்கை அரசு புரிந்துகொள்ள வேண்டும். இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறாமல் இருக்க வேண்டுமாயின், இலங்கை அரசு மேற்கண்ட தவறுகளை நிறுத்த வேண்டும்.

தமிழகத்துக்கு வந்திருந்த இலங்கை உதைபந்தாட்டக் குழு திருப்பி அனுப்பப்பட்டதானது அதன் ஒருபகுதி என்பதை இலங்கை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.- என்றுள்ளது. (த)

## தருப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வருவதற்கு எதிர்த்தரப்பு சட்டவாளர்களுக்கு இலங்கை அரசு விஸா வழங்க மறுத்து விட்டது. அரச சட்டவாளர்களுடன் ஐந்து பொலிஸ் அதிகாரிகள், இரண்டு மொழிபெயர்ப்பாளர்களும் கொழும்பு வரவுள்ளனர்.

எதிர்த் தரப்புச் சட்டவாளர்களுக்கு இலங்கை அரசு விஸா வழங்க மறுத்து விட்டதால், அவர்கள் பேர்ணில் இருந்தவாறு சாட்சிகளிடம் நடத்தப்படும் குறுக்கு விசாரணைகளில் நேரலை காணொலி தொழில்நுட்பம் மூலம் பங்கேற்கவுள்ளனர். இதன் மூலம் சாட்சிகளிடம் அவர்கள் கேள்விகளை எழுப்ப முடியும்.

இலங்கை சட்டமாஅதிபர் திணைக்களம் எதிர்த்தரப்பு (விடுதலைப் புலிகளின்) சட்டவாளர்களுக்கு விஸா வழங்க இணங்கிய போதும், இலங்கை வெளிவிவகார அமைச்சு தலையிட்டு அதை நிராகரித்து விட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

## மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வாரம் கொழும்பில் இருந்து செல்லவுள்ளது.

இந்தக் குழுவில் சில அமைச்சர்களும் அதிகாரிகளும் இடம்பெறக்கூடும் என்றும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

இரு நாடுகளின் தலைவர்களும் இருதரப்பு விவகாரங்கள் குறித்துப் பேசக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 21ஆம் திகதி சாஞ்சியில் பௌத்த பல்கலைக் கழகத்துக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பங்கேற்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியா செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(த)

## வன்முறையற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடிதத்திற்குப் பதிலளிக்கும் ரீதியில் சம்பந்தனுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே தேர்தல் ஆணையாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் குறிப்பிட்டிருப்பவை வருமாறு:-

1.தேர்தல் முறைகேடுகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மாவட்டங்களிலுள்ள எனது பிரதி, உதவி அதிகாரிகளும், மத்தியில் நானும் தேர்தல் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

முறைகேடுகளைத் தடுப்பதற்கான பணிப்புரைகளைத் தேர்தல் ஆணைய அதிகாரிகளுக்கு விடுத்துள்ளேன்.

2. வைபவ ரீதியிலான நிகழ்வுகளையும், அபிவிருத்திப் பணிகள் அங்குரார்ப்பணத்தையும் தடுக்கவோ, ஒத்திப்போடவோ நான் நடவடிக்கைகள் எடுத்துள்ளேன். பொதுமக்களின் நலன்கருதி அத்தகைய வைபவங்களையோ, திறப்பு விழாக்களையோ உள்ளூர் அரசியல்வாதிகளினதும், வேட்பாளர்களினதும் பங்குபற்றுதல் இல்லாமலே நடத்தப்படவேண்டும் என்றும் வரையறை செய்துள்ளேன்.

அதேவேளை, அரச வாகனங்களையும், இதர அரச உடைமைகளையும் துஷ்பிரயோகம் செய்வதைத் தடுக்குமாறும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைமை அதிகாரிகளுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளேன்.

3. எப்போதாவது எத்தகைய சம்பவம் குறித்தும் முறையிடுவதாயின், குறைந்தபட்சமாவது விவரங்கள் தரப்படவேண்டும். சில தொடர்பற்ற சம்பவங்களை விடுத்து இதர சம்பவங்கள் குறித்து எனது திணைக்களம் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

4. நீங்கள் கேட்டுக்கொண்ட வேட்பாளர்களுக்கு பாதுகாப்பளிக்க நான் பரிந்துரை செய்துள்ளேன். பொலிஸ் மா அதிபரும் ஏற்கனவே அதனை அளித்துள்ளார்.

5. பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து வாக்காளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். வாக்குச்சாவடிகளுக்குச் சென்று அவர்களால் அச்சமின்றி வாக்களிக்க முடியும். தேர்தல் தினத்தன்றும், மறுதினமும் நாடெங்கிலும் பொலிஸாரும், அரச சேவையாளர்களும் விழிப்பாக செயற்படுவார்கள். வன்செயல்களில் ஈடுபடுவோர், தேர்தல் சட்டவிதிகளை மீறுவோர் ஆகியோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். சட்டத்துக்கமைய அவர்கள் நடத்தப்படுவார்கள்.

6. வாக்களிப்பையும் வாக்குகள் எண்ணிக்கையையும் சுலபமாக மாற்றியமைத்துவிட முடியாதென்பதை உத்தரவாதப்படுத்துகிறேன். அப்படி மாற்றியமைக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றால் எந்தவொரு பிரஜைக்கும் இந்த நாட்டின் சட்டத்துக்கமைய நீதி பெறுவதற்குச் சுதந்திரமுண்டு.

## இலங்கையர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி மேலும் கூறியவை வருமாறு:-

பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற அமைப்பின் 58 ஆவது உச்சி மாநாடு இங்கு நடைபெறும்போது இந்தியாவில் இலங்கையர்கள் தாக்கப்படும் விவகாரத்தை அந்த மாநாட்டில் விவாதிக்க முடியாது.

. தமிழ்நாட்டில்தான் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. நாங்கள் மாநிலத்துடன் தொடர்படவில்லை. இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கைக்கேற்ப அவர்களுடன் நாம் தொடர்புபட்டு செயற்பட்டு வருகிறோம்.

19ஆம் திகதி நான் இந்தியா செல்லும் போது இதுபற்றி அவர்களுடன் பேசுவேன். ஏற்கனவே இலங்கையர்கள் தாக்கப்பட்டபோது நாங்கள் விடுத்த பாதுகாப்பு வேண்டுகோள்களை ஏற்று இந்தியா யாத்திரிகர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்கியது. அது எமக்குப் பெரிதும் திருப்தியளிக்கும் விடயமாக உள்ளது.

இவ்வாறான சமயங்களில் நாம் சிந்தித்துச் செயற்படவேண்டியது அவசியமாகும். ஒருசில கட்சிகளின் செயற்பாடுகள் மாநில அளவில் நடப்பதை நாம் ஓர் அரசு என்ற ரீதியில் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. - என்றும் குறிப்பிட்டார் ஜனாதிபதி.

(த-சி)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தாக்கல் செய்தார். நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு கடந்த 18.4.2012 அன்று இலங்கை சென்றது. இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து பேசியது. அந்த சந்திப்பின்போது இலங்கை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உடனிருந்தார்.

இவர் இந்தியாவில் ஒரு கொலை வழக்கில் தேடப்படும் குற்றவாளி. எனவே அவரைப் பற்றிய முழு விவரமும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக்குத் தெரிந்திருக்ககூடும். எனவே இலங்கை சென்ற சுஷ்மா சுவராஜ் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் டக்ளஸ் தேவானந்தாவைப் பற்றி விசாரிக்க கேட்டு ஏப்ரல் 26ஆம் திகதி அன்று உள்துறை செயலாளர், பொலிஸ் டி.ஜி.பி. ராமானுஜம் ஆகியோரிடம் மனுக் கொடுத்து இருந்தேன். அந்த மனு மீது நடவடிக்கை எடுக்க இந்த நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்-இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

இந்த மனு நீதிபதி பால் வசந்தகுமார் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. மனு மீதான விசாரணையை ஏற்றுக் கொண்ட நீதிபதி டிவிசன் பெஞ்சிற்கு மாற்றம் செய்து உத்தரவிட்டார். (த)

## நாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கள் நம்புகின்றோம் என்று பீரிஸ் அவர்களிடம் கூறினார்.

பிரிட்டன் நாடாளுமன்றக் குழுவினர் வடக்கு, கிழக்குக்குச் சென்று பார்த்தால் அங்கு நடைபெற்று வரும் பெரும் எடுப்பிலான பொருளாதார அபிவிருத்திப் பணிகளை நேரில் காணமுடியும். ஒரு சமயம் சீர்குலைந்து போய்க் கிடந்த பிரதேசங்கள் சீர்பெற்று வருவதை, மக்கள் புதிய முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதை, புதிய வாழ்வாதாரங்களை அவர்கள் தாமே உருவாக்கிக் கொள்ளும் முனைப்புகளைக் காண முடியும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

அண்மையில் பிரிட்டனில் இருந்து ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று இலங்கைக்கு வந்திருந்தபோது அங்கு நடைபெற்றுவரும் அபிவிருத்திப் பணிகளை வெகுவாகப் பாராட்டியிருந்தார்கள். ஆக எதிர்கொண்டிருந்த பெரும் பிரச்சினைகளையும் அவைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகளையும் அவர்கள் நேரில் கண்டறிந்தார்கள் என்றார் அவர்.

(ப)

## எமது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இப்படிச் சொன்னது? அதை முதலில் சொல்லுங்கள்'' - என்றார். இந்தப் பதில், நிகழ்வில் பெரிதும் கலகலப்பை ஏற்படுத்தியது.

மேலும் மாகாணசபைகள் எப்போது கலைக்கப்படப்போகின்றன என மற்றுமொரு பத்திரிகை ஆசிரியர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி, ''ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனம் வைத்தால் செய்யலாம்'' - என்றார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பில் முக்கியமான யோசனைகளை முன்வைக்க ஜனாதிபதி முன்வர வேண்டுமென பிறிதொரு பத்திரிகை ஆசிரியர் யோசனையொன்றை முன்மொழிந்தார். இதற்கு ஜனாதிபதி அளித்த பதில் பெரும் சிரிப்பலையை உருவாக்கியது.

''இங்கே பாருங்கள். நான் ஜனாதிபதிதான். இருந்தாலும், பொதுநலவாய நாடாளுமன்ற அமைப்பைப் பொறுத்தவரை நான் வெறும் ஆலோசகர் மட்டும்தான். ஆலோசகர் என்றால் உங்களுக்கு சொல்லித்தெரியவேண்டுமா என்ன? எனது ஆலோசகர்கள் போல்தான். எனது ஆலோசகர்கள் செய்யும் வேலை உங்களுக்குத் தெரியும்தானே'' - என்றார் ஜனாதிபதி.

மாகாணசபைத் தேர்தல் குறித்தும், வன்முறைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கிறதா என்பது பற்றியும் பத்திரிகை ஆசிரியர்கள் ஜனாதிபதியிடம் கேள்விகளைத் தொடுத்தனர்.

''தேர்தல் பிரசாரங்களில் ஒரு மாத காலத்திற்கு மேல் ஈடுபட்டு எல்லோரும் களைத்துப்போய் இப்போது ஓய்வெடுத்துக் கொண்டிருக்கின்றனர். எவர் வன்முறையில் ஈடுபடப்போகின்றார்கள்? தேர்தலுக்காகக் கஷ்டப்பட்டவர்கள் ஓய்வு எடுக்கும் நேரமே இது'' - என்றும் குறிப்பிட்டார் ஜனாதிபதி.

# கிழக்குத் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
றுள்ளனர் எனப் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம். மொஹமட் தெரிவித்தார்.

மூன்று மாகாணங்களிலும் 3 ஆயிரத்து 247 வாக்குச்சாவடிகளில் இன்று வாக்களிப்பு இடம்பெறுகின்றது. வாக்குகளை எண்ணுவதற்காக 236 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

3 மாகாணங்களில் 37 தொகுதிகளில் நடைபெறுகின்ற தேர்தலின் முடிவுகள் அந்தந்த தொகுதி வாரியாக அறிவிக்கப்படும்.

இன்று காலை 7 மணிக்கு அனுராதபுரம், பொலன்னறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு, திகாமடுல்ல, இரத்தினபுரி, கேகாலை ஆகிய ஏழு மாவட்டங்களிலுமுள்ள 37 தேர்தல் தொகுதிகளிலும் வாக்கெடுப்பு ஆரம்பமாகிறது.

வாக்காளர்கள் தேசிய அடையாள அட்டை உட்பட ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து அடையாள அட்டைகளையும் வாக்களிப்பதற்காகப் பயன்படுத்தலாம்.

தேர்தல் நடைபெறும் மாவட்டங்களின் தேர்தல் அலுவலகங்களிலிருந்து வாக்குச் சாவடிகளுக்கு வாக்குப்பெட்டிகள் பூரண பாதுகாப்புடன் நேற்று எடுத்துச்செல்லப்பட்டது.

தேர்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கென தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பரியவினால் 175 மேலதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**4 ஆயிரத்துக்கும் அதிகமான கண்காணிப்பாளர்கள்**

மூன்று மாகாண சபைக்குமுரிய தேர்தலை கண்காணிப்பதற்கென இம்முறை சுமார் 4 ஆயிரத்துக்கும் அதிகமான உள்நாட்டு கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மேலதிகமாக கண்காணிப்பு வாகனங்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

தேர்தல்கள் திணைக்களத்தினால் 400 கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், பஃவ்ரல், கஃபே ஆகிய கண்காணிப்பு நிறுவனங்கள் உள்ளிட்ட பல தனியார் கண்காணிப்பு நிறுவனங்கள் நீதியானதும் அமைதியானதுமான முறையில் தேர்தலை நடத்தும் பொருட்டு மிகுந்த ஆர்வத்துடன் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

**பாதுகாப்புப் பணியில் 21 ஆயிரம் பொலிஸார்**

நேற்றுமுன்தினம் முதல் 21 ஆயிரம் பொலிஸார் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர் என தேர்தல்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்தார்.

இந்நிலையில், தேர்தல் முடிவடைந்ததும் தபால் மூல வாக்களிப்பின் முதலாவது பெறுபேற்றினை இன்று நள்ளிரவு 12 மணியளவிலும் முழுமையான வாக்களிப்பினது முதலாவது பெறுபேற்றினை நாளை காலை 2 மணியளவிலும் வழங்குவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என பிரதி ஆணையாளர் மொஹமட் தெரிவித்தார்.

**236 வாக்கு எண்ணும் நிலையங்கள்**

236 நிலையங்களில் வாக்குகள் எண்ணப்படுகின்றன. வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு பவ்ரல், கபே ஆகிய கண்காணிப்பு நிறுவனங்களின் கண்காணிப்பாளர்களுக்கு, கண்காணிப்பில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் மட்டக்களப்பில் 26 நிலையங் களிலும் அம்பாறையில் 29 நிலையங்களிலும் திருகோணமலையில் 19 நிலையங்களுமாக கிழக்கு மாகாணத்தில் 74 வாக்கு எண்ணும் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் 1162 வாக்குச்சாவடிகளில் தேர்தல் நடத்தப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு ஆகிய மூன்று தேர்தல் தொகுதிகளிலும் 414 வாக்குச்சாவடிகளில் வாக்கெடுப்பு நடைபெறுகின்றது. இம் மாவட்டத்தில் 11 உறுப்பினர்களை தெரிவிற்காக 14 பேர் போட்டியிடுகின்றனர். இங்கு 3 இலட்சத்து 47 ஆயிரத்து 99 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை, சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில் ஆகிய நான்கு தேர்தல் தொகுதிகளில் 463 வாக்குச் சாவடிகளில் வாக்கெடுப்பு நடைபெறுகின்றது. 14 உறுப்பினர்கள் தெரிவிற்காக 17 பேர் போட்டியிடுகின்றனர். இம் மாவட்டத்தில் 4 இலட்சத்து 41 ஆயிரத்து 287 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் சேருவில, திருகோணமலை, மூதூர் ஆகிய மூன்று தேர்தல் தொகுதிகளில் 285 வாக்குச்சாவடிகளில் வாக்கெடுப்பு நடைபெறுகின்றது. இம் மாவட்டத்தில் 10 பேர் தெரிவு செய்வதற்காக 13 பேர் போட்டியிடுகின்றனர். இங்கு 2 இலட்சத்து 45 ஆயிரத்து 363 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

உத்தியோகப்பூர்வ தபால் மூல வாக்களிப்பு கடந்த மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளில் நடத்தப்பட்டதுடன் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் யாவும் 05 ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வான் விற்பனைக்கு

நிஷான் வனற் பெற்றோல் வான் விற்பனைக்கு உண்டு. இல - GR xxxx
தொடர்புகளுக்கு : 078 3566626
(21834)(8.14)

## தேவை

T.P- +94777108185
+212219585
(22830)(3.14)

டிஜிற்றல் பிறிண்டிங் மெசின் இயக்குனர் உடனடி தேவை. டிசைனிங் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சுயவிவர கோவையுடன் சமுகம் தரவும்
தொடர்புகளுக்கு:- கிருஸ்ணா டிஜிற்றல் பிறிண்டிங்
ராமநாதன் வீதி, திருநெல்வேலி. (22630)

## A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு

**IT Diploma Courses**
Diploma in PC Application
Diploma in Microsoft Office
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip.in Web Designing & Development
Dip. in Computerized Accounting
Tally Financial Accounting Training
Dip in Video Production & Multimedia
Master Diploma in Multimedia & Animation
2D & 3D Animation AutoCAD

75% OFF



DMI COMPUTER EDUCATION
அனைவருக்கும் 75% கட்டணக்கழிவு

Veta English Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு II - 8/09/2012
பிரிவு III -10/09/2012 9.30 am

☑அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑சர்வதேச அங்கீகாரம் பெற்ற (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

முழுமையானதும் தரமானதுமான கணினி கல்விக்கு

## DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113. கன்னாதிட்டி வீதி, (சயவல்ஸ் ஹோட்டல் அருகாமை) Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி,(HNB அருகில்) Tel. : 021-227 0243 | கே. கே. எஸ். வீதி, JET மோட்டேர் கட்டிடம், (NSB அருகில்) Tel. : 021-224 1970 |


# ஐ. தே. க. வேட்பாளர் வீட்டுக்கு நேற்று முன்தினம் குண்டுவீச்சு

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் திருகோணமலை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி முதன்மை வேட்பாளர் எம்.ஏ.எம். மஹ்றூபின் வீட்டுக்கு இனந்தெரியாதோரால் கைக்குண்டொன்று வீசப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் கிண்ணியாவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீசப்பட்ட இந்தக் கைக்குண்டு வீட்டுக்கு முன்னால் உள்ள மரமொன்றில் பட்டு கீழே விழுந்து வெடித்துள்ளது.

இதனால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ)

## கிழக்கில் 13 வன்முறை சம்பவங்கள்

கிழக்கு மாகாண சபை தேர்தல்களை மையப்படுத்திய 13 வன்முறை சம்பவங்கள் பதிவாகி இருப்பதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

பவ்ரல் அமைப்பின் நிறை வேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

அனுராதபுர மாவட்டத்தில் அதிக அளவில் வன்முறை சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (வ)

## கண்ணீர் அஞ்சலி

யா/கோப்பாய் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றும் திருமதி ம. நந்தகுமார் ஆசிரியை அவர்களின் அன்புத்தந்தையார் **வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நலன்புரிசங்கம், யா/கோப்பாய் மகாவித்தியாலயம்.
(22631)(8.14)

## கண்ணீர் அஞ்சலி

எமது வைத்தியசாலையில் மருத்துவ உத்தியோகத்தராகக் கடமைபுரியும் Dr. திருமதி பூபதீஸ்வரி இரவீந்திரன் அவர்களின் அன்புத்தந்தையார்.

**அமரர் மார்க்கண்டு தம்பிராசா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை,
கைதடி.
(22629)(8.14) பணியாளர் நலன்புரிசங்கம்.

## மரண அறிவித்தல்கள்

### சிவபாதசுந்தரம் புவனேஸ்வரன்
(பொன்னு)



ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாதசுந்தரம் புவனேஸ்வரன் நேற்று முன்தினம் (06.09.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம்-செல்வமணி தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் பவளரத்தினம் (கனடா) தம்பதியரின் மருமகனும் நிர்மலாவின் அன்புக் கணவரும், நித்திலா (யா/யூனியன் கல்லூரி), நிதூஷன் (யா/நடேஸ்வராக் கல்லூரி), பவித்திரா (யா/யூனியன் கல்லூரி), பானுஷன் (யா/யூனியன் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற நாகேஸ்வரன் மற்றும் கமலேஸ்வரன் (சுமங்கலி சில்க் சுன்னாகம்), புனிதவதி, பாஸ்கரன் (சுவிஸ்), கணேசன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாரதிநாதன் (நீர்ப்பாசன திணைக்கள இளைப்பாறிய தொழில் நுட்ப உத்தியோகத்தர்), யோகாம்பிகை (பிரான்ஸ்), தனபாக்யலட்சுமி, கௌசலாதேவி (சுவீஸ்), பிரபாரதி (பிரான்ஸ்), சுபத்திரா (கனடா), சாரதா, ஸ்ரீஸ்கந்தராசா (கனடா), பாலேஸ் வரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.09.2012) ஞாயிற்றுக்கிழமை முப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை தெற்கு,
சூராவத்தை, சுன்னாகம். (22633)(3.14)
தகவல்
குடும்பத்தினர்.

### திருமதி பராசக்தி கனகரத்தினம்



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி பராசக்தி கனகரத்தினம் நேற்று (07.09.2012) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் (ஓய்வு பெற்ற சுங்க விலாக்கா உத்தியோகத்தர்), அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீநிவாசன் (ஓய்வு பெற்ற அதிபர், பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புமகளும், காலஞ்சென்ற சரவணபவனின் சகோதரியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2012) சனிக்கிழமை பண்ணாகத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடி நிலை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம், சுழிபுரம் (22635)(8.14)
தகவல்:
ச. சுந்தரமூர்த்தி (மைத்துனர்)

## மரண அறிவித்தல்

### திருமதி குகானந்தவல்லி கனகலிங்கம் (குகம் அக்கா)



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி குகானந்தவல்லி கனகலிங்கம் நேற்று (07.09.2012) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் கனகலிங்கத்தின் (ஓய்வுபெற்ற கிளை முகாமையாளர், நல்லூர் ப.நோ.கூ.ச.) அன்புமனைவியும், யாழினி, கையிலைவாசன் (U.K), கேசவன் (Edna Medical (Pvt) Ltd) ஆகியோரின் பாசமிகு தாயும்,சுதாகரன், சுகந்தினி ஆகியோரின் பாசமிகு மாமியும், இராசலிங்கம் (கனடா), அரியநாயகம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜனகரஞ்சன், சுவர்ணன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2012) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு. (22627)(2.7.6)
தகவல்:
குடும்பத்தினர்.

## 65 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும் 50 ஆவது வருட திருமண வாழ்த்தும்



### திரு.பொன்னர் அப்பையா
### திருமதி அப்பையா யோகேஸ்வரி

எங்களுக்காகவே இவ் உலகில் கிடைக்கப்பெற்ற
எங்கள் அன்புத் தெய்வங்களான அப்பையா யோகேஸ்வரி
இருவரும் இன்று இல்லறத்தில் பொன்விழா காணும் இந்நாளில்
இன்றுபோல் என்றும் இனிமையுடன் பல்லாண்டு
காலம் வாழ இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்
இனிய நல்ல வாழ்வு தன்னை
பெருமையோடு சிறப்புற வாழ்ந்து
எல்லோரையும் அன்பினால் ஈர்த்து
பண்பினாலும் பார்போற்ற வாழ்ந்துவரும்
எம் அன்புத் தெய்வங்களே
வாழ்கவென வாழ்த்துகின்றோம்
அன்பெனும் ஆலயத்தில் பாசமெனும் தீபமேற்றி
கண்ணை இமை காப்பது போல்
எம்மையெல்லாம் நல்வழிப்படுத்தி
குறையில்லா நிறைவாழ்வு கொடுத்த
எம் அன்புத் தெய்வங்களே
வாழ்க நீர் பல்லாண்டு



(18740) (2.6.7)

"அம்பிகை வாசா",
புலோலி தென்மேற்கு,
புலோலி, 021 226 4280

தாய் - தங்கம்மா, சகோதரி - கனகேஸ்வரி,
சகோதரன் - குலவீரசிங்கம் (டென்மார்க்)
பிள்ளைகள்:-
யோகாம்பிகை, பிரபாகரன் குடும்பம்,
மீனாம்பிகை குடும்பம் (அவுஸ்திரேலியா),
கிருபாகரன் குடும்பம் (லண்டன்),
சுதாகரன் குடும்பம் (பிரான்ஸ்),
கரிகரன் குடும்பம் (பிரான்ஸ்),
மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை யோகராசா (பத்தர்)



கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும், உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை யோகராசா கடந்த (06.09.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - பவளம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- இராசமுத்து தம்பதியரின் மருமகனும், பாக்கியராணியின் கணவரும், சுகிதன் (அருச்சுனா), பாலமுருகன் (இந்திரன்) ஆகியோரின் தந்தையும், விஜயமாலா, விஜயரூபி ஆகியோரின் மாமனும், லியானிகா, மேகலன்,சஞ்சய், ஓவியா ஆகியோரின் அன்புப் பேரனும், அரிய மலர், காலஞ்சென்ற பூமணி மற்றும் சிவபாலன், சிவகுருநாதன், சந்திரா, சத்தியதேவி, வசந்தராணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.09.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் உடுப்பிட்டியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"செல்வ மஹால்"
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி (வெள்ளைறோட்).

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/3144)(45.6.7)

# வாடகைக்கு

யாழ். கந்தர்மடத்தில் வீடு ஒன்று வாடகைக்குண்டு.

தொடர்பு : 071 8432004


(சி/3226)(6-7-8)

சில சந்தர்ப்பங்கள் பெறுமதியானவை...............

Prince City Campus இன் பட்டப்படிப்பு போல

The world standard undergraduate programme

**EdHat IHD in Law leading to LL.B (UK)**




**Registration is open for New Batch**

Don't miss the free seminars on 15th and 16th of September, 2012

Join us, and obtain your dream degree

**Prince City Campus**
No. 275, Clock Tower Road, Jaffna.
Hotline: 0775 949 272
E-mail: princeenquirie@yahoo.com

(சி/2697)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



07.09.2012 உதயனில் பக்கம் 19 இல் பிரசுரமான மேற்படி விளம்பரத்தில் திருமதி சிசிலியா தனமணி ராஜரட்ணம் என்பதை

திருமதி சிசிலியா குணமணி ராஜரட்ணம் எனத் திருத்தி வாசிக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

விளம்பரதாரர்.

(சி/3158)(6.7.8)

# கண்ணீர் அஞ்சலி



யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் காரியாலய சேவகராக முதல் நியமனம் பெற்று 32 வருடகாலம் தனது அர்ப்பணிப்பான சேவையை வழங்கி ஓய்வு பெற்ற எமது அன்புக்குப் பாத்திரமான

## அமரர் சங்கரப்பிள்ளை இரகுபதி

அவர்கள் இறைபதம் எய்திய செய்தி அறிந்து துயர் கொள்வதோடு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

யாழ்ப்பாணம்

அமரரோடு சேர்ந்து பணியாற்றிய ஆசிரியைகள்,
செல்வி . இ. வைத்திலிங்கம்
செல்வி. மு. செல்வராணி, திருமதி சி. நந்தகுமார்.

(22621)(6.7.8)


நீங்களும் Web Designer ஆகலாம்!-பலநூறு தளங்களை வடிவமைத்து.

இணையத்துறையில் அன்றும் இன்றும் என்றும் தனக்கென தனியிடம் பிடித்த Speed IT net நிறுவனத்தில் Computer Programming, Web development, Internet Security, Networking, E-commerce துறைகளில் பலவருடம் தொழில்முறை அனுபவம் வாய்ந்த, பல்வேறு கணினிச்சஞ்சிகைகளில் பணியாற்றிய

**த.தவரூபன்** அவர்களின்

பயிற்சிப்பாசறையில் இணைந்துகொள்ள ஒரு சந்தர்ப்பம்!

கிழமை நாட்களில் மாலை 4.30 தொடக்கம் மாலை 6.30 மணி வரையும்
சனி ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் இரு வேளைகளிலும் நடைபெறும்



**Dial @ 0777 563213 / 021 2228358**

Visit to our Office or Register in http://course.speedit.lk

**SPEED IT NET**

"The Quick way to Online"

www.speeditnet.com

72/28 Panikkar Lane Palaly Road,Thirunelvely Jaffna. Telephone: 021 222 8358 / 0777 563213

**Advanced Diploma in Web Engineering**
**Course Duration: 6 Months (120hrs), Fee 30,000/-**

☑Internet Applications, ☑HTML ☑CSS ☑Javascript ☑Jscript☑Ajax☑XML
☑Dreamviewer/Frontpage
☑Embedding with Video,Audio,Animations ☑Script ,Widget Implementation
☑Introduction to Adobe Photoshop, Gif Animator,Flash
☑FTP management,Domain ,Hosting Concept and Management
☑PHP ☑ My SQL ☑PHPMyAdmin ☑Web server Installation
☑Open Source Web Application Installation and Management
☑CMS (Joomla,Wordpress,Drupal) And LMS Systems [Moodle....]
☑Hosting Control panel management(Cpanel/Plesk)
☑Search Engine Optimization Techniques(SEO)
☑Social Media Marketingn ☑Internet Revenue Systems(Adsense..)
☑Ecommerce & Related Tools
☑Internet Security, Site Malware Removal, Black list Removal
☑Web Broadcasting, Webcasting,
☑Web on Mobiles,Introduction to Mobile Applications
☑Introduction to E-Government,Internet Laws, Ethics, Polices, Crimes
☑Site Project

**Diploma in Web Desining(2 months 20 Hrs 6000/-)- Sylabus Different**

9-9-20-12 மு.ப 10 மணிக்கும்
10-9-2012 பி.ப 4.30 மணிக்கும் புதிய பிரிவுகள் ஆரம்பம்.
முன்பதிவின்றி மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(சி/3138)


# Dr. Aru Thirumurugan : A Model of Benevolence





Dr. Thirumurugan is a very wide chapter, however he has to be primarily identified with education as he was nurtured in that atmosphere from his infancy for, his mother had taken him along with her in the cradle as an infant to the school where she taught and kept him there whilst attending to her duties as a teacher. Hence he had sensed that atmosphere at such an early stage in his life cycle. Having had this beginning he progressed to reach the upper echelons of education as Principal of one of the renowned schools in the Jaffna Peninsula and gained further recognition for his services in that direction when he was crowned with a doctorate bestowéd on him by the University of Jaffna, being an acknowledgement of his eminent contribution to education alongside the services he had so consistently rendered towards uplifting the community.

Dr. Thirumurugan's recent move to retire pre-maturely from the services of education is indeed a great loss to the student community in general and especially to those attending Skandavarodaya College. Nonetheless, there are other areas of the community destined to gain by this move of his for, the disabled, the elderly are to reap the benefits of this step. Above all, his ties with Durga Amman will undoubtedly be further strengthened as he would be able to give undivided attention to the temple and its many activities.

I would regard that he has been very honest to retire pre-maturely despite having 9 more years to serve as Principal because, he felt and did not wish to handle many tasks and thereby do justice to all. It was for this reason that he decided to take this step to relinquish his role as Principal of Skanda. I wish to add that Dr. Thirumurugan had alongside his invaluable contribution to the cause of education through his long years of teaching, had added a very religious atmosphere at Skanda, a much desired contribution to the youth of today to be god fearing.

Let me wish him many more years of good health so as to render fruitful service to mankind and to religion. I wish to finally thank those who provided this opportunity for me to express my sentiments on Dr. Thirumurugan, a person who is far from being self centred, lives to serve for the betterment of others.

**Prof. (Dr.) P. Puvanarajan** President, OSA, UK. (22612)(2-6-7)

# மரண அறிவித்தல்

## ஐயாத்துரை நற்குணநாதன் (குணம்)



உரும்பிராய், உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், இறுதியாக குவைத் நாட்டில் வசித்தவருமான ஐயாத்துரை நற்குணநாதன் 31.08.2012 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை (ஐயா அண்ணை) - பவளம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நேசம்மாவின் அன்புக் கணவரும், காந்தகுமார் (காந்தன்-நவாலி), துஷியந்தன் (பிரான்ஸ்), அனுஷா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், யமுனாதேவி (நவாலி), திருமகள் (பிரான்ஸ்), செல்வபாலா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் பத்மலிங்கம் (கிளி அண்ணை- உரும்பிராய்), கணேசலிங்கம் (கணேஸ் இத்தாலி), லக்ஷ்மி (குஞ்சி-லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகிழம்மா (லீலா - கனடா), காலஞ்சென்ற இந்திரா மற்றும் தர்மகுமாரி (ரஞ்சி - இத்தாலி), காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் நாகேஸ்வரி (வனஜா), காலஞ்சென்ற தர்மலிங்கம் (தியாகு) ஆகியோரின் அன்பு மைத்துனரும், வசந்தா (வசந்தி), பத்மகுமார் (ராசன்), பத்மரஞ்சன் (ரஞ்சன்), பத்மசிறி (சிறீ), பத்மலீலா (பாமா), பத்மகரன் (ரமேஷ்), கௌரி, கஜன், வாசுகி, காலஞ்சென்ற கௌதமி மற்றும் கௌசல்யா, அகல்யா, அகிலன், அரவிந்தன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், கஜலக்சி, லக்ஷியா, சங்கரன், கிருஷிகன் (நவாலி), அபிரா (சுவிஸ்), ஈசாக் (சுவிஸ்), பிறைசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.09.2012) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

தகவல்:
அனுஷா (மகள் - தொ.பே. 077 1477 219),
கணேசலிங்கம் (கணேஸ் - சகோதரன்- தொ.பே. 077 1460 277).

(18735)(45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழகத் தலைவர்கள் மதியூகத்துடன் செயற்பட வேண்டிய வேளை இது

இந்தியா, தமிழகத்தில் தஞ்சாவூர், பூண்டி மாதா தேவாலய விழாவிலும், நாகபட்டினத்தில் அமைந்துள்ள அன்னை வேளாங் கண்ணி மாதா ஆலயத் திருவிழாவிலும் கலந்துகொள்வதற்குச் சென்ற சிங்கள யாத்திரிகர்கள், அங்கு எழுந்த கடும் எதிர்ப்பை அடுத்து, அவர்கள் நிறைவேற்றச் சென்ற மதக் கடமைகளை, நிறை வேற்ற முடியாமல், திருப்பி அனுப்பப்பட்ட சம்பவம் எந்த வகை யிலும் ஏற்புடையது அல்ல.

அதற்குப் பின்னணியாகச் செயற்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த ஒருசில அரசியல் கட்சிகளின் குரோதமான செயற்பாடு குறித்து அங்குள்ள பலதரப்புகளும் கவலை தெரிவித்துள்ளன. இச் சம்பவத்தில் பன்னிரெண்டு யாத்திரிகர்கள் காயமடைந்தமை மற்றும் பஸ்கள் சேதமாக்கப்பட்டமை ஒவ்வாத, வேண்டாத செயற்பாடுகளே என்று தமிழகம், இலங்கையில் மத மற்றும் சமூக, அரசியல் பிரமுகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஈழத் தமிழர்களுக்குச் சேரவேண்டிய அரசியல் உரிமைகளை, கடந்த அறுபது வருடங்களுக்கு மேலாக மறுத்துவரும் இலங் கை யின் அரசியல் தலைவர்கள், காலத்துக்குக் காலம், தமது ஆதர வாளர்களான குண்டர்களை ஏவி தமிழ் மக்கள் மீது வன் செயல்களை நடத்தி அவர்களின் உயிர்களைக் குடித்தும், சொத்துக்களை அழித்துத் துவம்சம் செய்தும், சரித்திரத்தில் கறுப்புப் புள்ளிகளைத் தூவியும் அனைத்துலக அரங்கில் அவப்பெயர் தேடியுள்ளதும் இந்நாட்டின் சரித்திரமாகிவிட்டது.

இவற்றுக்கு வித்திட்டவர்கள், அவர்களின் சந்ததியினர் அது தமக்குக் கிடைத்த வெற்றியாகவும், தங்களின் காடைத்தனத்தின் பெறுபேறாகவும் கருதிக் களிப்படைய முடியாது. நாட்டின் இன ஒற்றுமையை வெட்டிக் கூறாக்கி, சிங்கள, தமிழ் இளைஞர்களிடம் வேற்றுமை மற்றும் வெறுப்புணர்வுகளை ஊற்றி வளர்த்து இனிமேல் ஒட்டிச் சீர்செய்ய முடியாத அளவுக்கு பெரிதாக்கியுள்ளனர்.

அதன் வேகத்தையும் வீச்சையும் ஆழ அகலமாக்க முனைகிறார்க ளேயன்றி ஆக்கபூர்வமாகச் செயற்பட்டுத் தமிழர்களுடன் சகோதரர்களாக வாழ்வதற்கு விரும்புகிறார்கள் இல்லை. தாங்கள் எப்போதும் மேலோங்கி ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற கசப்பான சூழ்நிலையையே தொடர்ந்து தக்கவைத்திருப்ப தற்கான பல வியூகங்களையும் இன சமத்துவத்தை அழித்துவிடும் செயற்பாடு களையும் திட்டமிட்டு வெளிப்படுத்துகிறார்கள்.

இத்தகைய பொல்லாத, ஒவ்வாத போக்குகளையும் தூண்டி விட்டு, தமிழ் மக்களின் சம உரிமைகளையும் மனித உரிமைக ளையும் சீரழித்து, சின்னாபின்னமாக்குவதில் நாளுக்குநாள், பொழுதுக்குப் பொழுது தமது தீவிரத்தை உச்சப்படிக்கு ஏற்றிச் செல்கின்றனர். இது அனைத்துலகத்துக்கும் தெரிந்த சங்கதியே.

அதனைத் தணிப்பதற்கு அல்லது பலம் பெறாமல் தடுப்பதற்கு, தமிழகத்துக்குச் சுற்றுலா செல்லும் சிங்களச் சகோதரர்கள் மீது இந்தியாவின், தமிழகத்தின் தேவாலயங்களைத் தரிசிக்க செல் லும் சாதாரண சிங்களச் சகோதரர்களைத் தாக்குவதாலும், திருப்பி அனுப்புவதாலும் தமிழக மக்களால் நல்லுறவையும் நட்புணர்வையும் நெருங்கியும் பார்க்க முடியாது.

தமிழக அரசியல் தலைவர்கள் கையில் எடுத்த இந்த 'ஆயுதம்' ஈழத்துத் தமிழ் மக்களை சிங்கள அரசுகள் மேன்மேலும் எல்லா வகைகளிலும் வடிவங்களிலும் நசுக்கிப் பொரியாக்குவதற்கே வழி செய்யும் என்பதனை தமிழக அரசியல் தலைவர்கள் மிகுந்த பொறுப்புடன் உணர்ந்து செயற்பட வேண்டியவர்கள்.

ஆனால் தலையைக் கீழே வைத்து, காலை மேலே உயர்த்தின் ஒவ்வாத, எதிர்மறையான பலாபலனையே தரும் என்று உணராமல், இலங்கையில் தமிழ் மக்களுக்கு 'பூமராங்' போன்ற விளைவுகளைத் தரும் என்பதனை உணரமுடியாது அரசியல் சிலம்படி நடத்துவதற்கு தமிழக அரசியல் தலைவர்கள் முனைந்திருப்பது, அவர்களின் திட்ட மிட்ட மத பேத வன் செயல்கள், எதிர்மறையான விளைவுக ளையே உண்டாக்கும்.

கௌதம புத்தரின் மத, சமூகக் கோட்பாடுகளுக்கு எதிராக கொழும்பு அரசு செயற்படுவதாக குற்றம் சுமத்தும் இந்திய (தமிழக) அரசியல்வாதிகள் -

கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்ற ஒவ்வாத செயற் பாடுகளை தாம் கையில் எடுப்பதால் எதனையும் சாதித்துவிட முடியாது என்பதனை, உணர்வதற்கு தமிழகத் தலைவர்கள் ஒருபோதும் தவறக்கூடாது. கூட்டிக் கழித்துப் பார்த்தால், இத்தகைய செயற் பாடுகள், தமிழ் இனத்துக்கு மொத்தத்தில், அனைத்துலக மட்டத்தி லான ஆதரவை ஈழத் தமிழர்களுக்கு தர மாட்டாது.

தமிழக அரசியல் கட்சிகள் மற்றும் தலைவர்கள், தமது பலமும் செயற்பாடுகளும் ஈழத் தமிழர்களுக்கு விசேட பலத்தைத் தரும் என்று எண்ணுவதில் தப்பு எதுவும் இல்லை, ஆனால், உரிய வழியில், முறைமைகளில் தமது அழுத்தத்தைப் பயன்படுத்து வதற்குத் திட்டமிட்டுச் செயற்பட வேண்டும். அதீத உணர்வுகளும் அவற்றின் பாற்பட்ட செயற்பாடுகளும் இவ்வேளையில் இன்றி யமையாதவை.

தமிழக அரசுடன் அல்லது அரசியல் தலைவர்களுடன் சண்டித்தனம் நடத்துவதாக நினைத்து - அவலை இடிப்பதாக நினைத்து - வெறும் உரலை இடிப்பதால் உய்த்துணரும் பலன் கள் வெறும் பூச்சியமாகவே இருக்கும். இதனை வேகம் மிக்க தமிழகத் தலைவர்கள் தமது மனங்களில் பதித்துச் செயற்பட் டால் மட்டுமே, ஈழத்தில் வாழும் தொப்புள் கொடி உறவுகளுக்கு உயர்ச்சியையும் உரிமைகளையும் பெற்றுத்தர இயலும். இல்லையேல் வெறுவாய் சப்பும் கிழவியின் நிலையே தேறும், சேரும்.

சகோதர உணர்வாலும், இன உணர்வாலும் ஈழத் தமிழர்களுக்குப் தம்மால் பெற்றுத் தரக்கூடிய நலன்களைப் பெற்றுத் தர, அவர்கள் இலங்கை அரசுடன் நட்புறவு நிலையில் நின்று அணுக வேண்டும். அம்பை எடுத்தேன் - தொடுத்தேன் - விடுத்தேன் என்ற புராணகாலச் செயற்பாடுகள் இந்த நவயுக அரசியல் அரங்கில் எதிர்பார்க்கும் ஆக்கபூர்வமான பலனைத் தரமாட்டாது. அரசியல் கன்னை பிரிவுப் பிறழ்வுகள் ஆக்கபூர்வமான பலன்களை, தடுத்துக் கெடுக்கும். ஈழத் தமிழ்த் தலைவர்கள் இதுவரை விட்ட இடைவெளி கள் மற்றும் தவறு கள் மீண்டும் துளிர்க்காது இருக்கத் தமிழக மக்களின் ஆணித்தரமான ஆதரவு, கைகொடுக்க வேண்டும். வெறும் சண்டித்தனம், உருப்படியான எதனையும் எமக்கு கிள்ளிக்கூடத் தரமாட்டாது.

# யாழ்.மாவட்டத்துக்கு மேலதிக மின்சாரம் வழங்க நடவடிக்கை

## மீளாய்வுக் கூட்டத்தில் பிரதம பொறியியலாளர் உறுதி

யாழ்ப்பாணம், செப்.8

யாழ். மாவட்ட மக்களுக்கு 44 மெகாவொட்ஸ் மின்சாரமே வழங் கப்படுகின்றது.

இன்னும் சில வாரங்களில் மேல திக 24 மெகாவொட்ஸ் மின்சாரம் கிடைக்கும். இதன்மூலம் மொத்தம் 2லட்சத்து 50 ஆயிரம் மக்கள் வரை யில் பயனடைவர் இவ்வாறு தெரிவித் துள்ளார் இலங்கை மின்சார சபை யின் பிரதம பொறியியலாளர்.

அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் யாழ். செயலகத்தில் இடம்பெற்ற அபிவி ருத்தி மீளாய்வுக் கூட்டத்தில் இலங்கை மின்சாரசபையின் பிரதம பொறியியலாளர் மேலும் தெரிவிக் கையில்;

நொதேர்ண் பவர் மூலம் 18.5 மெகாவொட்ஸ் மின்சாரமும் அக் கிரிக்கோ பவர் மின்சாரம் மூலம் 20 மெகாவொட்ஸ் மின்சாரமும் மின்சார சபைமூலம் 10மெகாவொட்ஸ் மின்சாரமுமே தற்போது கிடைத்து வருகின்றது.

தற்போது ஒரு லட்சத்து 30 ஆயிரம் பாவனையாளர்கள் பயன் பெறுகின்றனர்.

புதிதாக 24 மெகாவொட்ஸ் மின் சாரம் கிடைக்கவிருப்பதால் மேலும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு மின்சாரம் வழங்கலாம் என்றார்.

இதில் அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மேலும் தெரிவிக் கையில்;

மின்சார சபையின் நொதேண் பவர் வழங்கும் மின்சாரம் ஊடாக வெளியேறும் கழிவு ஒயில் சுன்னா கம் நிலத்தடி நீரை மாசுபடுத்து கிறது.

இதனால் மக்களுக்கு ஆபத்து அல்லது இறப்பு ஏற்படலாம்.

எனவே இதில் சம்பந்தப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபை, தேசிய நீர்வழங்கல் சபை என்பன வும் அங்கு பிரதிநிதித்துவப்படுத் தும் உள்ளூராட்சி சபையும் பொறுப்புக் கூறவேண்டும் என அவர்மேலும் தெரிவித்ததுடன் இதற்கான அறிக்கைகளை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்துக்கு முன்னர் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (16-50)

# யாழ்.தமிழ் சங்க பாரதிவிழா துர்க்கா மணி மண்டபத்தில்

## செவ்வாயன்று இரு அமர்வுகளாக

யாழ்ப்பாணம்,செப்.8

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடத்தும் பாரதிவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண் டபத்தில் நடைபெறவுள்ளது.

வண.கலாநிதி நீ. மரியசேவியர் அடிகளார் தலைமையில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடைபெறும் காலை அமர்வில் யாழ். தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப் பினர் லோ. துஷிகரன் வரவேற்புரை யையும், யாழ். தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு உறுப்பினர் சிவஸ்ரீ சோ. இ. பிர ணதார்த்தி ஹரக்குருக்கள் வாழ்த் துரையையும் நிகழ்த்துவார்கள். யாழ். தமிழ்ச் சங்க துணைத்தலைவர் சிவ.மகாலிங்கத்தின் நெறியாள் கையில் "எங்கள் பார்வையில் பாரதி" என்ற மாணவர் அரங்கம் இடம்பெற வுள்ளது

மேலும் "மகாகவி பாரதி " இறு வட்டு வெளியீட்டில் யாழ். நகர் வர்த்த கர் க.அருள்நேசன் முதற்பிரதியைப் பெறுவார். யாழ்.தமிழ்ச் சங்க துணைச் செயலர் ச. லலீசனின் வெளி யீட்டுரையும், தென்கிழக்கு பல் கலைக்கழக மொழி பண்பாட்டுத் துறை தலைவர் கலாநிதி றமீஸ் அப்துல்லாவின் சிறப்புரையும், தமிழ்ச் சங்கத்தின் மாணவ அங்கத் தவரிடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் முதல் மூன்று இடங்க ளைப் பெற்றுக் கொண்டவர்களில் "பாரதியின் பன்முக ஆளுமையும் புனைதிறனும்" என்னும் தலைப்பில் பேச்சும், யாழ்.தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு உறுப்பினர் கலாநிதி மனோன் மணி சண்முகதாஸின் நிகழ்ச்சி முன்னிலைப்படுத்தலில் நடை பெறவுள்ளது.

மாலை அரங்கு

யாழ்.தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலை மையில் பிற்பகல் 3.30 மணியில் இருந்து இரவு 8 மணி வரை நடை பெறும் மாலை அரங்கில் யாழ். தமிழ்ச் சங்கத் துணைச் செயலர் நாக.தமிழிந்திரன் வரவேற்புரை யைத் தொடர்ந்து சைவவித்தியா விருத்திச் சங்கத் தலைவர் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் பருத்தித்துறை பிரதேச செயலர் கவிஞர் த.ஜெயசீலன், யாழ்.தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் கவிஞர் கு.றஜீவன், தமிழாசிரியர் கவிஞர் த.நாகேஸ்வரன் ஆகியோர் பங்கேற்கும் "கனவு மெய்ப்பட வேண்டும்" பட்டிமன்றம் இடம் பெறும்.

மேலும் யாழ்.தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் கலாநிதி ஆறு.திரு முருகனின் "பாரதிகண்ட தெய்வீகம்" என்னும் தலைப்பில் சிறப்புரையைத் தொடர்ந்து "பாரதியின்புலமைத் துவம்" நூல் வெளியீடும் இடம்பெற வுள்ளது. இந்த நிகழ்வில் வடமாகாண கல்விப் பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலன் வெளி யீட்டுரையும், யாழ்.தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக் குழு உறுப்பினர் பேராசிரி யர் கி.விசாகரூபனின் அறிமுக உரையும் தொடர்ந்து யாழ்.நாட்டார் வழக்கியல் கழகத்தின் "பாஞ்சாலி சபதம்" இசை நாடகமும் இடம் பெறும். யாழ்.தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் இரா.செல்வவடி வேல் நன்றியுரை ஆற்றுவார். நிகழ்ச்சி முன்னிலைப்படுத்தலில் யாழ். தமிழ்ச் சங்கத்தின் பொருளா ளர் பேராசிரியர் தி.வேல்நம்பி ஈடு படுவார்

(எ)

# இ.போ.ச. பணியாளர்களுக்கு கொடுப்பனவுகள் அறிமுகம்

யாழ்ப்பாணம், செப்.8

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய அலுவல கத்தின் கீழ் பணியாற்றும் பணியா ளர்களுக்கான மாதாந்த கொடுப் பனவுகள் தற்போது முழுமையாக சீராக்கப்பட்டுள்ளதாக வடமா காணப் பிரதித் தொழில் ஆணை யாளர் கே. கனகேஸ்வரன் தெரி வித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது போக்குவரத்துச் சபை பணியாளர்களுக்கான கடந்த மார்ச் மாதத்துக்கான கொடுப்பனவு முழுமையாக வழங்கப்பட்டுள்ளது.

இதனைவிட ஜூலை மாதத் துக்கான கொடுப்பனவு வழங்கப் பட்டுள்ளதோடு ஓகஸ்ட் மாதத் துக்கான கொடுப்பனவு எதிர்வரும் 10 திகதிக்கு முன்னர் வழங்கப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கீழ் செயற்படும் சகல டிப்போக்களிலும் பணியாற்றும் பணியாளர்களுக்கு புதிய நடை முறையின் கீழ் மாதத்தில் ஒரே நாளில் மாதாந்த கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

அண்மைக்காலத்தில் பணியா ளர்களுக்கான கொடுப்பனவுகள் சீராக வழங்கப்படாமை குறித்து முறைபாடுகள் தொழில் திணைக் களத்துக்கு அதிகம் கிடைத்தன .

தற்போது அந்த நிலை சீராக்கப் பட்டு மாதாந்தக் கொடுப்பனவுகள் உரிய நேரத்தில் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(த- 17)

## வினாத்தாள் வங்கி உருவாக்கத் திட்டம்

இலங்கை பரீட்சைத் திணைக் களம் வினாத்தாள் வங்கி ஒன்றை விரைவில் உருவாக்கவுள்ளது என்று பரீட்சைகள் திணைக்கள ஆணை யாளர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச தரத்தில் அமையப் பெறும் இந்த வினாத்தாள் வங்கியா னது ஒவ்வொரு பாடத்துக்கும் ஆயி ரம்வரையான வினாத்தாள்களை கொண்டிருக்கும். இந்த வினாத்தாள் வங்கியிலிருந்தே தேசிய ரீதியிலான பரீட்சைகளுக்கான மாதிரி வினாக்கள் தெரிவு செய்யப்படவுள்ளன.(ம-8)

# 'ஈழத்து குறும்பட விழா'

யாழ்ப்பாணம், செப்.8

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத் தில் 'ஈழத்து குறும்பட விழா' இம்மாத இறுதியில் நடத்தப்படவுள்ளதாக பணிப்பாளர் தே.தேவானந் அறி வித்துள்ளார்.

இந்த நிகழ்வில் 2010ஆம் ஆண் டுக்கு பின்னர் ஈழத்தில் தயாரிக் கப்பட்ட தமிழ் மொழிமூலமான குறும்படங்களைத் திரையிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே திரைப்படங்கள் தொடர் பான கலந்துரையாடல்கள், கருத் துப் பகிர்வுகள் மற்றும் குறும்படத் திரையிடல் என்பன இதில் இடம் பெறவுள்ளதால் ஆர்வமுள்ளவர்கள் ஊடாக வளங்கள் பயிற்சி நிலையத் துடன் தொடர்புகொண்டு பதிவு களை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

இரு தினங்கள் நடைபெறவுள்ள இந்த குறும்பட விழா தினமும் முற் பகல் 9 மணிமுதல் மாலை 5 மணி வரையும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறிச்சிக்கட்டி மக்கள் அவர்களின் சொந்த இடத்தில் மீள்குடியமர்த்தப்படுவர்

## கலந்துரையாடலின்போது அதிகாரிகள் உறுதிமொழி

மன்னார்,செப்.8

குடிசைகள் எரியூட்டப்பட்டதால் நிர்க்கதியான நிலையிலுள்ள மறிச்சிக்கட்டி மரைக்கார் கிராம மக்கள் அவர்களின் சொந்த இடத்திலேயே குடியமர்த்தப்படுவரென மரைக்கார் நகர் பள்ளிவாசலில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அதிகாரிகள் உறுதிமொழி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் முசலி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மறிச்சிக்கட்டி மரைக்கார் கிராமத்தில் ஏற்பட்ட இடரைத் தொடர்ந்து அவசர உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை மரைக்கார் நகர் பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இதன்போது மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர், முசலிப் பிரதேச செயலர், வன விலங்குத் திணைக்கள அதிகாரிகள், இராணுவ, கடற்படை, பொலிஸ் உயரதிகாரிகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மரைக்கார் நகர் கிராம மக்கள் தாம் குடியமர்ந்துள்ள காணி தங்களுடையது என்பதை உறுதிப்படுத்துவதற்கான காணி உறுதிப்பத்திரங்களைச் சமர்ப்பித்தனர்.

இதன்போது குறித்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்ட நிலையில் குறித்த கிராம மக்களை குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்வதாக அதிகாரிகள் உறுதி அளித்துள்ளனர்.

இந்த நிலையில் மரைக்கார் நகர் கிராமத்தில் உள்ள மக்களின் ஆயிரத்து 400 ஏக்கர் பயிர் நிலத்தை கடற்படையினர் கைப்பற்றி அதனை அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தியுள்ளனர் என்றும் குறித்த காணிக்கான ஆவணங்கள் அனைத்தும் தம்மிடம் உள்ளன என்றும் அந்த மக்கள் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

கடற்படையினர் தம் வசப்படுத்தி வைத்துள்ள குறித்த காணியினுள் தமது மையவாடியும் காணப்படுவதாகவும் இந்த மக்கள் மேலும் தெரிவித்தனர்.

குறித்த முஸ்லிம் மையவாடி கடற்படையினரின் பாதுகாப்பில் உள்ளமையால் மறிச்சிக்கட்டியில் மரணிப்பவர்களை அடக்கம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கிராம மக்கள் தெரிவித்தனர்.

அண்மையில் மறிச்சிக்கட்டிப் பகுதியில் மூன்று பேர் மரணமடைந்துள்ளனர். அவர்களுடைய உடல்களைக் கூட அடக்கம் செய்ய முடியாத நிலையில் புத்தளத்துக்குக் கொண்டு சென்று அடக்கம் செய்துள்ளதாகவும் அந்த மக்கள் தெரிவித்துள்ளனர். (க-12)

## தென்பகுதிச் சுற்றுலாப் பயணிகளால் புதுக்குடியிருப்பு வாசிகள் சிரமத்தில்

### கேள்வி ஏதுமின்றி வீடுகளுக்குள் புகும் நிலை

முல்லைத்தீவு,செப்.8

உரிய சுகாதார மற்றும் தங்குமிட வசதிகள் இல்லாததால் தென்பகுதிச் சுற்றுலாப் பயணிகள் புதுக்குடியிருப்பிலுள்ள தனியார் வீடுகளை நாடி அங்குள்ளவர்களுக்குச் சிரமங்களை விளைவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளின் தலைவர் பிரபாகரன் இறுதியாகத் தங்கியிருந்ததாகக் கூறப்படும் வீடு தென்பகுதி மக்களின் முக்கிய காட்சியகமாகத் தற்போது மாறிக்காணப்படுகின்றது.

இங்கு தினமும் சுமார் 20 இற்கும் மேற்பட்ட வாகனங்களில் வரும் மக்கள் இந்த வீட்டைப் பார்வையிட்டுச் செல்கின்றனர். ஆனால் இவர்களுக்கான தங்குமிட வசதிகளோ அல்லது மலசல கூட வசதிகளோ இல்லாத நிலையே காணப்படுகின்றது.

இதனால் இங்கு வருபவர்கள் இங்குள்ள வீடுகளுக்குள்ளும், மலசலகூடங்களுக்குள்ளும் புகுந்து விடுகின்றனர். சிலர் வீடுகளில் தங்கவும் ஆரம்பித்து விடுகின்றனர்.

இதனால் வீட்டு உரிமையாளர்கள் சங்கடங்களுக்கும், சிரமங்களுக்கும் ஆளாகி வருகின்றனர்.

தாம் ஏதாவது கூறினால் என்ன நிகழுமோ என்ற அச்சமும் இந்த மக்களிடையே நிலவுவதையும் காண முடிகின்றது. (க-500)

## இயங்காத நிலையில் மூன்று பாடசாலைகள்

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள மூன்று பாடசாலைகள் இயங்காத நிலையில் தொடர்ந்து மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைச் செயலர் எஸ்.சிவப்பிரகாசம் தகவல் தெரிவிக்கையில்; இந்தப் பிரதேசத்தில் மக்கள் மீள்குடியமர்ந்த பின்னர் 10 பாடசாலைகளுக்கு இயங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மூன்று பாடசாலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன.

அல்லிப்பளை அ.த.க., வேம்பொடுகோணி அ.த.க., முகமாலை றோ.க.த.க. பாடசாலை என்பனவே மூடிய நிலையில் காணப்படுகின்றன.

இதேவேளை கோயில் வயல் அ.த.க, இயக்கச்சி அ.த.க, முகாவில் அ.த.க, மாசார் அ.த.க., பேராலை அ.த.க., சோரன்பற்று கணேச வித்தியாலயம், தர்மக்கேணி அ.த.க., பளை மத்தியகல்லூரி, பளைறோகத.க. பாடசாலை, கிராஞ்சி அ.த.க.பாடசாலை என்பனவே இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (க-14)

# 'மறக்க முடியாத' முள்ளிவாய்க்காலில் மீண்டும் ஆரம்பமானது பாடசாலை

## புதுக்குடியிருப்பு றோ.க.த.கவும் இயங்குகிறது

புதுக்குடியிருப்பு,செப்.8

கடந்த காலப் போர் அழிவுகளால் பாதிக்கப்பட்டு மூடப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த புதுக்குடியிருப்பு றோ.க.த.க. வித்தியாலயம், முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட வித்தியாலயம் என்பன மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இறுதிப் போரின் போது இடம்பெயர்ந்து மனிக்பாம் நலன்புரி நிலையங்கள் மற்றும் வேறு பாடசாலைகளில் பல இடர்களுக்கு மத்தியில் கல்வியைக் கற்று வந்த இவ்விரு பாடசாலைகளையும் சேர்ந்த மாணவர்கள் தமது சொந்தப் பாடசாலைகளில் ஆர்வத்துடன் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்விரு பாடசாலைகளிலும் புதுக்குடியிருப்புக் கோட்டத்தைச் சேர்ந்த புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் கடந்த 3 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். வரதராஜமூர்த்தி, கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி முனீஸ்வரன் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

தரம் 1 தொடக்கம் 10 வரையான வகுப்புக்களைச் சேர்ந்த சுமார் 100 மாணவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். அதிபர் எஸ்.அன்ரன் குலதாஸ் தலைமையில் 8 ஆசிரியர்கள் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்டனர்.

இதேவேளை, முள்ளிவாய்க்கால் கனிஷ்ட வித்தியாலயம் கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வித்தியாலய அதிபர் கே.மாசிலாமணி தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் முல்லை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம். இராஜ்குமார், கரைதுறைப்பற்றுக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். செகசோதிநாதன், முள்ளிவாய்க்கால் மேற்கு கிராம சேவகர் எஸ். அருணோதயம், பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டு பாடசாலையை ஆரம்பித்து வைத்தனர்.

இந்தப் பாடசாலைக்கு 47 மாணவர்கள் வருகை தந்திருந்தனர். இவர்களில் சுமார் 35 மாணவர்கள் 15 கிலோ மீற்றருக்கு அப்பால் அமைந்துள்ள திப்பிலி நலன்புரி நிலையத்திலிருந்து தமது சொந்தப் பாடசாலையில் கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது. (க-400)

# வயது குறைந்தவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்தோருக்கு தண்டம்

## மொத்தமாக ஒரு லட்சத்து 35 ஆயிரம் செலுத்தினர்

வவுனியா,செப்.8

வயது குறைந்தவர்களுக்குச் சிகரெட் விற்பனை செய்த வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் பலர் ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபாவைத் தண்டமாகச் செலுத்தினர்.

21 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்ய முடியாது என்ற சட்டத்தை மீறி அவர்களுக்குச் சிகரெட் விற்பனை செய்த 45 வர்த்தகர்களே இவ்வாறு தண்டத்தை வவுனியா நீதிமன்றில் செலுத்தியுள்ளனர்.

**21 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 45 வர்த்தகர்களே இவ்வாறு தண்டத்தை வவுனியா நீதிமன்றில் செலுத்தியுள்ளனர்.**

வவுனியா மாவட்டத்திலுள்ள கூமாங்குளம், வவுனியா நகரப்பகுதி, ஓமந்தை, நெடுங்கேணி, குருமன்காடு மற்றும் பட்டாணிச்சூர் ஆகிய பகுதிகளில் வவுனியா மதுவரித் திணைக்கள அதிகாரிகள் திடீரென சோதனை மேற்கொண்ட போது 45 வர்த்தகர்கள் கையும் மெய்யுமாக வகையாக மாட்டிக் கொண்டனர்.

இவர்களுக்கு எதிராக வவுனியா மாவட்ட மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி பி.ரகுநாதனால் வவுனியா மாவட்ட நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

குற்றவாளிகள் அனைவரும் தமது குற்றங்களை ஒப்புக்கொண்டதை அடுத்து அவர்கள் அனைவரையும் தலா 3 ஆயிரம் ரூபாவைத் தண்டமாகச் செலுத்துமாறு வவுனியா மாவட்ட நீதிவான் அலெக்ஸ் ராஜா உத்தரவிட்டார்.

இவர்களில் 25 பேருக்கு எதிரான வழக்குகள் கடந்த மாதம் 29 ஆம் திகதியும் மிகுதி 20 பேருக்கு எதிரான வழக்குகள் கடந்த 4 ஆம் திகதியும் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-400)

## பருகுவோம் பனங்கழிச் 'சோடா'...



ஒட்டுசுட்டான் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த பணியாளர்கள் பனங்கழியிலிருந்து சோடா பானம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். (க-500)

# ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதியை திரும்பிப் பார்ப்பார் எவரும் இல்லையா?

## வாகனங்களில் காற்றுப் போனால் அதோகதி

வவுனியா,செப்.8

ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதி நீண்டகாலமாக திருத்தப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் அவ்வீதியால் பயணம் செய்வோர் விபத்துக்களை எதிர்கொள்ளும் நிலை காணப்படுகின்றது.

வவுனியா, நெடுங்கேணி மற்றும் ஒட்டுசுட்டான் போன்ற பகுதிகளிலிருந்து புதுக்குடியிருப்புக்குச் செல்லும் பிரதான போக்குவரத்து மார்க்கம் ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதியாக விளங்குகின்றது.

சுமார் 15 கிலோ மீற்றர் நீளமுடைய இந்த வீதியில் எல்லா இடங்களிலும் குழிகள் காணப்படுவதுடன் போக்குவரத்து மேற்கொள்ள முடியாதவாறு மேடு பள்ளமாகவும் காட்சியளிக்கின்றது.

போர் இடம்பெற்ற காலப்பகுதியில் விடுதலைப் புலிகளின் பிரதானபோக்குவரத்து மார்க்கமாக இந்த வீதி காணப்பட்டதால் அவர்களால் கிரவல் மண் போடப்பட்டுச் செப்பனிடப்பட்டிருந்தது. இன்று அவை உருக்குலைந்து காணப்படுகின்றன. இதனூடாகத் தனியார் பஸ்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், வியாபாரிகள், சுற்றுலா மேற்கொள்வோர் எனப் பலரும் பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

வெட்ட வெளிகள் மிகுந்ததாகக் காணப்படும் இதில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கடைகள் எவையும் இல்லை. சில வேளைகளில் சக்கரங்களில் காற்றுப் போனால் பயணம் செய்பவர்களின் கதி அதோ கதிதான்.

கடந்த 30 வருடங்களுக்கும் மேலாகத் தாரையே காணாத நிலையில் இந்த வீதியுள்ளது. இன்று சிறு சிறு வீதிகள் எல்லாம் புது மெருகூட்டப்பட்டு காப்பெற் வீதிகளாக மாறிவரும் நிலையில் போக்குவரத்து மிகுந்த இவ்வீதி சம்பந்தப்பட்ட தரப்பினரின் கண்களில் படவில்லையா? என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

போரால் பாதிக்கப்பட்டது புதுக்குடியிருப்புப் பகுதியும் மக்களும் அல்ல. அவர்கள் பயணம் செய்யும் வீதியும் பாதிக்கப்பட்டு நலிவடைந்துள்ளது என அவ்வீதியால் பயணம் செய்த பெரியவர் ஒருவர் கவலையுடன் தெரிவித்தார். (க-410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரு. நகரில் புடைவை விற்பனை செய்ய இந்திய வியாபாரிகளுக்குத் தடை விதிப்பு

### பருத்தித்துறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

**சுன்னாகம் பிரதேசத்தில் நகரில், பொது இடங்களில் மற்றும் வீட்டுக்கு வீடு இந்திய வியாபாரிகள் புடைவை வியாபாரம் செய்வதை அங்குள்ள பிரதேசசபை தடைசெய்துள்ளது.**

வடமராட்சி,செப்.8

பருத்தித்துறை நகரில் இந்தியப் புடைவை வியாபாரிகள் புடைவை வியாபாரம் செய்ய தடைவிதிக்கப் பட்டுள்ளது. இதற்கான தீர்மானம் பருத்தித்துறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப் பட்டுள்ளது.

தற்காலிக விசாவுடன் யாழ்ப்பாணத்தில் வந்து தங்கியுள்ள நடமாடும் இந்தியப் புடைவை வியாபாரிகளால் தமது வியாபாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்று பருத்தித்துறை நகரப் புடைவைக் கடை உரிமையாளர்கள் சார்பாக அவர்களில் ஒருவர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

நகரில் தமது கடைகளுக்கு அருகில் புடைவைகளைப் போட்டு இந்திய வியாபாரிகள் சிலர் வியாபாரத்தில் ஈடுபட்ட போது அவர்களை பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தோம். வியாபாரத்தை தாம் தடைசெய்ய முடியாது எனப் பொலிஸார் தெரிவித்து அவர்களை விடுவித்தனர்.

சுன்னாகம் பிரதேசத்தில் நகரில், பொது இடங்களில் மற்றும் வீட்டுக்கு வீடு இந்திய வியாபாரிகள் புடைவை வியாபாரம் செய்வதை அங்குள்ள பிரதேசசபை தடைசெய்துள்ளது. இது தொடர்பாக நாங்கள் பருத்தித்துறை நகரசபைக்கும் தெரிவித்தும் எவ்வித பயனும் கிட்டவில்லை.

நகரப் பகுதியில் எமது வியாபாரம் தடைப்படாமல் இருக்க இந்திய புடைவை வியாபாரிகளின் புடைவை வியாபாரத்துக்கு தடை விதிக்க வேண்டும் என நகர புடைவை வியாபாரி வலியுறுத்திக் கூறினார்.

புடைவை வியாபாரியின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு இந்திய வியாபாரிகள் புடைவை வியாபாரம் செய்வதை பொலிஸாரும், பருத்தித்துறை நகரசபையும் இணைந்து தடைசெய்ய வேண்டும் என இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-8)

## வல்வை தீருவில் குளத்தை ஆழப்படுத்த நடவடிக்கை

வடமராட்சி, செப்.8

வல்வெட்டித்துறை தீருவில் குளத்தை ஆழப் படுத்தி, அதிலிருந்து பெறப் படும் மண்ணைக் கொண்டு தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை வல்வெட்டித்துறை நகரசபை மேற்கொண்டுள்ளது.

சபை உறுப்பினர் ம.மயூரனின் கோரிக்கையின் அடிப்படையில் இதற்கென சபை நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தீருவில்குளம், விளையாட்டு மைதானத்தின் புனரமைப்புக்கான மேலதிக வேலைகளை மக்கள் பங்களிப்புடன் உலக உணவுத் திட்டத்தின் கீழ் 4 ஆயிரத்து 200 மனித மணித்தியாலங்கள் என்ற அடிப்படையில் மேற்கொள்ளவுள்ளதாக நகரசபைத் தலைவர் ந. அனந்தராஜ் தெரிவித்தார்.

மக்கள் பங்களிப்புக்கான உலக உணவுத் திட்டத்தின் கொடுப்பனவாக சுமார் 9 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் புனரமைப்பு வேலைத் திட்டத்தை தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழகம் பொறுப்பேற்றுள்ளது.

மழைக்காலத்துக்கு முன்னர் இவ் வேலை விரைவாகச் செய்து முடிக்கப் படும் என கழகத்தின் செயலாளர் சு. வெற்றிவடிவேல் தெரிவித்தார். (ம-8)

## இரத்ததானம் செய்யக் கோரிக்கை

யாழ். போதனா வைத்திய சாலை இரத்தவங்கிப் பிரிவினர் ஒழுங்கு செய்துள்ள நடமாடும் இரத்ததான முகாமில் பிரதேச இளைஞர் யுவதிகள் கலந்துகொண்டு இரத்ததானம் செய்யுமாறு இரத்தவங்கிப் பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை நான்கு இடங்களில் இரத்த தான முகாம் நடைபெறவுள்ளது. பருத்தித்துறை சென். தோமையார் தேவாலயம், யாழ். கொஞ்சேஞ்சி மாதா இளைஞர் கழகம் ஆகிய இடங்களிலும் கோண்டாவில் பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள முகாம் கோண்டாவில் இந்து மகாவித்தியாலத்திலும் இடம்பெறவுள்ளது.

இந்த மூன்று இடங்களிலும் காலை 9 மணிக்கு இரத்த தான முகாம் இடம்பெறும். பிற்பகல் 2.30 மணிக்கு சித்தன்கேணி இளைஞர் சன சமூக நிலையத்தில் இரத்த தான முகாம் இடம்பெறவுள்ளது என்று இரத்தவங்கிப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ம-4)



கவிஞர் சித்திரா சின்னராஜாவின் 'வல்லைவெளி' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா அல்வாய் ஸ்ரீ லங்கா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றபோது யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி த.கலாமணியிடமிருந்து யாழ்ப்பாணம் ஐ.ஓ.எம்.நிறுவனப் பொறுப்பதிகாரி யூராசன் ஜெனராஜ் முதற் பிரதியைப் பெற்றுக் கொள்கிறார். எழுத்தாளர் தெணியான், நூலாசிரியர் சித்திரா சின்னராஜன் ஆகியோர் அருகில் உள்ளனர். (ம-8)

## விதை விற்பனையாளர்களை பதிவு செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.8

யாழ்.மாவட்டத்தில் உள்ள விதை விற்பனையாளர்கள் அனைவரையும் விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையில் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை பொறுப்பதிகாரி அ.றமணிதரன் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

இதுவரை பதிவு செய்யாதவர்கள் தமக்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறும் ஏற்கனவே பதிவை மேற்கொண்டுள்ளவர்கள் அவற்றைப் புதுப்பித்துக் கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார்.

விதை அல்லது நடுகைப் பொருள்களை இறக்குமதி செய்பவர்கள், வர்த்தக நோக்கங்களுக்காக விதை அல்லது நடுகைப் பொருள்களை உற்பத்தி செய்பவர்கள், விதை அல்லது நடுகைப் பொருள்களை பகிர்ந்தளிப்பவர்கள், விதை பதனிடுபவர்கள், பொதியிடல் அல்லது மீளப் பொதியிடல் செய்பவர்கள், விதை விற்பனை முகவர்கள், சில்லறை அல்லது மொத்த விதை வியாபாரிகள், நாற்று மேடையாளர்கள், விதை அல்லது நடுகைப் பொருள் விற்பனையாளர்கள், உள்நாட்டுச் சந்தைக்கு விதை அல்லது நடுகைப் பொருள்களை விநியோகிப்பவர்கள் ஆகியோர் இவ்வாறு பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பதிவுகளை மேற்கொள்ளாமல் விதை உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான தகவல்களையும் விண்ணப்பப் படிவங்களையும் விவசாயப் போதனாசிரியரிடம் அல்லது பலாலி வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள பிராந்திய விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-17)

## வறுமை ஒழிப்புத்திட்டத்தில் புனரமைப்பு வேலைகள்

யாழ்ப்பாணம் செப் .8

அல்லைப்பிட்டியில் கடல் நீர் தடுப்பு அணை , ஐயனார் வீதி புனரமைப்பு குறித்த வேலைத்திட்டங்கள் வறுமை ஒழிப்புத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

ஜப்பானிய வறுமை குறைப்பு வேலைத்திட்டம் என்ற இந்தத் திட்டத்தின் மூலம் இடம்பெறும்.

இதில் தடுப்பு அணைக்கான வேலைகள் முடிவடைந்துள்ளன என்றும் வீதிப் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் வேலணைப் பிரதேச செயலர் தெரிவித்தார். (ம-7)

## கடும் இருளில் மூழ்கியது முற்றவெளிப் பிரதேசம்

### மின் விளக்குகள் ஒளிரவில்லை

யாழ்ப்பாணம், செப். 8

யாழ். முற்றவெளிப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் ஒளிராமையால் இந்தப் பகுதியினூடாகப் பயணிக்கும் பொதுமக்கள், வாகனங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

யாழ். முனீஸ்வரன் கோயிலடி, புல்லுக்குளம், வீரசிங்கம் மண்டபம், யாழ். தனியார் பஸ் தரிப்பு நிலையம், கொட்டடி மீன் சந்தை ஆகிய பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குகள் பழுதடைந்துள்ளமையால் அவை இரவில் ஒளிர்வதில்லை.

தனியார் பஸ் தரிப்பு நிலையத்தில் உள்ள சில மின் விளக்குகள் மங்கிய நிலையில் ஒளிர்கின்றன.

இதனால் அங்கு வரும் பயணிகள் இரவில் போதிய வெளிச்சமின்றிப் பெரும் சிரமப்படுகின்றனர்.

இப்பகுதிகளில் வீதி விளக்குகள் ஒளிராமையைப் பயன்படுத்தி விசமிகள் சிலரின் அட்டகாசமும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த- 17)

## விதை நெல் சுத்திகரிக்கும் சேவை திருநெல்வேலியில்



யாழ்ப்பாணம், செப்.8

யாழ். குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச்சங்கம் விவசாயிகளின் வசதி கருதி விதை நெல் சுத்திகரிக்கும் சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

திருநெல்வேலியில் உள்ள விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் இதற்கான சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் விதை நெல்லை சுத்திகரித்து விவசாயிகளுக்கு விநியோகிக்கும் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெரும்போக நெல் செய்கைக்கு முன்னர் விவசாயிகள் தம்மிடம் இருக்கும் விதை நெல்லை இந்த சுத்திகரிப்பு இயந்திரத்தின் மூலம் சுத்திகரித்துப் பின்னர் செய்கைக்குப் பயன்படுத்துவதன் மூலம் அதிக பயனைப் பெற முடியும் என்று சங்கத்தின் பொது முகாமையாளர் ரி. சிவயோகநாதன் தெரிவித்தார்.

விதை நெல்லில் காணப்படும் களை விதைகள், பூச்சி பீடைகள், சேதமடைந்த விதைகள், கல், மணல் என்பன இந்தச் சுத்திகரிப்பு இயந்திரத்தின் மூலம் சிறந்த முறையில் நீக்கப் படும்.

இந்த சுத்திகரிப்பு இயந்திரத்தின் மூலம் தமது விதை நெல்லை துப்புரவு செய்ய விரும்பும் விவசாயிகள் இந்த சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (த- 17)

## துறைமுக வீதி புனரமைப்பின்போது கல்லூரி வீதியூடாக போக்குவரத்து

வடமராட்சி,செப்.8

பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து ஓராங்கட்டைச் சந்தி வரையான நகரப் பகுதியில் வீதி அகலிப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் அப்பாதை ஊடான போக்குவரத்து கல்லூரி வீதி ஊடாக மாற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை- யாழ்ப்பாணம் பிரதான வீதி அகலிப்பு வேலைத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை துறைமுகம் தொடக்கம் ஓராங்கட்டைச் சந்தி வரை வீதி அகலிப்பு வேலைகளை மேற்கொள்ள வீதியின் இரு மருங்கிலும் காணிகள் சுவீகரிக்கும் பணிகள் 90 வீதம் பூர்த்தியடைந்துள்ளன.

தற்போது இந்த வீதிக் கரையோரத்தில் இருந்த மின்கம்பங்கள் பின் நகர்த்தப்படுகின்றன.

இதனையடுத்து பருத்தித்துறை துறைமுகம் தொடக்கம் ஓராங்கட்டைச் சந்தி வரையிலான வீதி அகலிப்பு வேலைத்திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும். இதன் போது இப்பாதை மூடப்பட்டு போக்குவரத்துகள் யாவும் நீதிமன்ற வீதி, தம்பசிட்டி வீதி, ஓராங்கட்டைச்சந்தி ஊடான மாற்றுப் பாதையில் நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பருத்தித்துறைப் பிரதேசசெயலர் இ.த. ஜெயசீலன் தெரிவித்தார். (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சியை கொண்டுவர சுவாமி கோரிக்கை


## சிங்களவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கத் தவறியதற்காக

டில்லி, செப். 8

தமிழகம் வரும் சிங்கள வர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க தமிழக அரசு தவறி னால் தமிழகத்தில் ஜனாதி பதி ஆட்சியை நடைமுறைப் படுத்த மத்திய அரசு தயங் கக்கூடாது என்று ஜனதா கட்சித் தலைவர் சுப்பிர மணியசுவாமி வலியுறுத் தியுள்ளார்.

தமிழகம் வரும் சிங்கள வர்களுக்கு பாதுகாப்பு வழங்கு வதில் முதல்வருக்கு தோல்வி ஏற்படுமானால் தமிழ்நாட் டில் ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டுவர மத்திய அரசு தயங்கக் கூடாது என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன் தமிழ்நாட்டுக்கு வந்த சிங்கள யாத்திரிகர்கள் அடித் துத் திருப்பி அனுப்பப்பட் டனர். இது குறித்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை



அவர் டில்லியில் செய்தி யாளர்களிடம் பேசுகையில் தெரிவித்ததாவது:-

தமிழகம் வரும் சிங்கள வர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு மத்திய அரசு உத்தரவிட வேண் டும். இலங்கை அரசுடனான இந்திய அரசின் வெளியு றவுக் கொள்கைகளில் தமி ழக அரசு தலையிடுவதை நிறுத்த வேண்டும்.

முதலமைச்சர் ஜெயலலி தாவுக்கு இதைப் பின்பற்று வதில் தோல்வி ஏற்படும் பட்சத்தில் தமிழ்நாட்டில் ஜனாதிபதி ஆட்சியை நடை முறைப்படுத்தவும் மத்திய அரசு தயங்கக் கூடாது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மத்தியப் பிரதேச மாநிலம் வருவதற்கு ம.தி.மு.க. தலைவர் வைகோ கடும் எதிர்ப்புத் தெரிவித்துள் ளார். ராஜபக்ஷ வருகையின் போது ஆர்ப்பாட்டம் நடத்தப் போவ தாகவும் கூறியுள்ளார். மத்தியப் பிரதேசத்தில் வைகோ ஆர்ப்பாட்டம் நடத் தினால் அவரை மாநில அரசு உடனடியாகக் கைது செய்ய வேண்டும்-என்றார்.

## அமெரிக்கப் பத்திரிகை மம்தாவுக்கு புகழாரம்

டில்லி, செப். 8

உலகின் வர்த்தகங்கள் பற்றிய செய்திகளை வெளி யிடும் அமெரிக்க பத்திரி கையான ப்ளும்பெர்கில் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி இடம் பெற் றுள்ளார்.

மம்தா பானர்ஜி பற்றி ப்ளும்பெர்க் பத்திரிகையில் கூறியிருப்பதாவது:-

34 வருட கம்யூனிஸ்ட் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து மேற்கு வங்க மாநில ஆட்சியைப் பிடித்த மம்தா பானர்ஜி நாட்டை ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்ட ணியின் ஓர் அங்கமாகத் திகழ்ந்து வருகிறார்.

வெளிநாட்டு சில்லறை விற்பனையாளர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஐக் கிய முற்போக்குக் கூட்டணி பிரதமர் மன்மோகன் சிங் கொண்டுவந்த பொருளாதார சீர்திருத்த அறிக்கையைத் தடுத்து நிறுத்தினார்.

இந்த செய்கையின் மூலம் உலக வர்த்தக அளவில் ஒரு சாதாரண மனிதனின் பிரச்சி



னையை வெற்றிகரமாக கையிலெடுத்து அதை நிரூ பித்தும் காட்டியிருக்கிறார். கொள்கைகள் உருவாக்குவ தில் மம்தா சிறந்து விளங் குகிறார் என்று அதில் குறிப் பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க தொழில் அதிபர் வாரென் பப்பட்டு, பேஸ் புக் நிறுவுநர் மார்க் சுக்கர்பெர்க், ஹூண்டாய் தலைவர் சங் மாங் கூ ஆகி யோர் சிறந்த கொள்கை களை உருவாக்குவதில் முன் னிலை பெறுகின்றனர் என் பது குறிப்பிடத்தக்கது. (வ)

## மேகாலயாவில் மிதமான நில அதிர்வு

மேகாலயா மாநிலத்தில் நேற்று முன்தினம் இரவு 12 மணியளவில் மிதமான நில அதிர்வு ஏற்பட்டுள்ளதாக புவியியல் நிபுணர்கள் தெரி வித்துள்ளனர்.

மேகாலயா மாநிலத்தின் காஸி மலைப்பகுதியில் இந்த நில அதிர்வு ஏற்பட் டது. ரிச்டர் அளவு கோலில் நிலநடுக்கத்தின் அளவு 4.2 ஆக பதிவானதாகவும் நிபு ணர்கள் குறிப்பிட்டனர்.

இவ்வருடத்தின் தொடக் கம் முதல் வடகிழக்கு மாநி லங்களில் அவ்வப்போது நில அதிர்வுகள் ஏற்பட்டு வரு வது குறிப்பிடத்தக்கது.



ஹிமாச்சல பிரதேச மாநிலம் தர்மசாலாவில் நடைபெற்ற வழிபாட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முதியவருடன் உரையாடும் புத்த மதத் தலைவர் தலாய் லாமா.

## மும்பை அடுக்குமாடியில் தீ

மும்பை பாந்த்ராகுர்லா பகுதியில் உள்ள 15 மாடி வணிக வளாகக் கட்டடத்தின் 12 ஆவது மாடியில் பயங்கர தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

இங்கு மும்பை மாநகர அலுவலகம் இயங்கி வருவ தால் விபத்தா, நாசவேலையா என்கிற சந்தேகமும் எழுந் திருக்கிறது.


மும்பை மாநகர நெருக் கடியைச் சமாளிக்க விமான நிலையத்திலிருந்து சுமார் 6 கிலோ மீற்றர் தொலைவில் புதிய அடுக்கு மாடிக் கட்ட டங்களுடன் விரிவாக்கம் செய்யப்பட்ட நகரம் பாந்த் ராகுர்லா பகுதி. இங்கு உள்ள 15 மாடிக்கட்டடத்தின் 12 ஆவது மாடியில் உள்ள மும்பை மாநகர விரிவாக்கத் திட்டப் பணிகள் நடைபெ றும் அலுவலகம் உள்ளதாகத் தெரிகிறது. தற்போது இந்த கட்டடத்தில்தான் பயங்கர தீவிபத்து ஏற்பட் டுள்ளது. 10 தீயணைப்பு வாகனங்க ளுடன் தீயணைப்புப் படை யினர் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

## கலாமுக்கு விசேட விருது

கேரள மாநிலம் கொச்சி யில் நேற்று முன்தினம் நடை பெற்ற விழாவில், முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே.அப் துல் கலாமுக்கு சவரா சம்ஸ்க்ருதி புரஸ்கார் 2012 விருது வழங்கப்பட்டது.

அப்துல் கலாமுக்கு இந்த விருதை கார்டினல் மார் ஜார்ஜ் ஆலன் செரி வழங்கி னார்.

அறிவியல் ஆராய்ச்சிக் கான பங்களிப்பு மற்றும் தனது அறிவியல் அனுப வத்தை பொதுமக்கள் நல னுக்காகப் பயன்படுத்தி வரு வது ஆகியவற்றுக்காக இந்த



விருது வழங்கப்பட்டுள்ளது.

ரூ. 2,22,222 ரொக்கம் அடங்கிய இந்த விருதைப் பெறும் முதல் அறிஞர் கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

## விண்ணில் பாயத் தயார் நிலையில் இஸ்ரோவின் 100 ஆவது செய்மதி

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ அனுப்பும் 100 ஆவது செயற்கைக் கோளின் இறுதிக் கட்டப் பணிகள் நேற்றுக் காலை 6.51 மணிக்கு ஆரம்ப மாகியது.

விண்வெளி ஆராய்ச் சிகளில் சாதனைகள் பல புரிந்து வரும் இந்தியா, தனது 100 ஆவது செயற்கைக் கோளான பி.எஸ்.எல்.வி. நாளை ஞாயிற் றுக்கிழமை காலை 9.51 மணியளவில் விண்ணில் செலுத்த உள்ளது. இதற்கான 51 மணி நேர ஆயத்தப் பணிகள் நேற்றுக் காலை ஆரம்பமாகியது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரி கோட்டாவில் இருந்து விண் ணில் பாய உள்ள பிஎஸ். எல்வி. ரொக்கெட் பிரெஞ்ச் மற்றும் ஜப்பானிய செயற்கைக் கோள் களைச் சுமந்து செல்ல உள்ளது.

## இலங்கை சிறையில் இந்திய மீனவர் எவரும் இல்லையாம்

### இவ்வாறு கூறுகிறார் கிருஷ்ணா



**இலங்கையில் இந்திய மீனவர்கள் எவரும் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கைது செய்யப்பட்டு சிறை யில் இல்லை.**

இந்திய மீனவர் எவருமே இலங்கை சிறையில் இல்லை என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா தெரிவித்தார்.

மாநிலங்களவையில் அ.தி.மு.க.வின் மைத்ரேயன் கொடுத்திருந்த நோட்டீஸ் மீதான விவாதத்துக்குப் பதில ளித்து எஸ்.எம். கிருஷ்ணா பேசியதாவது:-

இலங்கையில் இந்திய மீனவர்கள் எவரும் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கைது செய்யப்பட்டு சிறை யில் இல்லை. இருப்பினும் போதைப் பொருள் கடத்தி யதாக சில இந்தியர்கள் இலங்கைக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்திய மீனவர்கள் தடுத்து வைக்கப்படும் போது கொழும்பில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள், யாழ்ப் பாணத்தில் உள்ள தூதரகு டன் இந்த விவகாரம் குறித்து விவாதித்து உதவி வரு கின்றனர். இந்தியாவைப் பொறுத்தவரையில் இரு தரப்பு மீனவர்களும் சுமுக மாக மீன்பிடிக்க உரிய நட வடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது -என்றார்.

## நாடாளுமன்ற வளாகத்தில் பா.ஜ.கவினர் ஆர்ப்பாட்டம்

### மன்மோகனைப் பதவி விலகக் கோரி

டில்லி, செப்.8

நாடாளுமன்ற மழைக் காலத் தொடர் நேற்றுடன் நிறைவடைவதைத் தொடர்ந்து, நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீட்டில் நடைபெற்ற ஊழல் விவகாரத்தைத் தொடர்ந்து பிரதமர் மன் மோகன் சிங் பதவி விலக வேண்டும் மற்றும் நீதி விசாரணை நடைபெற வேண்டும் என்ற கோரிக் கையை வலியுறுத்தி பாரதிய ஜனதா கட்சியினர் நாடாளு மன்ற வளாகத்தில் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களான




எல்.கே. அத்வானி, சுஷ்மா ஸ்வராஜ் மற்றும் அருண் ஜெட்லி, ஐக்கிய ஜனதா தளத் தலைவரும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைவருமான சரத் யாதவ், சிரோன்மணி அகாலி தள கட்சியின் ஹர்சிம்ரத் கவுர் மற்றும் சிவசேனா கட்சியின் ஆனந்த் கீத்தி ஆகியோரு டன் நாடாளுமன்ற உறுப்பி னர்கள் பலர் கலந்து கொண் டனர்.

ஆர்ப்பாட்டத்தின்போது சுஷ்மா சுவராஜ் தெரிவித்த தாவது:-

நாம் அனைவரும் காந்தி சமாதியில் இந்த நிலக்கரி ஊழலை மக்க ளிடையே வெளிச்சத்துக்குக் கொண்டு வர உறுதி எடுத்தி ருக்கிறோம். இந்தப் பிரச்சி னையை நாடாளுமன்றத்தி லிருந்து ஒவ்வொரு வீதிக் கும் ஒவ்வொரு கிராமத் துக்கும் கொண்டு செல் வோம்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் அணு உலைக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்

## தகர்க்கப்படும் என்ற தலிபான் எச்சரிக்கையை அடுத்து

இஸ்லாமாபாத், செப் 8

பாகிஸ்தானில் உள்ள அணு உலைகளுக்கு தலிபான்கள் மிரட்டல் விடுத்ததையடுத்து, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் உள்ள மிகப் பெரிய அணு உலையான டேரா காஸி கான் அணு உலைக்கு பாதுகாப்பு ஏற்பாடு பலப்படுத்தப்பட்டுள்ளது. பஞ்சாப் மாகாணத்தில் உள்ள 3 இராணுவப் பிரிவைச் சேர்ந்தோர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதத்தின் முதல் வாரத்தில் டேரா காஸி கான் பகுதியில் பொலிஸார் நடத்திய அதிரடித் தாக்குதலில் முக்கிய தீவிரவாதியான காய்ஸ்ரனி உள்ளிட்ட 8 பேர் கொல்லப்பட்டனர். மேலும் அப்பகுதியில் இருந்த தலிபான் தீவிரவாதிகளையும் விரட்டியடித்தனர்.




காய்ஸ்ரனி கொல்லப்பட்டது தலிபான் இயக்கத்துக்கு பெரும் பின்னடைவாகக் கருதப்பட்டது. பின்னர் கடந்த மாதம் 16ஆம் திகதி கம்ரா விமானப் படைத் தளத்தை தலிபான் தீவிரவாதிகள் தாக்கினர். அதைத் தொடர்ந்து, டேரா காஸி கான் பகுதியில் உள்ள அணு உலை தான் எங்கள் அடுத்த இலக்கு என்று மிரட்டல் விடுத்திருந்தனர்.

தலிபான் தீவிரவாதிகளின் தொலைபேசி உரையாடலில் அணு உலை தாக்குதல் குறித்துப் பேசியது பதிவாகியுள்ளது. தற்கொலைப்படை பயங்கரவாதிகள், வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட கார்களுடன் டேரா காஸி கான் பகுதிக்குள் நுழைந்து அணு உலை மீது தாக்குதல் நிகழ்த்தத் திட்டமிட்டுள்ளனர்.


இந்தத் தாக்குதலைத் தீவிரவாதிகள் எந்த நேரத்திலும் நடத்தலாம் என்று பாகிஸ்தான் உளவு அமைப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளதாக எக்ஸ்பிரஸ் டிரிப்யூன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து அணு உலையைச் சுற்றிலும் பல அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மேலும் பஞ்சாப் மற்றும் பலுசிஸ்தான் மாகாண எல்லைகளுக்கு இடைப்பட்ட பகுதியிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

டேரா காஸி கான் அணு உலையை தாக்கப் போவதாக தலிபான் தீவிரவாதிகள் முதல் முறையாக மிரட்டல் விடுத்துள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தலிபான்களின் இந்த மிரட்டல் பிராந்திய பாதுகாப்புக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை என அரசியல் கட்சியினர் கருத்து தெரிவித்துள்ளனர். (3)

# வானில் பறவைகளுடன் உயரப் பறந்தார் புடின்



மொஸ்கோ; செப் 8

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் சாகசங்கள் பற்றி உலகம் முழுவதும் அறிந்தவர்கள் இருக்கின்றனர்.

ஒரு நாட்டின் ஜனாதிபதி என்ற கண்ணோட்டத்தை விட்டும் அப்பாற்பட்டவர் புடின். குதிரையேற்றம், கார் ரேஸ், பனிப்பிரதேசத்தில் தங்குவது, அதிவேக ஜெட்டில் பறப்பது என அனைத்து விடயங்களும் புடினின் விரல் நுனியில் புதைந்துள்ளன.

இந்த நிலையில் ரஷ்யாவின் வடகோடி பகுதிக்கு பயணம் மேற்கொண்ட போது புடின், கிளைடரில் வானில் பறக்க அப்போது சைபீரிய கொக்குகளும் அந்த கிளைடருக்கு சமமாக பறந்து கொண்டிருந்தன.

பின்னர் கிளைடரில் உட்கார்ந்தபடியே சைபீரிய கொக்கு தமது வாகனத்தை விட்டு நகரும் வரை உற்றுப் பார்த்தபடியே காத்திருந்து பின்னர் காற்றில் பறந்திருக்கிறார்.

இப்படி புடின் வெள்ளை உடையில் வானில் பறப்பதற்கு முதல்நாள் ஒரு வேடிக்கையும் அரங்கேறியுள்ளது.

ரஷ்யாவின் 'ஆல்பா-நாய்' என்று புடினை அமெரிக்க ராஜதந்திர வட்டாரங்கள் குறிப்பிட்டிருக்கும் தகவல்கள் அம்பலமாகியிருந்தன.

சைபீரிய கொக்குகளுடன் பறந்துவிட்டு தரையிறங்கி அந்த நாட்டுத் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்த புடின், இப்ப நான் ஆல்பா- கொக்கு என்று சொல்லிச் சிரித்திருக்கிறார். (3)

# நீல் ஆம்ஸ்ரோங் உடலை கடலில் அடக்கம் செய்ய முடிவு



புகழ்பெற்ற விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ் ரோங்கின் உடலை கடலில் அடக்கம் செய்ய அவரது குடும்பத்தினர் முடிவு செய்துள்ளனர்.

நிலவில் முதன்முதலாக காலடி பதித்த நீல் ஆம்ஸ்ரோங் கடந்த மாதம் 25ஆம் திகதி தனது 82 வயதில் மரணமடைந்தார்.

அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசாவில் பணியாற்றிய இவர், சமீபகாலமாக உடல் நலக்குறைவால் அவதிப்பட்டு வந்த நிலையில் சாவு இவரை தழுவியது. இவருக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா உட்பட உலகின் முக்கிய தலைவர்கள் இரங்கல் தெரிவித்தனர்.

இந்த நிலையில் அவரது உடலைக் கடலில் அடக்கம் செய்ய அவரது குடும்பத்தினர் முடிவு செய்துள்ளனர். வரும் 13ஆம் திகதிக்கு பின்னர் இந்த நிகழ்ச்சி நடைபெற உள்ளதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (3)



எகிப்து தலைநகர் கெய்ரோவுக்கு வந்த பலஸ்தீன ஜனாதிபதி மகமுத் அப்பாசை எகிப்து ஜனாதிபதி முகமது மோர்சி சந்தித்தபோது...

# நவீன ரொக்கட் தொழில்நுட்பத்தை இந்தியாவுக்கு வழங்குகிறது ரஷ்யா!

ராணுவத்தில் பயன்படுத்தப்படும் ரொக்கெட்டுகளைத் தயாரிப்பதற்கான தொழில்நுட்பத்தை இந்தியாவுக்கு அளிக்க ரஷ்யா முன்வந்துள்ளது. பிஎம் 30 ஸ்மெர்ச் எனப்படும் இந்த ரொக்கெட்டுகள் 1980 ஆம் ஆண்டு ரஷியாவால் கண்டுபிடிக்கப்பட்டு ராணுவத்தில் பாவனைக்கு வந்தது.

பிஎம் ஸ்மெர்ச் - 30 எனப்படும் இத்தகைய ரொக்கெட்டுகள் டொர்னாடோ மற்றும் 9ஏ52 என்றும் அழைக்கப்படுகின்றன. எல்லைப்பகுதி மற்றும் ஆயுதத் தளபாடக் கிடங்குகள் ஆகியவற்றின் பாதுகாப்புக்கு ஏற்றவை. ரொக்கெட் மற்றும் அதைச் செலுத்தும் கவச வாகனம் ஆகியவை உள்ளடங்கியது. 300 மி.மீ. அளவுள்ள ரொக்கெட்டுகள் 70 முதல் 90 கி.மீ. தூரம் சென்று தாக்கக் கூடியவை.

இதில் எத்தகைய ஆயுதங்களையும் வைத்துச் செலுத்த முடியும். இது தொடர்பான ஒப்பந்தம் ஒகஸ்ட் 27 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. (3)

# ஹிலாரி கிளின்டன் கிழக்குத் திமோருக்கு பயணம்

அமெரிக்க இராஜங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் கிழக்குத் திமோரில் நடைபெற்ற தேர்தலைத் தொடர்ந்து உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் வியாழக்கிழமை கிழக்குத் திமோரைச் சென்றடைந்துள்ளார்.

2002ஆம் ஆண்டு கிழக்குத் திமோர் சுதந்திரம் பெற்ற பின்னர் அந்த நாட்டிற்கு வருகை தரும் முதலாவது அமெரிக்க இராஜங்கச் செயலாளராக ஹிலாரி கிளின்டன் உள்ளார்.

கிழக்கு திமோரின் தலைநகர் டிலியைச் சென்றடைந்த அவர், ஜனாதிபதி ரவூர் மாற்றன் ரூவாக் மற்றும் பிரதமர் ஸனனா குஸ்மாவோ ஆகியோரைச் சந்திக்கவுள்ளார்.

ஜூலை மாதத்தில் பொதுத் தேர்தலும் அதற்கு முன் ஜனாதிபதித் தேர்தலும் நடைபெற்றுள்ள நிலையில், இவரது பயணம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

ஆசியாவிலுள்ள வறிய நாடுகளில் ஒன்றான கிழக்குத் திமோரின் ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும் முயற்சியாக ஹிலாரி கிளின்டனின் பயணம் அமைந்துள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கனடாவில் அரச ஊழியர்கள் 27 ஆயிரம் பேர் வேலைநிறுத்தம்

## 20 ஆண்டுகளின் பின் போராட்டம்




ரொரண்டோ, செப் 8

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் 20 ஆண்டுகள் கழித்து சுமார் 27,000 அரச ஊழியர்கள் சம்பள உயர்வு கோரியும், வரிச்சுமையைக் குறைக்கக் கோரியும் ஒருநாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

அரச சார்பு தொழிற்சங்கத்தைச் சேர்ந்த 25,000 பேரும், மற்ற இரண்டு தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 2000 பேரும் இந்த வேலை நிறுத்த போராட்டத்தில் குதித்தனர்.

இந்தப் போராட்டம் நடந்த அதே நாளில் முதல்வர் கிறிஸ்ட்டி கிளார்க், தனது அமைச்சரவையில் மாற்றங்களை நிகழ்த்தி புதிய நிதி அமைச்சரை பணியில் அமர்த்தினார். மேலும் தனது அரசு இந்தப் போராட்டத்திற்குப் பணியாது என்றும் முதல்வர் தெரிவித்தார்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் 153 மாகாணங்களில் உள்ள 1800 இடங்களில் பணியில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்கள் கலந்து கொண்டனர். ஆனால் முக்கியப் பணியான சிறை, நீதிமன்றம், சிறுவர் நலம், தீயணைப்பு, சமூகப்பணி போன்ற துறைகளில் உள்ளவர்கள் தங்கள் பணிகளை வழக்கம் போல் செய்தனர்.

# பிரிட்டனில் தேடப்படும் குற்றவாளிகளின் பட்டியல் வெளியீடு

லண்டன், செப். 8

பிரிட்டனில் அதிகம் தேடப்படும் குற்றவாளிகளாக எட்டு ஆண் மற்றும் ஒரு பெண்ணின் பெயர்களைக் காவல் துறை வெளியிட்டுள்ளது. இவர்கள் சிப்ரஸ் தீவில் ஒளிந்திருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன.



இவர்கள் போதைக்கடத்தல், காரில் மோதி கொன்றுவிட்டு தப்பிஓடிவிடுதல், பல பாலியல் வன்முறைக் கொடுமை போன்ற வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

இதில் 50 வயது நிரம்பிய மார்ட்டின் ஈவான்ஸ் என்ற விருது பெற்ற தொழிலதிபர் 39 மில்லியன் யூரோ மதிப்பில் பெரியளவில் போதைக் கடத்தல் தொழிலில் ஈடுபட்டுள்ளார்.

[illegible] நெருப்புக் [illegible] வைத்தால் நல்ல இலாபம் கிடைக்கும் என்று ஆசைவார்த்தை கூறி பல மில்லியன் பவுண்டுகளை முதலீட்டாளரிடம் இருந்து கொள்ளையடித்துள்ளார். இவர் பிரிட்டனை விட்டு ஓடிஒளிந்து ஒரு வருடமாகிவிட்டது.

பால் லாக்வுட்(41) என்பவன் 6 வயது சிறுமி உட்பட ஐந்து பாலியல் பலாத்காரக் குற்றங்களில் ஈடுபட்டுள்ளான். வேய்ன் ஸ்மித்(37), தன் நண்பனுடன் கார் வேகப் போட்டி நடத்தியதில் ஒரு பாதசாரியின் மீது காரை ஏற்றிக் கொன்று விட்டுத் தப்பி விட்டான்.

46 வயது மார்ட்டின் பவர், ஏழு மில்லியன் பவுண்ஸ் ஊழலில் நகர் காவல் துறையினரால் தேடப்பட்டு வருகிறான்.

இவர்களைக் கைது செய்வதற்கான முயற்சியில் பிரிட்டன் காவல் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டாம் எமக்கு சீனர்கள்

## ஒபாமா அறிவுறுத்து



**சீனத் தொழிலாளர்களை பணிக்கு வைத்துக்கொள்வதை தவிருங்கள்**

அமெரிக்காவில் சீனர்களின் பணி வாய்ப்புகளைத் தவிர்க்க வேண்டும் என்று ஜனாதிபதி பராக் ஒபாமா தன் நாட்டு நிறுவனங்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில் ஜனநாயக தேசியக் கட்சியின் அதிகாரப்பூர்வ வேட்பாளராக பராக் ஒபாமா அறிவிக்கப்பட்டுள்ளார்.

குடியரசுக் கட்சி வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் மிற் ரோம்னி போட்டியிடுகின்றார்.

இந்த நிலையில் தேர்தல் களத்தில் போட்டியிட உள்ள இவர்கள் தங்களது தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கி நடத்தி வருகின்றனர்.

அமெரிக்காவின் சார்லோட் நகரில் உரையாற்றிய போது ஒபாமா, தெரிவித்ததாவது:-

''நாட்டின் கல்வி முறை மேம்படுத்தப்பட வேண்டியது அவசியம்.

அதே போல் அமெரிக்க நிறுவனங்கள், சீனத்தொழிலாளர்களைப் பணிக்கு வைத்துக்கொள்வதைத் தவிருங்கள்'' என்று கூறினார்.

இந்தியாவும், சீனாவும் அமெரிக்காவின் நட்பு நாடுகள் என்று ஒபாமா கூறிவந்த நிலையில், சீனத் தொழிலாளர்கள் குறித்த ஒபாமாவின் இந்தக் கருத்து சர்வதேச நாடுகளிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (3)

## விண்வெளியில் அதிக நேரம் நடந்து சாதனை புரிந்தார் சுனிதா

இந்திய வம்சாவளி அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் அதிக நேரம் விண்வெளியில் நடந்த பெண் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

சர்வதேச விண்வெளி மையத்தின் மின்சக்திப் பகுதியில் ஏற்பட்டிருந்த கோளாறைச் சீர்செய்ய 32ஆவது விண்வெளிக் குழுவை நாஸா அனுப்பியது. இக்குழுவில் இந்திய வம்சாவளி விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸும் பயணித்தார்.

இவர், ஜப்பானைச் சேர்ந்த சக விண்வெளி வீரர் அகிஹிகோ ஹொஷிடேவுடன் இணைந்து விண்வெளியில் நடந்து சென்று, பிரதான மின்சக்திப் பகுதியைச் சரிசெய்யும் முயற்சியில் ஈடுபட்டார். கடந்த வாரம் 8 மணி நேரம் விண்வெளியில் நடந்தபடி மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன.

இந்த நிலையில், இருவரும் இரண்டாவது முறையாக கடந்த புதன்கிழமை 6 மணி நேரம் 28 நிமிடங்கள் விண்வெளியில் நடந்து, பிரதான மின்சக்திப் பகுதியில் ஏற்பட்டிருந்த பிரச்சினையைச் சரிசெய்தனர்.

இதுவரை 6 முறை மேற்கொண்ட பயணங்களின் மூலம் 44 மணி நேரம் 2 நிமிடங்கள் விண்வெளியில் நடந்து, அதிக நேரம் விண்வெளியில் நடந்த பெண் வீராங்கனை என்ற சாதனையை சுனிதா வில்லியம்ஸ் தன்வசமாக்கினார்.

முன்னதாக, பெக்கி விட்சன் என்ற விண்வெளி வீராங்கனை 6 முறை பயணித்து 39 மணி நேரம் 49 நிமிடங்கள் நடந்ததே சாதனையாக இருந்தது. சாதனை படைத்த சுனிதா வில்லியம்ஸுக்கு பெக்கி விட்சன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். (3)

## பிரான்ஸில் சுற்றுலாப் பயணிகள் நான்கு பேர் சுட்டுக்கொலை

பிரான்ஸுக்கு சுற்றுலா சென்ற பிரிட்டனைச் சேர்ந்த குடும்பத்தினரின் கார் மீது, மர்ம நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில், நான்கு பேர் பலியாயினர். தாயின் சடலத்துக்கு அடியில் எட்டு மணி நேரம் தவித்த, நான்கு வயதுப் பெண் குழந்தை உயிருடன் மீட்கப்பட்டாள்.

ஆன்சி ஏரிக் கரையோரம் உள்ள கிராமத்தில், தங்கள் பிரிட்டன்பதிவு எண்கொண்ட காரில் சென்ற போது, மர்ம நபர்கள் சிலர் துப்பாக்கியால் சுட்டுள்ளனர்.

தகவலறிந்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், தடயவியல் நிபுணர்கள் வருகைக்காகக் காத்திருந்தனர். சிறப்புப் படையினர் வந்து சேர எட்டு மணி நேரம் ஆனது.

அவர்கள் வந்து, காரைத் திறந்து பார்த்தபோது, நான்கு வயது சிறுமி , தனது தாயின் பிணத்துக்கு அடியில் உயிருடன் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

காருக்கு வெளியில் குண்டு காயத்துடன் கிடந்த அந்தக் குழந்தையின் சகோதரி மீட்கப்பட்டு, ஹெலிகொப்டர் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டாள்.

## ஈரான் மீது தாக்குதல் நடத்தக் கூடாது

### ரஷ்யா எச்சரிக்கை

ஈரான் இரகசியமாக அணு உலைகளைத் தயாரிப்பதாக அமெரிக்கா, இஸ்ரேல் உட்பட மேற்கு நாடுகள் குற்றம் சுமத்தி வருவதுடன், பொருளாதாரத் தடையையும் விதித்துள்ளன.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள ஈரான் அணு சக்தியை மின்சார உற்பத்தி போன்ற ஆக்கப்பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்தி வருவதாக தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச அணு சக்தி கழகத்தினர் பல்வேறு வகையில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்தப் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் சுமுகமாக தீர்க்க அமெரிக்கா, ரஷ்யா உட்பட 6 நாடுகளின் தூதர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதில் ரஷ்ய வெளியுறவு துணை மந்திரி செர்கி ரியாப்கோவ் இடம் பெற்றிருக்கிறார்.

இந்நிலையில் ஈரான் கடந்த சில மாதங்களாக அணு சக்திப் பொருள்களை தீவிரமாக பயன்படுத்தி வருவதாக புதிய முறைப்பாடு எழுந்துள்ளது. எனவே இஸ்ரேல் இராணுவ நடவடிக்கை எடுத்து ஈரான் அணு உலைகளை அழிப்போம் என்று அடிக்கடி மிரட்டல் விடுத்து வருகிறது.

இதற்கிடையில் ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தக் கூடாது என்று ரஷ்யா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ரஷ்ய வெளிவிவகார துணை அமைச்சர் செர்கி ரியாப்கோவ் கூறுகையில், ஈரான் அணுகுண்டு தயாரிப்பதற்கான அறிகுறிகள் இருப்பதாக தெரியவில்லை. அங்கு இராணுவ பயன்பாட்டுக்காக அணு சக்திப் பொருள்கள் திருப்பிவிடப்படவில்லை என்பதை சர்வதேச குழு அதிகாரபூர்வமாக உறுதி செய்துள்ளது.

ஆதலால் இந்த அணு உலை பிரச்சினைக்காக ஈரான் மீது இஸ்ரேல் மற்றும் வேறு நாடுகள் தாக்குதல் எதையும் நடத்தக் கூடாது.


ஈராண்டு நினைவஞ்சலி



மலர்வு 16.12.1929

உதிர்வு 01.09.2010

அமரர் கந்தையா சுவாமிநாதன்

திதி:அட்டமி (கிருஷ்ண ஜெயந்தி)

ஆண்டுகள் இரண்டு ஆனதப்பா
அப்பா என்றழைத்த அன்புத் தெய்வமே
ஆசையோடு எமைவளர்த்த அன்பு அப்பாவே
அமைதிக்கு உறைவிடமாய் வாழ்ந்தீர்கள் அப்பா
நீங்கள் மோனை என்றழைப்பது இன்னும்
கேட்டுக் கொண்டே இருக்குது அப்பா
இரண்டல்ல எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
எம் சோகம் தீரவில்லை அப்பா!

உங்கள் நினைவால் வாடும்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கந்தசாமி கோயிலடி, உசன் மிருசுவில்.

(22559)(2-6-7)

விற்பனைக்கு

பொமனேரியன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: எஸ், சாந்த - 077 7150 883
(22590) (45.6.7)

வீடு வாடகைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் மூன்று பேருக்குட்பட்ட குடும்பம் வசிக்கக் கூடிய அனெக்ஸ் வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 3548 333
(22505) (45.6.7)

தையல் வகுப்பு

மகளிருக்கான காலை மாலை நேர தையல் பயிற்சி வகுப்புகள்
குழந்தைகள் சட்டை, சாறி பிளவுஸ், சுடிதார், பாவாடை சட்டை உட்பட சகலவிதமான ஆடைகளும் வெட்டித் தைப்பதற்கு பயிற்றுவிக்கப்படும்
517, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
( ஓட்டு மடத்துக்கு இடையில்)
தொடர்பு : 077 7150883
(22589)(45.6.7)

IELTS A1 B1 B2

October/27th Exam in Jaffna Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
(சி/3104)
K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre

ஆடைகளில் அச்சுக்கலைப்பயிற்சி
FABRIC PRINTING TRAINING

அரிய சந்தர்ப்பம் - வவுனியாவில்
நீங்கள் அணியும், ஆடைகள், சாறிகள் மற்றும் துணிகளில் இலகு முறையில் குறைந்த முதலீட்டில் வீட்டில் வைத்தே டிசைன்களை பிரிண்டிங் செய்யும் முறையை தென்னிந்திய புகழ் அர்ச்சனா அக்கடமியின் அங்கீகாரம் பெற்ற ஆசிரியர் - அன்ரோ டினேஸ், B.A.,D.S.Tech.,(S.India)
(செய்முறை பயிற்சியளிக்கிறார்)
இம்மாதம் செப்ரெம்பர் 15, 16 (சனி, ஞாயிறு),
பிரவீணன் என்ரபிரைசஸ்,
35, கந்தசுவாமி கோயில் வீதி, வவுனியா.
சான்றிதழ் வழங்கப்படும்.
விவரம் - பதிவுகளுக்கு: 077 7283 192, 077 890 4131, 071 5863 151
(திங்கள் Vijay TV யில் காலை 9.30 இற்கு இந்நிகழ்ச்சியைப் பார்க்கலாம்)
(23) (45.6.7)

கண்காட்சி
Exhibition @
Angel International School,Manipay.
ஏஞ்சல் சர்வதேச பாடசாலை மானிப்பாய்
Dates: 6th, 7th & 8th Sept 2012
Time: 9.00am to 7pm
Admission by programme.
*Open to Students of all ages. parents and well-wishers*
(22516)(6.7.8)

பணிப்பெண் தேவை

வண்ணார்பண்ணையில் இரண்டு பெண்கள் உள்ள குடும்பத்தில் வயதான ஒருவரை பார்க்கவும், சமைக்கவும் தெரிந்த பணிப்பெண் தேவை.
தொடர்பு: 077 3548 333
(22509) (45.6.7)

இறைச்சிக்கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப் பட்டு விற்பனையாகின்றது. தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை திறக்கப்படும்
நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்
யாழ்ப்பாணம்
(22488)(6.7.8)

தேவை

நல்லூர், மானிப்பாய் ஆகிய இடங்களில் உள்ள பாலர் பாடசாலைகளுக்கு பணிப்பெண்கள் தேவை. 10.09.2012 திங்கட்கிழமை அன்று பிற்பகல் 2 மணிக்கு சுயவிவரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.
தொடர்பு: 077 3009 655, 077 3627 055
140, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(22602) (45.6.7)

ஆத்மசாந்திப் பிரார்த்தனை



செல்வி
காமாட்சி கந்தையா

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் கடந்த 27 ஆண்டுகளாக பிரதம மேற்பார் வையாளராகக் கடமையாற்றி 10.08.2012 இல் அமரத்துவம் அடைந்த செல்வி காமாட்சி கந்தையா அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழும் நந்தன வருடம் ஆவணித் திங்கள் 24 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (09.09.2012) முற்பகல் 11.30 மணிக்குத் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னசத்திர மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மாரீசன்கூடல், இளவாலை.

சகோதரி: திருமதி சிவகாமி சின்னத்துரை, பெறாமக்கள், மருமக்கள்.

(சி/3130)(2-6-7)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தேயிலைக் கொழுந்து நிறை குறைப்பு தோட்டத் தொழிலாளர் பாதிப்பு

நாவலப்பிட்டி கலபொட தோட்டத் தொழிலாளர்கள் பறிக்கும் தேயிலைக் கொழுந்தில் மாதாந்தம் சுமார் 1800 கிலோ வரை குறைவாகக் கணக்கிடப்படுவதாகவும் இவ்விடயம் குறித்து தோட்ட நிர்வாகத்துக்கு முறையிட்டும் நிர்வாகம் அசமந்தப் போக்கில் செயற்படுவதாகவும் தோட்டத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டி பஸ்பாகே பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கலபொட தோட்டம் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி நிறுவனத்துக்கு உட்பட்டதாகும்.

கடந்த 10 வருடகாலமாக இந்தத் தோட்டம் நட்டத்தில் இயங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலைமை காரணமாக தொழிலாளர்கள் பல்வேறு வகையில் பாதிப்படைந்துள்ளனர்.

> தேயிலைக் கொழுந்துகள் வேறொரு தோட்டத்திலுள்ள தேயி லைத் தொழிற் சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அரைக் கப்படு வதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.



கல்பொட தோட்டத்தில் வாரத்தில் நான்கு நாள்கள் மாத்திரமே வேலை வழங்கப்படுகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் தோட்டத்தொழிலாளர்கள் பறிக்கின்ற தேயிலைக் கொழுந்திலும் தோட்ட நிர்வாகம் நிறை குறைத்தல் நடவடிக்கைகளில் மறைமுகமாக ஈடுபட்டு வருவதாகத் தோட்டத் தொழிலாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இந்தநிலையில் கலபொட தோட்டத்திலுள்ள தேயிலைத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ள நிலையில் இந்தத் தோட்டத்தில் பறிக்கப்படுகின்ற தேயிலைக் கொழுந்துகள் வேறொரு தோட்டத்திலுள்ள தேயி லைத் தொழிற்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அரைக்கப்படுவதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாகவே தோட்ட நிர்வாகம் தொழிலாளர் பறிக்கின்ற தேயிலைக் கொழுந்திலும் நிறை குறைத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக தொழிலாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

தோட்ட நிர்வாகத்தின் இந்த உழைப்புச் சுரண்டலுக்கு எதிராக தாம் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாக கலபொட தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். (வ)

## சட்டவிரோதமாக மாணிக்கக் கல் அகழ்ந்தவர்களுக்கு அபராதம்

ஹற்றன் - நோர்வூட் பொலிஸ் பிரிவில் போட்றி தோட்டத்தில் சட்ட விரோதமாக மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த நிலையில் ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபர்கள் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இங்கு சந்தேக நபர்கள் ஏழுபேரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 5 ஆயிரம் அபராதம் ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளது.

இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மாணிக்கக் கல் அகழ்வுக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களை அரசுடைமையாக்கும் படியும் அபராதத் தொகையைச் செலுத்திய தும் இவர்களை விடுவிக்குமாறு பொலிஸாருக்கு நீதிவானால் உத்தரவிடப்பட்டது. (வ)

## லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டு பொலிஸ் அதிகாரி பணிநீக்கம்

மொனராகலை ஹம்பேகமுவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் அதிகாரி மற்றும் இரண்டு பொலிஸ் கொன்ஸ்டபிள்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட சிலரிடம் லஞ்சம் பெற்று அவர்களை விடுவித்த குற்றச்சாட்டின் பேரிலேயே குறித்த உத்தியோகத்தர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

ஹம்பேகமுவ பகுதியில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழும் இடமொன்று கடந்த 4 ஆம் திகதி சுற்றிவளைக் கப்பட்டபோது இவர்கள் லஞ்சம் பெற்றுள்ளமை தெரியவந்தது. (வ)

## சுகாதாரத்துறை அபிவிருத்தி

கடந்த நான்கு ஆண்டுகளில் 800 மில்லியன் ரூபா செலவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுகாதாரத் துறையில் பெரியளவிலான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்ற மட்டக்களப்பு மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம்.சதுர்முகம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இந்த அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காத்தான்குடி, வாழைச்சேனை, களுவாஞ்சிக்குடி ஆதார வைத்திசாலைகள் பல மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. அத்துடன், பல சுகாதார வைத்தியதிகாரி பணிமனைகளும் நிர்மாணிக் கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

## சிறந்த இளம் சிறுகைத்தொழில் முயற்சியாளர்களுக்கு விருது வழங்கல்



மத்திய மாகாணத்தில் சிறந்த இளம் சிறுகைத்தொழில் முயற்சியாளர்களுக்கு விருதுகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை பேராதனை ஓக்-றே விடுதியில் இடம்பெற்றது.
இளைஞர் விவகார மற்றும் சிறு கைத்தொழில் ஊக்குவிப்பு அமைச்சின் ஏற்பாட்டில் மத்திய மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்கேகடுவ தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கண்டி, நுவரெலியா மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 58 இளம் கைத்தொழில் முயற்சியாளர்கள் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## அபிராமியம்மன் ஆலய களஞ்சிய அறை உடைப்பு

### மூதூரில் பொலிஸ்காரர் கைது

மூதூர் மேம்கமம் அபிராமியம்மன் தேவஸ்தானத்தின் களஞ்சிய அறை உடைக் கப்பட்ட சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் மேம்கமம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

குறித்த தேவஸ்தானத்தின் பூசகர் நேற்றுக் காலை 7.30 அளவில் ஆலயத்துக்குச் சென்றபோது களஞ்சிய அறை உடைக்கப்பட்டிருந்ததாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது.

இதற்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது களஞ்சிய அறைக்குள் இருந்த அலுமாரி கிளறப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளதோடு, அறைக்குள் இருந்து வெற்று மதுபானப் போத்தல், பணப்பை மற்றும் காற்சட்டை என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பணப்பையில் இருந்த பொலிஸ் திணைக்கள அடையாள அட்டை மற் றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுக்கு அமைய குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களஞ்சிய அறைக்குள் இருந்த காற்சட்டையின் சொந்தக்காரரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். எவ்வாறாயினும் தேவஸ்தானத்தின் களஞ்சிய அறையில் இருந்த பொருள்கள் காணாமற் போயுள்ளனவா என்பது தொடர்பில் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ)

## காட்டுத் தீயால் ரயில் சேவை தடை

காட்டுத் தீ காரணமாக கண்டியிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த எரிபொருள் ரயில், இதல்கஸ்ஹின்ன ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று நாவலப்பிட்டி ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்தது.

ஹப்புத்தளை - தங்கமலை காட்டுப் பகுதியில் மலையக ரயில் மார்க்கத்துக்கு அருகில் தீ பரவியுள்ளது.

தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதன் பின்னர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ரயில், பதுளை நோக்கி பயணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் குறிப்பிட்டது.

பொலிஸ், இராணுவம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகிய தரப்பினர் கூட்டாக, கடந்த புதன்கிழமை அதிகாலை பரவ ஆரம்பித்த தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சிகளில் ஈடுபட்டனர். (வ)

## பேராதனை பல்கலை ஊழியர் ஆர்ப்பாட்டம்



பல்கலைக்கழக ஊழியர் சம்மேளன ஒருங்கிணைப்பு குழுவின் பேராதனை பல்கலைக்கழக கிளை நேற்றுமுன்தினம் மாலை ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண் டது.

பேராதனை கலஹா சந்தியில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 1000 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இரண்டு மாதங்களுக்கு முன் அரசுடன் ஒப்பந்தம் செய்ததன் பிரகாரம் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறினர்.

அத்துடன் பல்கலைக் கழகங்களில் இடம்பெறும் அவல நிலையை முடிவுக்கு கொண்டு வந்து விரிவுரையாளர்களது பிரச்சினைகளை தீர்த்து வைத்து மீண்டும் பல்கலைக்கழகங்களில் கல்வி நடவடிக்கையை ஆரம்பிக்குமாறும் ஆர்ப்பாட்டக்காரர் கள் இதன்போது வலியுறுத்தினர். (வ)

## மோ.சைக்கிள் விபத்து: பெண் சாவு

இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மாரவில- நாத்தாண்டிய வீதியில் நேற்றுமுன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்றின் பின்னால் அமர்ந்து பயணித்த பெண்ணே உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றுமொருவர் படுகாயமடைந்து மாரவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அவருடைய நிலை கவலைக்கிடம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (வ)

## சிறுவர்களை வேலைக்கமர்த்தல்; கிண்ணியாவில் விழிப்புணர்வு


திருகோணமலை, செப்.8

கிண்ணியா நடுத்தீவு ஜும் ஆ பள்ளிவாசல் நிருவாக சபையினர் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது தொடர்பாக விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

அண்மைக் காலமாக மேற்படி பிரதேசத்தில் சிறுவர்கள் சிப்பி அகழ்தல், சிப்பி அரைத்தல் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதை அவதானித்த பள்ளிவாசல் நிருவாக சபை இது தொடர்பாக பெற்றோர்களை விழிப்பூட்டும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

இந்தப் பகுதியில் வீடு வீடாகச் சென்று பெற்றோர்களுக்கு இது தொடர்பாக விளக்கமளிக்கப்படுகிறது. இதற்கென நிர்வாக சபை குழு ஒன்றையும் நியமித்துள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீருடன் கூடிய 3 ஆம் வருட நினைவலைகள்

## சண்முகநாதன் அருள்நங்கையின் அருமைப்புத்திரன்

சிரிக்கவைத்தநாள் 07 ☆ 03 ☆ 2000

## ச.சந்துதன்

அழ வைத்தநாள் 08 ★ 09 ★ 2009

அறிவு, ஆற்றல், மெய்மைஞானம், பண்பு, பாசம் என்ற எல்லா இயல்புகளையும் பெற்று,
எம்மைக் களிப்பூட்டி ஒன்பது ஆண்டுகள் எம்முடன் வாழ்ந்த "அருமை மகனே!"
ஏன் எம்மைப் பிரிந்தாய்? எமக்குக் கிடைத்த அனைத்துத் சந்தோஷத்தையும் தொலைத்துவிட்டு
பரிதவிக்கும் எம்மை நீ ஏன் பார்க்கவில்லை என்று நித்தமும் ஏங்கித் தவிக்கின்றோம் "ராசா"
எங்கள் விலை மதிக்க முடியாத "முத்தே" உன் நினைவு எங்களை வாட்டி தவிக்க வைக்கின்றது "செல்வமே"
மூன்று ஆண்டு என்ன, மூவாயிரம் ஆண்டு என்ன, நாம் இப்புவியில் வாழுகின்ற எத்தனை ஆண்டானாலும்
நீ பிரிந்த அந்த வேதனையான நாளை மறக்க முடியுமாடா? நீ சென்ற இடமெல்லாம் சிறப்பைத்தந்த "செல்வமகன்"
நீ எங்களுக்குக் கிடைத்தபின் தான் நாம் உயர்ந்தோம். நீ துயிலும் இல்லம் சென்றபின் அது மயானமாக அல்லாது
புனித இல்லமாக மாறியது. நாம் அனுதினமும் சந்துதா உன்னைக் காண்பதற்கு நீ உறங்கி இருக்கும் இடத்துக்கு
இரவு பகல் இன்றி தினம் தோறும் சென்று வருகின்றோம் ஐயா!
ஒரு நாளாவது நீ வந்து பேசுவாய் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது "ஐயா"
எந்தத் தானத்தைச் செய்தாலும், தருமத்தைச் செய்தாலும் அது உனக்காகச் செய்து வருவதனால்
உன்னை நாம் மட்டுமல்ல உற்றவரும் மற்றவரும் வாழ்த்துவதைக் கேட்கின்றோம்.
அந்த சந்தோஷத்தில் தான் இன்று நாம் வாழ்கின்றோம் "அருமை மகனே"
உனைப் பிரிந்து வாழும் துன்பமான வாழ்க்கைக்கு என்றுமே முடியவில்லை.
கடல் மண்ணை எண்ணினாலும் நாம் உன் மேல் வைத்த அன்பின் அளவை எண்ணவே முடியாது ஐயா
இன்று எங்கள் குறிக்கோள் "சந்து" என்ற உன் நாமம் என்றென்றும் மறையாது. நாம் வாழும் காலத்தின் பின்பும்
நிலைக்க வேண்டும் என்பதுதான் அதற்கான பணிகளை ஆற்றுவதே எம் வாழ்நாளின் கடமையாகும்.
வாராயோ நீ என்று ஏங்கும் எங்களுக்குக் கனவிலும், நிஜத்திலும் நீ இருப்பதாகக் காணுகின்றோம்.
நீ உடலத்தால் பிரிந்து விட்டாய், ஆனால் உள்ளத்தால் என்றென்றும் பிரியாத தெய்வமாய் எங்களுடன் வாழ்கின்றாய்
"ஆருயிர் புத்திரனே" வர்ணிக்க முடியாத உன் அழகு வதனத்தை என்றும் எம் மனதில் கண்டு, கண்டு களிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லக்சுமி, சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை. - பெற்றவரும், உற்றவரும்.

### நீண்ட இடைவெளிக்குப் பின்...



நாட்டில் தற்போது கடும் வறட்சியான காலநிலை தொடர்கிறது. இந்நிலையில் நீண்ட நாள்களுக்குப் பின்னர் நாட்டின் பல பாகங்களிலும் ஓரளவு மழை பெய்தது. இதனால் வறட்சியான பிரதேசங்களில் உள்ள மக்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர். குறிப்பாக வடமத்திய, கிழக்கு, ஊவா மாகாணங்களில் நேற்று நல்ல மழை தொடர்ந்து பெய்தது. (த)

# வைரக்கல்லை விழுங்கியவருக்கு 17 ஆம் திகதிவரை விளக்கமறியல்

கொழும்பு,செப் 8

1.8 மில்லியன் ரூபா பெறுமதியான வைரக்கல்லை விழுங்கியதாக கூறப்படும் சீனப் பிரஜையான சந்தேக நபரை செப்டெம்பர் 17 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி நேற்று உத்தரவிட்டார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேசமாநாட்டு மண்டபத்தில் கடந்த 5 ஆம் திகதி நடைபெற்ற சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கண்காட்சியின்போது, காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த 1.8 மில்லியன் ரூபா பெறுமதியான வைரக் கல்லொன்றை விழுங்கியதாக சீனாவைச் சேர்ந்த ஹெய்க்னன் சான்ட்லி டோன்ஜில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சந்தேக நபரை சிறைச்சாலை அதிகாரிகளின் காவலில் விளக்கமறியலில் வைப்பதற்கு அனுமதிக்குமாறு பொலிஸார் நீதிமன்றத்தை கோரினர்.

அதையடுத்து சந்தேக நபரை 17 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைப்பதற்கு கொழும்பு பிரதம நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி அனுமதித்தார். (த)

# மிருகபலி பூஜைக்குத் தடை; மத சுதந்திர மீறல் அல்ல!

## ஹெல உறுமய தெரிவிப்பு

மிருக பலி பூஜைக்கான தடையை மத சுதந்திர மீறலாகக் கருதப்பட முடியாது என ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

மத அனுஷ்டானங்களின் போது மிருகங்களை பலியிடும் மரபை தடுத்து நிறுத்தும் வகையில் நாட்டில் சட்டம் இயற்றப்பட வேண்டுமெனவும் அக்கட்சி வலியுறுத்தியுள்ளது.

இவ்வாறானசட்டமொன்றை இயற்றுவது தொடர்பிலான முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவின் சில மாநிலங்களில் மிருக பலி பூஜைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், இந்தச் சட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

மிருக பலி பூஜையைத் தடுக்கும் வகையிலான உத்தேச சட்ட மூலம் விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டமானது மதச் சுதந்திரத்தை மீறும் நோக்கில் இயற்றப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகின் பல நாடுகளில் மிருகங்களைப் பாதுகாக்க சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளதாகவும், இந்தச் சட்டங்கள் இலங்கையில் நடைமுறைபடுத்தப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள பௌத்த நாடு என்ற ரீதியில் பௌத்த மத விழுமியங்களுக்கு மதிப்பளிக்க வேண்டியது அவசியமானது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (த)

# தமிழக அரசியல் தலைவர்களுடன் அரசு உறவை ஏற்படுத்த வேண்டும்

## ஐ.தே.க. கோருகிறது

**இலங்கை அரசின் தவறான வெளியுறவுக் கொள்கைகள் காரணமாகவே அப்பாவி இலங்கைப் பிரஜைகள் வெளிநாடொன்றில் தாக்கப்படும் நிலைமை உருவாகியுள்ளது**

கொழும்பு,செப் 8

தமிழ்நாட்டில் இலங்கை பிரஜைகள் மீது தாக்குதல்கள் நடக்காமல் தடுக்க இலங்கை அரச பிரதிநிதிகள் தமிழ்நாட்டின் அரசியல் தலைவர்களுடன் உறவை பலப்படுத்த வேண்டுமென இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இலங்கை அரசு தமிழ் நாட்டை மறந்துவிட்டு டில்லியில் உள்ள இந்திய அரசியல் தலைவர்களுடன் உறவுகளை பலப்படுத்திய காரணமாகவே இப்படியான இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக ஐ.தே. க நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டின் அரசியல் தலைவர்கள் அனைவரையும் விடுதலைப் புலி ஆதரவாளர்கள் என்ற எண்ணத்தில் இலங்கை அரசு செயல்படுவது தவறு எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை அரசின் தவறான வெளியுறவுக் கொள்கைகள் காரணமாகவே அப்பாவி இலங்கைப் பிரஜைகள் வெளிநாடொன்றில் தாக்கப்படும் நிலைமை உருவாகியுள்ளது என கிரியெல்ல குற்றம் சாட்டினார்.

ஆனாலும் இலங்கை பிரஜைகள் தாக்குதலுக் குள்ளாவதை ஐ.தே.க. வன்மையாக கண்டிக்கிறது எனவும் அவர் கூறினார். (த)

# சட்டத்தரணி ஒருவர் வெட்டிக் கொலை

கொழும்பு,செப் 8

அத்துருகிரிய - கோகந்தர - ஜயகத்மாவத்தை பகுதியில் உள்ள வீடொன்றில் சட்டத்தரணி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அத்துருகிரிய பொலிஸார் குறிப்பிட்டனர்.

கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டவர் 45 வயதுடைய சட்டத்தரணி என அடையாளம் காணப்பட்டுள்ளது. (த)

# காற்று மாறியதால் கடுமையான மழை

கொழும்பு,செப் 8

காற்று வீசும் கோலம் மாறியதன் காரணமாக நாட்டின் பல மாவட்டங்களில் பலத்த மழை பெய்துள்ளது.

மேல், மத்திய, சப்ரகமுவ, கிழக்கு மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறைப் பகுதிகளிலும் மேலும் மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த)

# இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும்

## ஜயலத் எம்.பி. கோரிக்கை

இந்தியாவுக்கு அளித்த வாக்குறுதிகளை இலங்கை அரசு இனியும் காலம் தாழ்த்தாமல் நிறைவேற்ற வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிபொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

சமய வழிபாடுகளுக்காக இந்தியாவுக்கு சென்றிருந்த இலங்கை யாத்திரிகர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் மற்றும் வழிமறிப்புகள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாதவைகளாகும். இவை கண்டனத்திற்குரியவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பல தசாப்தங்களாக இந்து, பௌத்த, முஸ்லிம், கத்தோலிக்கர்கள் சமய வழிபாடுகளுக்காக இந்தியாவுக்குச் சென்று வருகின்றனர். இந்தியாவுக்கு தொப்புள் கொடி உறவாகக் காணப்படும் நம் நாடு, தமிழ் நாட்டிற்கு அருகே அமைந்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை அரசு, இந்திய அரசுடன் மிகவும் சுமுகமான உறவை இராஜதந்திர ரீதியில் வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்கும், இந்தியத் தமிழர்களுக்கும் இடையில் வரலாற்று வாய்ந்த தொடர்பு உள்ளது. அத்துடன், இலங்கைத் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தென்னிந்திய அரசியல்வாதிகள் பலர் கருத்துடன் செயற்படுகிறார்கள் என்பது அனைவரும் அறிந்த விடயமாகும்.

இலங்கை அரசு இந்திய அரசுக்குப் பல்வேறு வாக்குறுதிகளை அளித்துள்ளன. குறிப்பாக 13ஆவது திருத்தத்திற்கு அப்பாற் சென்று தீர்வு காண்பது, அதனூடாக அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதான அரசியல் தீர்வை வழங்குவது போன்ற வாக்குறுதிகளை வழங்கியிருக்கின்றது.

யுத்தம் முடிந்து 3 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையிலும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள், புனர்வாழ்வுப் பணிகள், மனித உரிமைப் பாதுகாப்புகள், வடக்கில் ஜனநாயகத்தை உறுதிசெய்தல் ஆகியவை தொடர்பிலும் விசேடமாக அரசியல் தீர்வு தொடர்பில் இழுத்தடிப்பை மேற்கொண்டு வருகிறது இந்த அரசு.

எனவே, இப்போதாவது இந்தியாவுக்கு அளித்த வாக் குறுதிகளை இலங்கை அரசு காலம் தாழ்த்தாமல் நிறைவேற்ற வேண்டும் - என்று அந்த அறிக்கையில் ஜயலத் குறிப்பிட்டுள்ளார். (த-சி)

# உலக நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கைக்கு படையெடுப்பு

கொழும்பு,செப் 8

பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் 58ஆவது மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 54 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இலங்கைக்குப் படையெடுத்துள்ளனர். நாடு களின் சபாநாயகர்களும், சிரேஷ்ட அமைச்சர்களுமாக 800க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இலங்கை வந்துள்ளனர்.

பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் 58ஆவது மாநாடு நேற்று முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் யுத்தம் முடிவடைந்த பின்னர், நடைபெறும் மிகப் பெரிய சர்வதேச மாநாடு இதுவென்பது குறிப்பிடத் தக்கது. (த)

# தமிழர்கள் சட்டவிரோதமாக ஆஸிக்கு செல்லவேண்டாம்

## பிரபா எம்.பி. வேண்டுகோள்

கொழும்பு,செப் 8

சட்ட விரோதமாக ஆஸ்திரேலியா செல்லும் தமிழர்களின் தொகை அதிகரித்துள்ளது. இவ்வாறான சட்ட விரோதமான செயல்பாடுகளினால் உயிரிழக்கும் அபாயம் பெருகி வருவதால் சட்ட விரோத பயணத்தைத் தவிர்க்குமாறு ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் கேட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யுத்தம் முடிவடைந்து இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் நிலையில் அகதி அந்தஸ்து கோரும் அளவுக்கு நமது நாட்டில் தற்போது பிரச்சினைகள் இல்லை. ஏற்கனவே வடக்கு-கிழக்கிலிருந்து பல இலட்சக் கணக்கான மக்கள் கடந்த கால யுத்தத்தை முன்னிறுத்தி வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து விட்டனர்.

அதில் பாதிப்படைந்தவர்கள் பலர் இருந்தும் ஏனையோர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பிற நாடுகளில் பிரஜா உரிமையைப் பெற்றுள்ளனர். பல இலட்சக் கணக்கான தமிழர்கள் [illegible] இன்று வன்னி [illegible] மதிப்பீட்டின்படி நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் குறைக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாகச் செல்பவர்கள் இன்று கைது செய்யப்படுகிறார்கள். அது மட்டுமின்றி இடையில் படகுகள் கவிழ்ந்து உயிரிழக்க நேரிடுகிறது. இப்படியான உயிரிழப்புகள் சிலவற்றையே நாம் தினசரி கேள்விப்படக் கூடியதாக இருக்கின்றது. பல படகு விபத்துக்கள் வெளியே வெளிச்சத்துக்கு வருவதும் இல்லை. இப்படியான நிலையில் போலி முகவர்களை நம்பி ஆஸ்திரேலியா செல்ல முற்படுவது ஆபத்தானதாகும். வடமாகாண தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது சம்பந்தமாக தமது மாவட்ட மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

ஆகவே சட்டரீதியாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல சந்தர்ப்பம் இருக்கும் பொழுது ஆபத்தான படகு வழிப் பயணத்தை மேற்கொள்ள வேண்டாம்-என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்கள் முக்கிய செயலை பிறரிடம் ஒப்படைக்க கூடாது. கண்ணும், கருத்துமாகச் செயற்படுவதால், எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். தொழில் வளர்ச்சி சீராகும். பணவரவை விட, செலவு அதிகரிக்கும். உறவினர்களின் எதிர்பார்ப்பை ஓரளவு நிறைவேற்றுவீர்கள். உடல்நலம் சீராக இருக்கும்.

**இடபம்:** எவரிடமும் உயர்வு, தாழ்வு இல்லாமல் பழகுவீர்கள். புதியவர்களின் அன்பு மனதை நெகிழ வைக்கும். தொழிலில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். விரும்பிய பொருள் வாங்குவீர்கள்.

**மிதுனம்:** சுற்றுப்புறச் சூழ்நிலை தொந்தரவு தரலாம். உங்களின் பெருந்தன்மை குணம், நன்மைபெற உதவும். கடந்த கால அனுபவம் தொழில் வளர்ச்சிக்கு பயன்படும். தவிர்க்க இயலாத கூடுதல் பணச்செலவு ஏற்படலாம். வெளியூர் பயணம், பயன் அறிந்து மேற்கொள்ளவும்.

**கடகம்:** எந்தச் செயலையும் எளிதாகச் செய்வீர்கள். சூழ்நிலை சாதகமாக இருக்கும். தொழில் சிறந்து அதிக பணவரவு கிடைக்கும். குடும்பத்தின் முக்கியதேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர், உறவினர் கூடுதல் பாசம் கொள்வர்.

**சிங்கம்:** உண்மை, நேர்மை பின்பற்றுபவர்களுக்கு கூடுதல் மரியாதை தருவீர்கள். தொழிலில் இருந்த போட்டி, பொறாமை குறையும். சமூக நடப்பில் புதிய அனுபவம் கிடைக்கும். தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள். எதிர்கால வாழ்வில் நம்பிக்கை வளரும்.

**கன்னி:** உங்கள் தன்மானத்திற்கு சிறு சோதனை வரலாம். பொறுமை குணம் பின்பற்றுவதால், எதிர்கால நலன் சிறக்கும். ஆர்வமிக்க செயல்மட்டுமே தொழில் வளர உதவும். பணத்தேவை அதிகரிக்கும். எதிர்ப்பார்த்த செய்தி வரத் தாமதமாகும்.

**நாளை**

ஆவணி - 24 ஞாயிற்றுக்கிழமை 09.09.2012
திதி: அட்டமி கா.06.32 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் மரண மு. இ 11.01 வரை
சுபநேரம்: 09.03- 10.33 வரை
ராகு காலம்: 04.33- 06.03 வரை

**துலாம்:** நீங்கள் எவருக்கும் தேவையற்ற வாக்குறுதி கொடுக்கக் கூடாது. உடல் நலக்குறைவு செயலில் தடுமாற்றம் தரலாம். அனுபவசாலியின் ஆலோசனை தொழில் வளர உதவும். குறைந்தளவில் பணம் கிடைக்கும். பகை அறிந்து விலகுதல் நன்மை தரும்.

**விருச்சிகம்:** முன்யோசனையுடன் செயற்படுவீர்கள். நடைமுறையில் இருந்த சிரமம் விலகும். தொழிலில் வியத்தகு முன்னேற்றம் ஏற்படும். உபரி பணவரவு மூலதன தேவைக்கு உதவும். உடல் ஆரோக்கியம் பெறும்.

**தனுசு:** மனதில் புதிய ஞானம் பிறக்கும். சவால்களை வென்று சாதனை புரிவீர்கள். தொழில் வளர்ச்சி அபரிமிதமாக இருக்கும். கூடுதல் பணவரவில், நிலுவைக்கடன் அடைப்பீர்கள். சிறந்த மனிதரை நண்பராகப் பெறுவீர்கள். முக்கிய தேவைக்கு பணம் சேமிப்பீர்கள்.

**மகரம்:** மனதில் இனம் தெரியாத கவலை ஏற்படலாம். அயலாரிடம் அதிகம் பேசுவதைத் தவிர்க்கவும். கூடுதல் உழைப்பால், தொழில் நிலை சீராகும். எதிர்ப்பாராத பணச்செலவு ஏற்படலாம். அவசியமற்ற பணக்கடன் பெறக்கூடாது. உறவினர் எதிர்ப்பார்ப்புடன் செயற்படுவர்.

**கும்பம்:** உங்கள் செயல்களில் கூடுதல் கவனம் வேண்டும். மன அமைதியைப் பாதுகாப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். குறைந்த அளவில் பணவரவு கிடைக்கும். தகுந்த ஓய்வு உடல் நலம் சீராக்கும்.

**மீனம்:** ஒருமுக மனதுடன் செயற்படுவீர்கள். தாமதமான காரியம் இலகுவாக நிறைவேறும். தொழில் வளர்ச்சியால், மன மகிழ்ச்சிகூடும். தாராள பணவரவு உண்டு. பொன், பொருள் வாங்க யோகபலன் உண்டு.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2 | 4 | 6 | 8 | |
| 9 | | 2 | | | | | | |
| 8 | | | | | | | 4 | 2 |
| | 7 | 9 | | | 3 | | 6 | |
| 5 | | 8 | | 4 | | 1 | | 9 |
| | 6 | | 1 | | | 7 | 2 | |
| 2 | 1 | | | | 6 | | | 7 |
| | | | | | | 3 | | 8 |
| | 8 | 3 | 7 | 9 | | | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 7 | 2 | 9 | 8 | 1 | 5 | 3 |
| 1 | 8 | 5 | 4 | 3 | 7 | 9 | 6 | 2 |
| 2 | 9 | 3 | 5 | 6 | 1 | 8 | 7 | 4 |
| 5 | 4 | 9 | 6 | 7 | 3 | 2 | 8 | 1 |
| 6 | 1 | 2 | 8 | 4 | 9 | 7 | 3 | 5 |
| 3 | 7 | 8 | 1 | 5 | 2 | 6 | 4 | 9 |
| 7 | 2 | 4 | 3 | 1 | 6 | 5 | 9 | 8 |
| 9 | 5 | 1 | 7 | 8 | 4 | 3 | 2 | 6 |
| 8 | 3 | 6 | 9 | 2 | 5 | 4 | 1 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நீங்காத நினைவலைகள்

தோற்றம் 04 * 01 * 1925 — மறைவு 28 * 11 * 2010



அமரர்
**சின்னையா கிருஷ்ணபிள்ளை**

தோற்றம் 17 * 09 * 1927 — மறைவு 21 * 08 * 2011



அமரர்
**கிருஷ்ணபிள்ளை மணிமாலை**

அட்டமி←திதி→அட்டமி

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம் மனம்
உங்கள் அன்பும் அரவணைப்பும் எங்களை ஆறுதல்படுத்தட்டும்.

நெற்கொழு கிழக்கு,
கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

(22557)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5 மாவட்டங்களிலும் பெரும் பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## சிரமதானம்

தென்மராட்சி, செப்.8

சாவகச்சேரி நகர்ப்பகுதி செருக்கல்பதி பிள்ளையார் ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆலய வளாகச் சுற்றாடலில் சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினால் சிரமதானப் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தச் சிரமதானத்தில் சங்க அனைத்து உறுப்பினர்களையும் பொது மக்களையும் கலந்துகொள்ளுமாறு சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் அறிவித்துள்ளார்.

(3-9)

# சாட்டி மாதா ஆலயத் திருவிழா சுகாதார சேவை விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், செப்.8

வேலணை சாட்டி சிந்தாத்திரை மாதா கோயில் வருடாந்த உற்சவம் நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இந்த ஆலய உற்சவத்தையொட்டி ஆலய வளாகத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள கிணறுகளுக்கு குளோரின் இடப்பட்டுள்ளது.

கிணறுகளில் இருந்து குடிதண்ணீர் பெறுவது தொடர்பாக சுகாதார வைத்திய அதிகாரியின் அனுமதியுடன் பவுசர் மூலம் விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் உறுதியாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. பொதுமக்களின் பாவனைக்கென பத்து தற்காலிக மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆலய வளாகத்தில் சேரும் கழிவுகளைப் போடுவதற்கான குப்பைக் கூடைகள் வைக்கப்பட்டுள்ளன.

அதேநேரம் வாகன பாதுகாப்பு கட்டணமாக சைக்கிளுக்கு 5 ரூபாவும், மோட்டார் சைக்கிளுக்கு 10 ரூபாவும் ஏனைய வாகனங்களுக்கு ரூபா 50 ரூபாவும் அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி மாலை வழிபாட்டுடன் உற்சவம் நிறைவடையும்.(3-7)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், அஞ்சனந்தாழ்வு கொலைவிலக்கி ஆரோக் கிய மாதா தேவாலய வருடாந்தத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நவநாள் ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திருப்பலியும், நற்கருணை வழிபாடும் இடம்பெறும். நாளை காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும், சொரூப ஆசீரும் இடம்பெறும். (3)

* * *

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு அற்புத நர்த்தன விநாயகர் ஆலய பெருந்திருவிழா 10 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை காலை 6 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து மு.ப 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (3)



உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கமும் சென்னை எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகமும் இணைந்து புலம்பெயர் நாடுகளில் தமிழ்க் கல்வியை முன்னெடுப்பதற்கான உடன்படிக்கையை கைச்சாத்திட்டுள்ளனர். இதனை எஸ்.ஆர்.எம்பல்கலைக்கழக துணைவேந்தர் பொன்ன வைக்கோவிடமிருந்து உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் வேல் வேலுப்பிள்ளை (அமெரிக்கா), இளைஞர் அணித் தலைவர் ச.சஜீவன் (இலங்கை), செயலாளர் துரைகணேசலிங்கம் (ஜேர்மனி), கல்விக்கழகப் பொறுப்பாளர் வி.எஸ். துரைராஜா (கனடா), பொருளாளர் விசு. செல்வராஜா (பிரான்ஸ்) ஆகியோர் பெற்றுக்கொள்கின்றனர். அருகில் துணைப் பேராசிரியர் ஒருங்கிணைப்பாளர் சுந்தரம் (எ)

### சுன்னாகம் வாழ்வகத்தின்
# நிறுவுநர் நினைவு நாளும் நினைவுப்பேருரையும்

யாழ்ப்பாணம், செப். 8

சுன்னாகம் வாழ்வக நிறுவுநரான கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் நினைவு நாளும், நினைவுப்பேருரையும் சுன்னாகத்தில் உள்ள வாழ்வகத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

வாழ்வகத் தலைவர் ஆ. ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராகவும், உடுவில் பிரதேச செயலர் மு. நந்தகோபாலன், வடக்கு மாகாண விசேட கல்வி இணைப்பாளர் திருமதி நிசாந்தி பெர்னாண்டோ, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் வி.கே இரத்தினகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ் தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் உலக சுகாதார நிறுவன ஆலோசகர் டாக்டர் ந.சிவராஜா நினைவுப்பேருரையை ஆற்றவுள்ளார். (எ)

# குழாயில் வருமா தண்ணீர் நவாலி தெற்கு மக்கள் ஏக்கம்

நவாலி, செப்.8

நவாலி தெற்கு ஜே/136 கலையரசு வீதிக்கு கடந்த நான்கு நாள்களாக குடிதண்ணீர் விநியோகம் சீராக மேற்கொள்ளப்படாமையினால் அந்தப் பகுதி மக்கள் பல கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இந்தப் பகுதிக்கு பொக்கணையிலிருந்து சில காலம் குழாய் மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. தற்போது கடந்த நான்கு நாள்களாக இங்கு பொருத்தப்பட்ட குழாய்களுக்கு தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை. சில வேளைகளில் திடீரென ஐந்து அல்லது பத்து நிமிடங்களுக்கு மட்டும் தண்ணீர் வழங்கப்படும். தற்போது நிலவும் அதிக வறட்சி காரணமாக இங்குள்ள கிணற்று நீரும் வற்றி விட்டதால் குழாய் மூலம் தண்ணீர் வருமோ என்று சிறியோர் முதல் பெரியோர் வரை நீண்ட நேரம் காத்திருந்து விட்டு குடங்கள், வாளிகள் கான்களுடன் பல மைல் தூரத்துக்குத் தண்ணீர் பெறுவதற்கு அலைந்து திரிவதையும் காணமுடிகின்றது. சம்பந்தப்பட்டவர்கள் இந்த மக்களின் அவல நிலையைப் போக்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் என்று கோரப்பட்டுள்ளது. (3-100)

## மணமக்கள் தேவை

* 84இல் பிறந்த, 8இல் செவ்வாய், 50 பாவமுடைய, லண்டனில் மேல்படிப்பு முடிந்து லண்டனில் வசிக்கும் மணமகளுக்கு லண்டனில் பிரஜா உரிமை பெற்ற மணமகன் தேவை.
* 67இல் பிறந்த, செவ்வாய் பாவமில்லாமல், 24 பாவமுடைய ஆசிரியருக்கு ஆசிரியர் மணமகள் தேவை.
* 81இல் பிறந்த, 8இல் சூரியனும் செவ்வாயும் 97 பாவமுடைய B.Sc,M.Sc. சேவையர் மணமகனுக்கு பட்டதாரி மண மகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.
* 83இல் பிறந்த, 8இல் செவ்வாய், 67பாவமுடைய MBBS டாக்டருக்கு டாக்டர் மணமகள்தேவை.
* 80இல் பிறந்த, 8இல் செவ்வாய்,90 பாவமுடைய சிவில் இஞ்சினியர் மணமகனுக்கு இஞ்சினியர் மண மகள் தேவை.

தொடர்பு:
காலக்கண்ணன் திருமணசேவை, இல.320,கோயில் வீதி, நல்லூர்.
077 607 0862
(22606)(5-6-7)

## கார் விற்பனைக்கு

மஸ்டா (MAZDA - JAPAN) கார்
17 - XXXX விற்பனைக்கு.
தொடர்புகளுக்கு: 077 9184553, 075 8380951
(22622)(6-7-8)

## வாகனம் வாடகைக்கு

மகேந்திரா றக் நாள்/மாத வாடகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 3305 241
(22607) (45.6.7)

## வீடு விற்பனைக்கு

பொ. கிருஷ்ணபிள்ளை (50/1), 89/7, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம் எனும் இடத்தில் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 908 2619 .
(22614)(6-7-8)

## கோழிக்குஞ்சு விநியோகம்

1½மாதம் வளர்ச்சியடைந்த நல்லின சிவப்பு, வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. றாஜீவ், நவாலி வீதி, ஆனைக் கோட்டை.
T.P.NO : 077 6090926
(22496)(6.7.8)

## PERSONAL CLASSES

பொருளியியல்
B.A பட்டம் பெற்ற ஆசிரியரால்தனியாளுக்கும்,
S Ê UPÐ US ®Ã k PÐ US Á ¢x PØÖ zu µ" £k ®.
தொடர்பு : 077 1185552
(22617)(6-7-8)

## வாகன விற்பனை

டாட்டா(கன்ரர்) Model No.713-S வல்லிபுர கோயில் மண் பதிவுடன் விற்பனைக்கு உண்டு.
தொ.பே.: 077 763 0152
(18738)(5-6-7)

## ஐயர் தேவை

சிவகுருநாதர் வீதியில் அமைந்துள்ள, தோப்பு மாணிக்கப் பிள்ளையார் கோயிலைப் பராமரித்து, இரண்டு நேரப் பூசை செய்ய ஐயர் தேவை. ஐயர் குடும்பத்துடன் தங்குவதற்கு வீடு வாடகையின்றி வழங்கப்படும். நிவேதனம் வழங்கப்படமாட்டாது.
தொடர்பு: 077 3548 333
(22507) (45.6.7)

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

By: A. BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்
10.09.2012 திங்கள் மாலை 4 மணி
திங்கள் / புதன் வகுப்புக்கள்
இடம் : 488, ஆஸ்பத்திரி வீதி
(ரெம்பிள் வீதி சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம்.
(22613)(6-7-8)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் இளையதம்பி இராசரத்தினம்
(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (08.09.2012) சனிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ் ஆத்மா சாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து உதவிபுரிந்த நல் உள்ளங்களிற்கும், ஆறுதல் வார்த்தை கூறியவர்களுக்கும், தொலைபேசிமூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், நினைவுப்பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் மற்றும் இரங்கலுரை நிகழ்த்தியவர்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோர்க்கும் எமது நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
(சரவணபவானந்த வித்தியாலய வீதி)
குடும்பத்தினர்.
(சி/3128)(6.7.8)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு
22.08.1922



இறப்பு
08.08.2012



### திருமதி செல்வசியாமணி இராசரத்தினம்
(கச்சாயில் இரத்தினம்)

அன்புடனே அரவணைத்து
பண்பான வார்த்தை பேசி
நேசமுடன் எமை வளர்த்த
பாசமிகு நெஞ்சமே!
திங்கள் ஒன்று கழிந்தாலும்
தீரவில்லை எம் சோகம்
ஆத்ம சாந்தி வேண்டி
ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி!

எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தியறிந்து உடன் வந்து உதவிய அன்பு நெஞ்சங்களுக்கும் மரணச் சடங்கில் பங்கு பற்றியோருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

95/1, இராஜவீதி,
திருநெல்வேலி.
(22554)(5-6-7)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்

திருமதி
## அன்னம்மா நல்லையா



உசன், மிருசுவிலை பிறப்பிடமாகவும், இல.34, ஆனந்தநகர், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா நல்லையா நேற்றுமுன்தினம்(06.09.2012) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்- தங்கம்மா தம்பதியரின் மகளும் செல்லப்பா-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற செல்லப்பா நல்லையா (ஸ்தாபகர் -உரிமையாளர்,கமலா ஸ்ரூடியோ -கிளிநொச்சி) அவர்களின் ஆருயிர் மனைவியும், நடராசா, காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் சந்தானலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிறேம்நாத்,(கமலா ஸ்ரூடியோ), கலா(கட்டடங்கள் திணைக்களம்),மாலா (இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்- கிளிநொச்சி), லதா,ரகுநாத் (பொறியியலாளர்- லண்டன்), கோபிநாத்(பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம்-வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயும்,ஸ்ரீமதி யோகேந்திரன்(யாழ். பல்கலைக்கழகம்), குகதாசன், சிவஞானம் (கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம்),தயாளினி(லண்டன்), சுகன்யா (பொது வைத்தியசாலை-வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியும், சசிகரன்(பிரதேச சபை- வேலணை), சசிரேகா (கொமர்ஷல் வங்கி- சுன்னாகம்), தர்ஷிகா (ATI-Jaffna), அபிராமி, பகீரதி, பிரகதீஸ்வரன், பிரகலாதன், லகுவணா, நர்த்தனா, துவீபன், துவாரகா, டர்ணிகா,கபில்நாத், சுயனிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கரிஷ்ணாவின் பாசமிகு பூட்டியும், பவளம்மா, கமலம், குமாரசாமி, இராஜதுரை, இராஜரத்தினம், தர்மலிங்கம் (கோபி அண்ணை) ஆகியோரின் அண்ணியும்,ச.கோகிலா(யா /இந்து ஆரம்ப பாடசாலை), வி.ஜமிலா(மல்லாகம் மகா வித்தியாலயம்), ஞா.றஞ்சனா(நல்லூர் தெற்கு விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்), நி.சங்கீதா ஆகியோரின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.09.2012)ஞாயிற்றுக்கிழமை அவரின் மகளின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் மு.ப. 10மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

8ஏ,கலட்டி
அம்மன் வீதி,
கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம். (22625)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் 32 வருடங்கள் சேவையாற்றிய முன்னாள் ஊழியர்

## ச. இரகுபதி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்
யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்,
யாழ்ப்பாணம். (22655)(6.7.8)

# ஈரவிழிகளுடன் 3ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
07.03.2000

மறைவு
08.09.2009



## அமரர் ச.சந்துதன்

எங்கள் அன்புச் சந்துக்குட்டி

எங்களுக்கு ஆசை முகம் காட்டி அன்பு மொழி பேசி அனைவரையும் கவர்ந்தவனே
எம் வாழ்வில் நீ தானடா நிலையான சொத்தென இருந்தோம்
எங்களுக்கு நீ தானடா உதவி என எண்ணினோம்
எல்லாம் இமை மூடி திறப்பதற்குள் கனவாக்கி சென்றுவிட்டாய்
நாம் வாழும் நாள்கள் எல்லாம் உன் நினைவுடன்தானடா வாழ்வோம்

உன் பிரிவால் வாடும்
அன்பு மாமா, அத்தை, ரஜீவன் அத்தான், கேதா அண்ணா, மதுரா மச்சி, நவீன், தீபன் அண்ணா, மயூரா மச்சி, லக்ஷயன்

மயூராபதி
கட்டபாரி லேன்,
ஆனைக்கோட்டை

மாமா குடும்பத்தினர்.

# எட்டாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16.12.1917

மறைவு
08.09.2004



அமரர்
## பண்ணாகம் பண்டிதர்,

ஐயா தங்கள் மறைவு எட்டு ஆண்டுகளைக் கடந்துவிட்டது. நாம் மறவாது தங்களால் உருவாக்கப்பட்ட அறக்கட்டளைப் பணியை தடையின்றி செய்து வருகின்றோம்.
விசவத்தனை வேலவர் ஆலய ம்ணிஓசை கேட்பதும்,தாங்கள் இயற்றித் தந்த பிள்ளைத் தமிழ் நூல் பாடல்கள் பாடி முருகன் பாதத்தை வணங்குகின்றோம்.

பண்ணாகம்,
சுழிபுரம்.

அறக்கட்டளை
நினைவுக் குழுவினர்.

# மரண அறிவித்தல்

## செல்வி முருகர் சோதிமலர்

(கிளி. புனித அந்தோனியார் றோ.க)



முரசுமோட்டை பழைய கமத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும், கிளி/ புனித அந்தோனியார் றோ.க. பாடசாலையின் அதிபருமாகிய செல்வி முருகர் சோதிமலர் நேற்று முன்தினம் (06.09.2012) வியாழக்கிழமை அதிகாலை இந்தியா வில் காலமா னார்.

அன்னார் காலஞ்சென்ற முருகர்- பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், அழகுசவுந்தரி, ஞானசவுந்தரி, ராஜேஸ்வரி (லண்டன்), ஸ்ரீஸ்கந்தராசா (விடத்தற்பளை), ஸ்ரீகிருஸ்ணகுமாரி (முரசுமோட்டை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற கந்தவனம், கந்தசாமி, தெய்வேந்திரன் (லண்டன்), ஜெகதா (விடத்தற்பளை), தவநேசன், ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற சிவாஸ்கரன், விஜிதா, அன்பழகன் (பிரான்ஸ்), றஜிதா (முரசுமோட்டை), கலையரசன் (வள்ளிபுனம்), கிருபன் (இந்தோனேசியா), அனந்திகா ( OXFARM நிறுவனம்), நவச்சந்திரன் (கைதடி), தயாபரி (கைதடி), தர்சிகா (கைதடி), தனுசியா (கைதடி), தூருகேசி (லண்டன்), அங்குசன் (லண்டன்) அங்கவை, ஆதித்தன் (கிளி/ முருகானந்த ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் சிறிதாயும், சிற்பரன், பார்கவி, தேன்மொழி (விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்) ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.09.2012) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகாக முரசுமோட்டை ஐயங்கோயிலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(19321)(6-7-45)

# அறிவித்தல்

2011.09.30 ஆம் திகதி, பதிவுத்தரவுபெற்ற நில அளவையாளர் சிதம்பரப்பிள்ளை வாமதேவன் அவர்களால் பூர்வாங்க அளப்பனவு செய்து தயாரிக்கப்பட்ட 533 ஆம் இலக்க வரைபடத்தின்படி நிலப்பரப்பு 12 - குளி 11.92 விஸ்தீரணம் கொண்டதும், திக்கெல்லை கிழக்கு: அந்தோணிப்பிள்ளை, மரியாம்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்கும், வடக்கு:- ஒழுங்கை, மேற்கு:- அருளப்பர் சூசைப்பிள்ளையின் உரிமைக்காரருக்கும், தெற்கு:- பரமர் நாராயணசாமியின் உரிமைக்காரருக்கும் அடங்கியுள்ள ''வராளை'' என்னும் காணிக்குள் சொரியற்பங்கு உரிமை கோருபவர்கள், நெல்லண்டை வீதி, தும்பளை, பருத்தித்துறை என்ற முகவரியில் வசிக்கும் சட்டத்தரணி பாலசிங்கம் சுப்பிரமணியம் அவர்களிடம் நேரில், தமது உரிமைகளை நியாயப்படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்படி வேண்டுகிறேன். இந்த நடவடிக்கை, சமாதானமான முறையில் குறிப்பிட்ட காணியைப் பிரிவிடல் செய்யும் தீங்கியலற்ற முயற்சியாகும். பத்திரிகை விளம்பரத் திகதியிலிருந்து முப்பது நாள்களுக்குள் உரிமை கோரப்படவேண்டுமென்பதையும் இத்தால் அறியத் தருகிறேன்.

மேற்குறிப்பிட்ட ஆதனத்தில் நிலப்பரப்பு 8 3/8 இல் சொரியலாய் நாலிலொரு பங்குக்கு, எனது கணவர் ஐயாத்துரை இராசதுரை பேரிலும், நிர்மலா என்ற நாமம் கொண்ட என் பேரிலும் 1992.02.22 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் க.இராசசேகரம் முகதாவில் 978 ஆம் இலக்க அறுதி உறுதி முடிக்கப்பட்டுள்ளது என்பதையும் இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

ஐயாத்துரை இராசதுரை பெண் நிர்மலா.

(22616) (2-6-7)

A/L பரீட்சைகளின் பின் உங்கள் அடுத்த இலக்கு !



Mega
Education Excellence 19 years
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களுக்கான தொழில்சார் பயிற்சி சீஎஸ்சீ - ஏசியனிடமிருந்து மட்டுமே.

புலமைப்பரிசிலுக்கான பாடநெறிகள்

| | |
|---|---|
| Computer Applications | 3D Studio Max & Maya |
| Office Administration | Tally Computerized Accounting |
| Visual Programming | Hardware Engineering |
| Web Design & Development | Spoken English |
| Graphics Design & Multimedia | Degree Access Programme |

Win 75% Scholarship

நாளை மெகா புலமைப்பரிசில் இலவச பரீட்சை
பங்குபற்றுங்கள்..! பயனடையுங்கள்..!

For Whom - யார் இதில் பங்குபற்றலாம்?
இம்முறை உயர்தர பரீட்சை எழுதிய மாணவ, மாணவியர், கொம்பியூட்டர் கல்வியில் ஆர்வமுள்ள 14 வயது மற்றும் அதற்கு மேற்பட்டோர் அனைவரும் பங்குபற்றலாம். பரீட்சை 30 நிமிடங்கள் மட்டுமே.

About Questions - வினாக்கள் எவ்வாறானவை?
இலகுவான 25 பொது அறிவு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் Multiple Choice Questions வகையைச்சார்ந்தவை வினாத்தாள் தமிழ் அல்லது ஆங்கிலத்தில்.

ஸ்கொலர்ஷிப் பரீட்சை
செப்டெம்பர் 9th ஞாயிறு

ஸ்கொலர்சிப் மூலம் CSC-ASIAN இல் சேர்ந்து படிப்பது உங்கள் படிப்புக்கான பெற்றோர்களின் செலவை குறைப்பதாகும்

- ASIAN COMPUTER EDUCATION

Scholarship - புலமைப்பரிசில்
புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவ, மாணவியர் பெறும் மதிப்பெண்களுக்கமைய முறையே 50%,60%, மற்றும் 75% வரையான ஸ்கொலர்ஷிப் வழங்கப்படும்.

Books & Diploma - பாடப்புத்தகமும் சான்றிதழும்
அனைத்து பாடநெறிகளுக்கும் பயிற்சிப்புத்தகங்கள் இலவசமாகவும் பரீட்சைகளின் இறுதியில் ISO 9001 : 2008 சர்வதேச அங்கீகாரம் பெற்ற இந்திய டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இலவச பரீட்சை அனுமதிகளையும் மாதிரி வினாத்தாளையும் (Model Paper) எமது பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளவும்

(சி/3149)

CSC-ASIAN COMPUTER EDUCATION
ISO 9001:2008 Certified Institution

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ். நகர் | நல்லூர் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | வவுனியா |
| 2G, Stanley Road, | 9, Kumara Veethy, | Kadukkanni Lane, | Kodikamam Road, | A9 Road, Ananthapuram, | 192,Kurumankadu Junct. |
| Tel : 021-2225677 | Tel : 021-2229191 | Tel : 021-2270267 | Tel : 021-2262399 | Tel : 021-2283925 | Mannar Rd. Tel : 024-2226050 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டு மரங்களை வெட்ட புதுக்குடியிருப்பில் தடை

புதுக்குடியிருப்பு,செப்.8

**புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் வீடுகள் அமைப்பதற்காகவும் காணிகளுக்கு வேலியிடுவதற்காகவும் அனுமதியின்றி பலர் காட்டு மரங்களை வெட்டத் தொடங்கியுள்ளனர். இத்தகைய நடவடிக்கைகளுக்கு –காட்டு மரங்களை அனுமதியின்றி வெட்டுவதற்கு– தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.**

**காணி இல்லாதவர்கள் தங்கள் குடும்ப விவரங்களைச் செயலகத்தில் பதிவு செய்தால் விசாரணையின் பின்னர் முன்னுரிமை அடிப்படையில் காணி வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.**

மீள்குடியமர்த்தப்பட்டவர்களில் பலர் வீடு கட்டுவதற்காக காட்டு மரங்களை எவ்வித அனுமதியும் இன்றி தம் இஷ்டப்படி வெட்டி வருகின்றனர். இத்தகையவர்களின் செயலால் புதுக்குடியிருப்பு காட்டுவளம் அழிந்து போய்விடக் கூடிய அபாயம் குறித்துப் பிரதேச செயலரின் கவனத்துக்குத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்தே அனுமதியின்றி மரம் வெட்டுவதைத் தடை செய்துள்ள பிரதேச செயலர் அத்துமீறி மரம் வெட்டுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், வீடு கட்டுவதற்குக் காணி இல்லாதவர்கள் தங்கள் முழு விவரங்களையும் பிரதேச செயலகத்துக்கு அறியத் தருமாறும் விசாரணையின் பின் காணி வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

இதேவேளை-

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட சுமார் 900 குடும்பங்கள் வீடு கட்டுவதற்குக் காணி வழங்குமாறு பிரதேச செயலருக்கு விண்ணப்பித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்திலிருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும் உறவினர், நண்பர் வீடுகளிலும் வாழ்ந்து வந்த குடும்பங்களில் 17 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்கள் படிப்படியாகச் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளன.

இவ்வாறு மீள்குடியேறுவதற்காக விண்ணப்பித்தவர்கள் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட பிரதேச செயலர் மாகாண காணி ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய வீடு கட்டுவதற்குரிய காணி வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (ங-க-115)

## மறந்தது பஸ் டிப்பரில் மக்கள்

முல்லைத்தீவு,செப்.8

ஒட்டுசுட்டான் - மாங்குளம் வீதிக்கான பஸ் சேவை சீராக இடம்பெறாததால் வீதி வேலைகளுக்கு ஈடுபடுத்தப்படும் டிப்பர் வாகனங்களையே பொதுமக்களும், பாடசாலை மாணவர்களும் போக்குவரத்துக்காக நம்பியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மாங்குளம் - ஒட்டுசுட்டான் பிரதான வீதியில் போக்குவரத்துச் சேவைகள் சீராக இடம்பெறுவதில்லை. இதனால் மாங்குளம், கரிபட்ட முறிப்பு செல்லும் மாணவர்கள் பாடசாலைகளுக்கு உரிய நேரத்தில் சமுகமளிக்க முடியாத நிலையிலுள்ளனர்.

மேலும் இவர்கள் நெடுங்கேணி ஒளியங்குளம் ஊடாகப் பலமைல் தூரம் சென்றே மாங்குளத்துக்கு பயணிக்க வேண்டியுள்ளது. இதனால் பயணிகள் நீண்டநேரம் காத்திருந்து டிப்பர் வாகனங்களை மறித்து அதில் பிரயாணம் செய்ய வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது.

(ங-க-500)

## அணைகளை அழிக்க அனுமதி

அக்கராயன்,செப்.8

மாந்தை கிழக்கில் போர் காலத்தில் அமைக்கப்பட்ட பெரிய மண் அணைகளை அழிப்பதற்கான அனுமதிகள் கிடைக்கப் பெற்றிருப்பதாக மாந்தை கிழக்குப் பதில் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்துள்ளார்.

விநாயகபுரம் கிராமத்தில் நான்கு கிலோ மீற்றர், பாலைப் பாணியில் ஏழு கிலோ மீற்றர், நட்டாங்கண்டலில் இரண்டு கிலோமீற்றர், மூன்று முறிப்பில் இரண்டு கிலோமீற்றர், பூவரச்சங்குளத்தில் இரண்டு கிலோ மீற்றரென 17 கிலோ மீற்றர் தூரம் கொண்ட மண் அணைகளே அழிக்கப்படவுள்ளன.

இந்த மண் அணைகள் அழிக்கப்படுவதால் விவசாய முயற்சிகளை இந்தப் பிரதேசத்தில் பெருமளவில் முன்னெடுக்க முடியுமெனக் கூறப்பட்டுள்ளது.

(ங-க-18)

## மாசடைந்துள்ள கிணறுகள்

முல்லைத்தீவில் கிணற்று நீர் மாசடைந்த நிலையில் காணப் படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இங்கு கடும் வறட்சி நிலவுவதால் கிணறுகள் நீர் வற்றிய நிலையில் காணப்படுகின்றன.

அத்துடன் கிணற்று நீரும் கரிய நிறமாகக் காணப்படுகின்றது. இதனை இறைத்துத் துப்புரவு செய்தால் உள்ள நீரும் இல்லாது போய்விடுமோ என்ற அச்சத்தில் இந்த நீரையே மக்கள் பருகி வருகின்றனர்.

## 'ஜெ' பற்றிய சுலோக அட்டை – ஜனநாயக மக்கள் முன்னணி கண்டனம்

தமிழகத்துக்கு சுற்றுலா சென்ற இலங்கைப் பயணிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து கொழும்பில் ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றிருந்தது. இதில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை ஆபாசமான உடையில் சித்தரிக்கும் சுலோகங்கள் ஏந்தப்பட்டமை எமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான எஸ்.பாஸ்கரா.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

ஆறுகோடி தமிழ் மக்களின் அதிகாரபூர்வ தலைவரான ஜெயலலிதாவை ஆபாச உடையில் அநாகரிகமான முறையில் சித்தரித்த சுலோக அட்டைகளை வெளியில் இருந்து கொண்டு வந்த இனவாத சக்திகளே தமிழ் வர்த்தகர்களின் கையில் திட்டமிட்டு வழங்கியிருக்க வேண்டும். இதுகுறித்து நாம் கவலை கொள்கின்றோம்.

சாதாரண மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை எதிர்க்கும் நிகழ்வு இந்திய, தமிழக இனவாத எதிர்ப் பாளர்களால் பயன்படுத்தப்படக் கூடாது. - என்றுள்ளது. (ங)

## கல்லெறிவீச்சுக்கு இலக்கானது ஆலயம்

மன்னார்,செப்.8

மன்னார் கரசல் புனித கப்பலேந்தி மாதா ஆலய திருவிழா நேற்று இரவு இடம் பெற்றுக்கொண்டிருந்த வேளை, ஆலயம் இனந்தெரியாத நபர்களின் தாக்குதலுக்கு உள்ளானதாக மன்னார் பிரதேச சபைத் தலைவர் நேற்றிரவு உதயனுக்கு தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது "மேற்படி மாதா ஆலய திருவிழா இன்று சனிக்கிழமை நடை பெறுகிறது. இதற்கு முன்னேற்பாடாக நேற்று இரவு விசேட திருப்பலிப் பூசை நடைபெற்ற போது இனந் தெரியாத நபர்கள் ஆலய வளாகத்துக்குள் புகுந்து கற்களை வீசியும் கூச்சலிட்டும் பூசையை குழப்ப முயன்றனர்.

இந்தச் சம்பவத்தில் பக்தர்கள் இருவர் கல் எறி வீச்சுக்கு உட்பட்டு காயமடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்' நிலைமையை கட்டுப்படுத்த பொலிஸார் வரவழைக்கப் பட்டுள்ளனர்.

ஆலயத் திருவிழா சிறப்பாக இடம்பெறுவதற்கு பொலிஸார் உரிய பாதுகாப்பு களை வழங்குவதாக உறுதியளித்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

(16 -12)

யாழ்.போதனா வைத்தியசாலை தாதியர் விடுதியில் புகுந்த இனந்தெரியாத நபர் தென்னிலங்கையைச் சேர்ந்த பெண் தாதிய உத்தியோகத்தரை கத்தியால் கீறி காயப்படுத்தியதைக் கண்டித்து நேற்று யாழ்.போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்கள் ஒரு மணி நேர கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

( 4-14)




## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பம் ஞானவெளிச்சம்



உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைச் சேர்ந்த திருமதி புஸ்பம் ஞானவெளிச்சம் நேற்று (07.09.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மைக்கல் செல்லையா- அன்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான தாவீதுராசா- பாக்கியம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஞான வெளிச்சத்தின் அன்பு மனைவியும், வொட்கின்சன் (USAID) றொமில்டா, டல்சி, ஆகியோரின் பாசமிகு தாயும், மரியதயாணி, ரஞ்சித் நிச்சாட் ஆகியோரின் மாமியும், லீலா, யேசுதாஸன், சின்னமலர் (இத்தாலி), கமலா (இத்தாலி), பிறேமா (இத்தாலி) ஆகியோரின் சகோதரியும், ஸ்ரனிஸ்லோஸ் (பிரான்ஸ்), விக்ரோறியா, அருட் சகோதரி செபமலர் (அ.கா), புஸ்பராணி, ரவிநாயகி (சிங்கப்பூர்), யோகராணி (ஆசிரியை, றோ.க.த.க உரும்பிராய்), செல்வநாயகி (ஹட்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி நாளை மறுதினம் (10.09.2012) திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு புனித மிக்கேல் ஆலயத்தில் இடம் பெற்று, பூதவுடல் புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ஞா.வொட்கின்சன் (மகன்)
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
(22836)(3.14)


## கவிதைத் தொகுப்பு நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம்,செப் 8

ந.மயூரரூபனின் 'நீயுருட்டும் சொற்கள் ' கவிதைத் தொகுப்பு நூல் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு தூண்டி கேணியடி திருநெல்வேலியிலுள்ள மண்டபத்தில் வைத்து வெளியிடப்படவுள்ளது.

சோ.பத்மநாதன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

## ஆலயத் திருவிழா

மன்னார் எழுத்தூர் பகுதியில் புனித அடைக்கல அன்னை ஆலயத் திருவிழா இன்று காலை இடம்பெறவுள்ளது.

மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப் ஆண்டகை தலைமையில் காலை 6.30 மணிக்கு கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

## களைநாசினிகள் கைவிட்டதால் தலையில் கைவைக்கும் விவசாயிகள்

மாங்குளம்,செப்.8

களைநாசினிகள் களைகளை அழிப்பதற்குத் தவறியதால் நெல் விளைச்சலில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக துணுக்காய் பிரதேச விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் பாண்டியன்குளம் துணுக்காய் ஆகிய இரு பெரிய பிரதேசங்கள் உள்ளடங்குகின்றன. இங்கு காலபோகத்தின் போது 4 ஆயிரத்து 500 ஏக்கரிலும், சிறுபோகத்தின்போது ஆயிரத்து 125 ஏக்கரிலும் நெற்பயிர்ச் செய்கை இடம் பெறுவது வழக்கமாகும்.

இம்முறை சிறுபோகத்தின் போது வயல்களில் முளைத்துக் காணப்பட்ட கோரைப்புல்லை அழிப்பதற்கென பயன்படுத்தப்பட்ட களைநாசினிகள் எதிர்பார்த்த அளவுக்கு களைகளை அழிக்காததால் விளைச்சலில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

வழக்கமாக மூன்று ஏக்கரில் நெல் பயிரிட்டு சுமார் 125 மூடை நெல்லை அறுவடை செய்த விவசாயி ஒருவர் இம்முறை 35 மூடைகளையே பெற முடிந்தது.

மேலும் இந்த நெல்லைக் கூட விற்பனை செய்ய முடியாதநிலையில் விவசாயிகள் உள்ளனர்.

தற்போது இங்கு விளைந்த நெல்லைத் தனியாரே கொள்வனவு செய்து வருகின்றனர். அவர்கள் மிகக் குறைவான விலையை வழங்கி வருவதோடு ஒரு மூடைக்கு 70 கிலோவுக்குப் பதிலாக 75 கிலோவைப் பெற்றுச் செல்கின்றனர்.

இதனால் விவசாயிகள் வங்கிகளில் பெற்ற கடன்களைச் செலுத்துவதில் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக அதிகாரிகள் கூடிய கவனமெடுக்க வேண்டுமெனவும் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை செயற்படாத களைநாசினிகள் தொடர்பாக துணுக்காய் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயத் திணைக்கள அதிகாரியான இளங்கீரனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது இந்தக் களைநாசினிகளின் மாதிரிகள் பரிசோதனைக்கென அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் முடிவுகள் கிடைத்ததும் இவை தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

(ங-க-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவுப் பிரதேச உதைபந்தில் வெற்றிக்கேடயம் உதயசூரியனுக்கு



யாழ்ப்பாணம், செப்.8

விளையாட்டுத்துறை அமைச்சினதும் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினதும் வடமாகாண விளையாட்டுத்துறையினதும் ஏற்பாட்டில் தேசிய உதைபந்தாட்ட அணிக்கு வீரர்களை தெரிவு செய்வதற்காக முதற்கட்டமாக நெடுந்தீவு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 21 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் நேற்று முன்தினம் நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

இந்தச் சுற்றுப் போட்டியில் நான்கு அணிகளே கலந்து கொண்டதால் தகுதிச் சுற்றுக்கள் இடம்பெறாமல் நேரடியாக அரையிறுதிப் போட்டிகள் நடைபெற்றன. அரையிறுதியில் ஓர் அணி எந்த அணியோடு மோத வேண்டும் என்ற விடயம் திருவுளச் சீட்டு மூலம் தீர்மானிக்கப்பட்டது.

இதன்அடிப்படையில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் ஐக்கியதீபம் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக் கழகம் களமிறங்கியது. இதில் உதயசூரியன் அணி அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தி, ஐக்கியதீபம் அணியைத் திணறடித்தது. ஆட்ட நேர இறுதியில் உதயசூரியன் அணி 2 : 0 என்ற ரீதியில் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது.

மற்றைய அரையிறுதி ஆட்டத்தில் சென்.அன்ரனீஸ் அணியோடு சென். ஜோன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.இதில் இரு அணிகளும் ஆட்ட நேர நிறைவில் எதுவித கோல்களையும் பெறவில்லை. எனவே சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி, தோல்வி தீர்மானிக்கப்பட்டது. சமநிலை தவிர்ப்பு உதை வாய்ப்பை சரிவரப் பயன்படுத்திக் கொண்ட சென்.அன்ரனீஸ்விளையாட்டுக்கழகம் 3 : 1 என்ற ரீதியில் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது.

அரையிறுதி ஆட்டங்களில் வெற்றிபெற்ற, உதயசூரியன் விளையாட்டுக்கழகமும், சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகமும் இறுதிப்போட்டியில் ஆக்ரோஷத்தோடு மோதிக்கொண்டன. சம பலம் பொருந்திய இரு அணிகளும் விட்டுக் கொடாத ஆட்டத்தை வெளிப்படுத்தியதால், இறுதிவரை எந்தவொரு கோலையும் அவற்றால் அடிக்கமுடியவில்லை. எனவே இறுதிப்போட்டியின் வெற்றியையும் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் தீர்மானிக்க முடிவாகியது. முதலாவது சமநிலை தவிர்ப்பு வாய்ப்பில் இரு அணிகளும் தலா மூன்று கோல்களை அடித்து சமநிலையில் நின்றன. மேலதிகமாக வழங்கப்பட்ட வாய்ப்பை உதயசூரியன் அணி கோலாக்க, அன்ரனிஸ் அணி கை நழுவ விட்டது. எனவே இறுதிப் போட்டியில் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் 4 : 3 என்ற ரீதியில் வெற்றி பெற்று வெற்றிக் கேடயத்தினைத் தனதாக்கி கொண்டது

இந்தப் போட்டிக்கு விருந்தினர்களாக நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறி நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் தா.றெக்சியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இப் போட்டியில் சிறந்த வீரர்களைத் தெரிவு செய்யும் பணியில் யாழ். மாவட்ட உதைபந்தாட்ட பயிற்றுநர் பா.முகுந்தன், நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் ஏ.சச்சிதானந்தன் , நெடுந்தீவு பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் க.மயூரன் நெடுந்தீவு பிரதேச உதைபந்தாட்ட வீரர் அருண், நெடுந்தீவு பிரதேச செயலக உத்தியோகத்தர் க.பிரதீஸ்வரன் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர்.

(ந-23)

# இலங்கைக் கிரிக்கெட் பிரபலங்கள் வருகிறார்கள் இன்று வடபகுதிக்கு



இலங்கைக் கிரிக்கெட் அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன உள்ளிட்ட இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள் ஆறு பேர் இன்று வடபகுதிக்கு வருகைதரவுள்ளனர்.

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானத்துக்கு இலங்கை அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன, இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் நட்சத்திர வீரருமான குமார் சங்கக்கார ஆகியோர்வருகைதந்து முரளி நல்லிணக்கக்கிண்ண சுற்றுத் தொடரின் ஆரம்ப நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணம் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள முரளி நல்லிணக்கக் கிண்ண ஆட்டங்களை புயல் வேகப் பந்து வீச்சாளர் லசித் மலிங்க, இலங்கை அணியின் உப தலைவர் அஞ்சலோ மத்தியூஸ், வேகப் பந்து வீச்சாளர் நுவான் குலசேகர, இளைய நட்சத்திர வீரர் டினேஸ் சந்திமால் ஆகியோர் வருகை தந்து ஆரம்பித்து வைக்கவுள்ளனர். (ந-23)













## ஆதிசக்தி, கருணாகரன் அணிகள் வெற்றி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட முன்னணி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் ஆதிசக்தி மற்றும் கருணாகரன் விளையாட்டுக்கழக அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நெடியகாடு விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் ஆதி சக்தி விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது .

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது

இதில் கருணாகரன் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது. (ந-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஆட்டங்கள்

கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றுகின்ற அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப. 3.30 மணிக்கு

வல்வை விளையாட்டுக் கழகம் எதிர் நியூட்டன் விளையாட்டுக் கழகம்

பி.ப. 4.30 மணிக்கு

பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக் கழகம் எதிர் பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம்

* * *

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை கற்கோவளம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள அரையிறுதியாட்டத்தில் மனோகாரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

* * *

இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் பிரான்சிஸ் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப. 3 மணிக்கு

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் எதிர் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம்.

* * *

மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம்

* * *

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் விளையாட்டவை நடத்தும் ஆனந்தரெட்ணம் ஞாபகார்த்த வெற்றி கிண்ணத்துக்கான 19 வயதுப் பிரிவு ஆண் ,பெண் இருபாலருக்குமான ஹொக்கிச் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

* * *

கலட்டி நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும், நியூஸ்ரார் பிறிமியர் வெற்றிக் கிண்ணத்திற்கான 20/20 விக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறுகின்ற ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு.

காலை 8.30 மணி: அரியாலை விளையாட்டுக் கழகம் எதிர் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம

மதியம் 1 மணி: திருநெல்வேலி வை.எம்.எச். ஏ. விளையாட்டுக்கழகம் எதிர் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம்

* * *

வவுனியா அஞ்சல் திணைக்களத்தினால் நடத்தப்படும் அரச திணைக்களங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் வவுனியா பூங்கா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. மேற்படி போட்டியில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

* வவுனியா பிரதேச செயலக அணி எதிர் வவுனியா நகர சபை அணி. இதில் வெற்றிபெறும் அணி இலங்கை போக்குவரத்துச்சபையின் வவுனியா சாலை அணியுடன் மோதும்
* வவுனியா போதானா வைத்திய சாலை அணி எதிர் ஊர்காவற்படை அணி
* சுகாதார திணைக்கள அணி எதிர் கட்டடத்திணைக்கள அணி
* தபால் திணைக்கள அணி எதிர் இலங்கை மின்சார சபை அணி

* * *

முரளி நல்லிணக்க வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடரின் முதல் நாள் ஆட்டத்தில் மோதவுள்ள அணிகள்.

மகளிர் அணி( 'ஏ' பிரிவு)

போட்டி நடைபெறும் இடம்-மாங்குளம் மாவித்தியாலய மைதானம்

கிழக்கு மாகாண அணி எதிர் இராணுவ மகளிர் அணி

சீனிகம மகளிர் அணி எதிர் சக்தி மகளிர் அணி

மகளிர் அணி('பி' பிரிவு)

போட்டி நடைபெறும் இடம்-வவுனியா மத்திய கல்லூரி மைதானம்

வடமாகாண அணி எதிர் விமானப்படை மகளிர் அணி

குருநாகல் மகளிர் அணி எதிர் நிட்டம்புவ மகளிர் அணி

ஆண்கள் அணி (' சி' பிரிவு)

போட்டி நடைபெறும் இடம்-யாழ்ப்பாணம் பற்றிக்ஸ் கல்லூரி மைதானம்

யாழ். மாவட்ட அணி எதிர் கண்டி திருத்துவக் கல்லூரி அணி

மன்னார் மற்றும் வவுனியா இணைந்த அணி எதிர் தெபரவெவ மகாவித்தியாலயம்

ஆண்கள் அணி ( 'டி' பிரிவு)

போட்டி நடைபெறும் இடம்-ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானம்

முல்லைத்தீவு மாவட்ட அணி எதிர் தர்மசேனாக் கல்லூரி

ஆண்கள் அணி ( 'ஈ' பிரிவு)

போட்டி நடைபெறும் இடம்- கிளிநொச்சி மத்தியகல்லூரி மைதானம்

கிளிநொச்சி மாவட்ட அணி எதிர் சீனிகம அணி.

திருமலை, மட்டக்களப்பு இணைந்த அணி எதிர் யாழ். பற்றிக்ஸ் கல்லூரி. (ந-400-23-8)



## பெடரர் அதிர்ச்சித் தோல்வி


நடைபெற்று வரும் ஐக்கிய அமெரிக்கப் பகிரங்க ரென்னிஸ் சுற்றுத் தொடரின் உலகின் முதல் நிலை வீரர் ரொஜர் பெடரர் தோல்வியடைந்துள்ளார். செக் குடியரசைச் சேர்ந்த உலகின் 6 ஆம் நிலை வீரரிடமே ரொஜர் பெடரர் தோல்வியடைந்தார்.

ஆண்கள் தனிநபர் போட்டிகளின் காலிறுதிப் போட்டியாக இடம்பெற்ற இந்தப் போட்டியில் ரொஜர் பெடரர் 6 ஆம் நிலை வீரரான தொமஸ் பேர்டிச்சிடம் 6-7, 4-6, 6-3, 3-6 என்ற கணக்கில் தோல்வியடைந்தார். இதன் மூலம் தனது 6 ஆவது ஐக்கிய அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் சுற்றுத் தொடர் சம்பியன் பட்டத்தை வெல்லும் வாய்ப்பை ரொஜர் பெடரர் தவறவிட்டார்.

இடம்பெற்ற ஏனைய போட்டிகளில் ஆர்ஜென்ரினாவைச் சேர்ந்த 7 ஆம் நிலை வீரர் ஜுவன் மார்ட்டின் டெல் பொட்ரோ, உலகின் 2 ஆம் நிலை வீரரான சேர்பியாவின் நொவக் ஜொக்கோவிச், உலகின் 3 ஆம் நிலை வீரரான பிரித்தானியாவின் அன்டி முரே ஆகியோர் வெற்றிபெற்றனர். இதில் அன்டி முரே காலிறுதிப் போட்டிகளிலும், ஏனைய வீரர்கள் நான்காம் சுற்றுப் போட்டிகளிலும் பங்குபற்றியிருந்தனர்.

பெண்கள் தனிநபர் பிரிவில் உலகின் மூன்றாம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் மரியா ஷரபோவா, 4 ஆம் நிலை வீராங்கனையான ஐக்கிய அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், 10 ஆம் நிலை வீராங்கனையான இத்தாலியின் சாரா எரானி ஆகியோர் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிகளுக்குத் தகுதிபெற்றனர். (5)

## இந்தியாவுக்கு பயிற்சியாளராக ஆசைப்படும் கங்குலி



இந்தியக் கிரிக்கெட் அணிக்குப் பயிற்சியளிக்கத் தயாராக இருப்பதாக இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார். பயிற்சியளிப்பதில் தனக்கு ஆர்வம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

4 வருடங்களுக்கு முன்னர் சர்வதேசப் போட்டியிலிருந்து ஓய்வுபெற்ற சௌரவ் கங்குலி, ஓய்வின் பின்னரும் ஐ.பி.எல். போட்டியிலும், இந்தியாவின் ரஞ்சிக் கிண்ணப் போட்டியிலும் பங்குபற்றியிருந்தார். இந்த வருடமும் ஐ.பி.எல். போட்டியில் பங்குபற்றியிருந்த அவர், அடுத்தாண்டும் பங்குபற்றுவதற்கான தனது ஆவலை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்த நிலையில் தற்போது கருத்துத் தெரிவித்துள்ள சௌரவ் கங்குலி, தனக்கு பயிற்றுவிப்பில் ஆர்வம் இருப்பதாகவும், ஆனால் அது நடைபெறுமா என்பதை காலம் தான் பதிலளிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். தான் சிறந்த பயிற்றுவிப்பாளராக இருப்பேன் என்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கருதுமாயின், தான் பயிற்றுவிப்பாளராகப் பதவி வகிக்கத் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

தன்னால் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் எனக் கருதுவதாகத் தெரிவித்த சௌரவ் கங்குலி, வீரர்களின் திறமையிலும், அவர்களது திறனிலும், அவர்களது அபிவிருத்தியிலும் தன்னால் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் எனத் தெரிவித்துள்ளார். அதன் மூலமே தன்னால் கிரிக்கெட்டிற்கு தனது கடனைச் செலுத்த முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு பயிற்றுவிப்பாளர்களை இந்தியாவிற்கு நியமிப்பதில் முன்னர் ஆர்வத்தை வெளிப்படுத்திய சௌரவ் கங்குலி, தற்போது இந்தியப் பயிற்றுவிப்பாளரொருவரை நியமிப்பதற்கான காலம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். முன்னர் போன்றில்லாமல் தற்போது இந்தியக் கிரிக்கெட் அணி நவீன யுத்திகளுக்கு பயிற்றுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (5)

## கன்னத்தில் அறை விழுந்ததால் சர்வதேசம் வரையில் மிளிர்கின்றேன்




நான் பள்ளிப் பருவத்தில் எனது நண்பர்கள் கிரிக்கெட் ஆடுவதைப் பார்த்து கைதட்டும் போது ரமாகாந்த் ஆசிரியர் எனக்கு கன்னத்தில் அறைந்த அறையே நானும் ஒரு சிறந்த வீரனாக வரவேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. இவ்வாறு இந்திய அணியின் 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர் அதிக போட்டிகளில் விளையாடியவர், அதிக ஓட்டங்களை குவித்தவர் என்று எண்ணற்ற சாதனைகள் புரிந்துள்ளார். கடந்த 23 ஆண்டுகளாக இந்திய அணியில் விளையாடி வரும் இவரின் உச்சபட்ச சாதனை 100 சதங்கள் அடித்த முதல் வீரர் என்பதாகும்.

இந்த நிலையில் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் தனது சிறந்த துடுப்பாட்டத்திற்கு காரணமாக இருந்த தனது குருவை சச்சின் நினைவு கூர்ந்துள்ளார். சச்சினின் பள்ளிப்பருவத்தில் அவருக்கு துடுப்பாட்ட பயிற்சியளித்தவர் ரமாகாந்த் அச்ரேக்கர்.

கிரிக்கெட் பயிற்சி வகுப்புகளை நடத்திய ரமாகாந்த் சச்சின், அஜித் அகார்கர், வினோத் காம்ப்ளி, பல்விந்தர் சந்து உட்பட பல கிரிக்கெட் வீரர்களுக்கு பயிற்சியளித்துள்ளார். பள்ளி பருவத்தில் கிரிக்கெட் பயிற்சிக்கு சென்ற போது ஏற்பட்ட சம்பவங்கள் தனது வாழ்க்கையின் போக்கையே மாற்றி அமைத்துள்ளதாக சச்சின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சச்சின் கூறுகையில், எனது பள்ளி பருவத்தில் ரமாகாந்த், மிகவும் கண்டிப்புடன் நடந்து கொள்வார். அதனால் எனது வாழ்க்கையின் போக்கு மாறி, இன்று ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரராக உருவாகியுள்ளேன். பள்ளிப் பருவத்தில் ஒரு நாள் கிரிக்கெட் பயிற்சியின் போது, பள்ளியின் 'பி' அணிக்காக விளையாடுமாறு ரமாகாந்த் என்னிடம் கூறினார்.

பயிற்சியாளர் அங்கே இல்லாத நிலையில், நான் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்காமல், பார்வையாளர்கள் பகுதியில் அமர்ந்து கொண்டு பள்ளி தோழர்களுடன் பேசி கொண்டு ஜாலியாக இருந்தேன். போட்டியின் முடிவில் மைதானத்திற்கு வந்த பயிற்சியாளர் ரமாகாந்த், நீ எவ்வளவு ஓட்டங்கள் எடுத்தாய் என்று கேட்டபோது நான், தோழர்களுடன் சேர்ந்து கைகளை தட்டி கொண்டு ஜாலியாக இருந்தேன்.

நான் போட்டியில் விளையாடவில்லை என்று பதிலளித்தேன். இதில் கோபமடைந்த ரமாகாந்த் சார், என்னை அறைந்துவிட்டார். இதில் தவறை உணர்ந்த நான், அவரிடம் மன்னிப்பு கேட்டேன். அப்போது ரமாகாந்த் சார், மற்றவர்களின் ஆட்டத்தை பார்த்து உன் கைகளை தட்டுவதை நிறுத்திவிட்டு, உனது ஆட்டத்தில் அதிக கவனம் செலுத்து என்று அறிவுரை கூறினார். அதன்பின்பு நான் துடுப்பாட்டத்தில் அதிக கவனம் செலுத்தினேன். இன்று ஒரு துடுப்பாட்ட வீரராக வளர்ந்து நிற்கிறேன். நான் நீண்டநேரம் வலை பயிற்சியில் ஈடுபட்டு களைத்து போகும் போது, 'ஸ்டொம்பின்' மீது பயிற்சியாளர் ஒரு ரூபாய் நாணயத்தை வைத்துவிட்டு, நீ ஆட்டமிழக்காவிட்டால் அது உனக்கு என்று கூறி உற்சாகப்படுத்துவார்.

அப்போது உற்சாகமடையும் நான் பலமுறையும் ஆட்டமிழக்காமலிருந்து, நிறைய நாணயங்களை வாங்கியுள்ளேன் என்றும் இன்று நான் இவ்வளவு சிறந்த நிலையில் இருக்க, எனது பயிற்சியாளர் ரமாகாந்த் சொல்லி கொடுத்த பாடங்கள் தான் காரணம் எனவும் கூறியுள்ளார். (5)


## ரி-20 ரிக்கெற் விற்பனை அமோகம்

நியூசிலாந்து அணிக்கெதிரான இரண்டு ஆட்டங்கள் கொண்ட ரெஸ்ட் தொடரை இந்திய அணி 2-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

இதனையடுத்து இரு அணிகளுக்கும் இடையிலான இரு ஆட்டங்கள் கொண்ட 'ரி-20' தொடர் நடைபெற உள்ளது. முதலாவது 'ரி-20' ஆட்டம் விசாகப்பட்டினத்தில் இன்று நடைபெறவுள்ளது. 2 ஆவது 'ரி-20' ஆட்டம் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கான ரிக்கெட் விற்பனை மூன்று தினங்களுக்கு முன்னர் தொடங்கியது. குறைந்த விலை ரிக்கெட்டுகளான ரூ.200, ரூ.500 மதிப்பிலான ரிக்கெட்டுகள் முதல் நாளிலேயே விற்றுத் தீர்ந்தன. ரூ.2,500, ரூ.3000, ரூ.4000 மதிப்பிலான ரிக்கெட்டுகள் மட்டுமே விற்பனைக்கு உள்ளன. (5)

## எங்களாலும் சாதிக்க முடியும்




பாகிஸ்தான் 'ரி-20' அணியால் சாதிக்க முடியும் என்று அந்த அணியின் தலைவர் மொஹமட் ஹபீஸ் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கெதிரான 3 ஆட்டங்கள் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டத்தில் வெற்றிபெற்றதன் பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட 'ரி-20' தொடரின் முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி ஆஸ்திரேலிய அணியை 89 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்கச் செய்த பாகிஸ்தான் அணி, 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்திருந்தது.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள மொஹமட் ஹபீஸ், இந்தத் தொடரில் ஆஸ்திரேலிய அணியைத் தோற்கடித்துத் தங்களால் இந்தத் தொடரைக் கைப்பற்ற முடியும் எனத் தெரிவித்துள்ளதோடு, இலங்கையில் இடம்பெறவுள்ள 'ரி-20' உலகத் தொடரிலும் தங்களால் சிறப்பாகச் செயற்பட முடியும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். ஆஸ்திரேலியாவுக்கெதிரான தொடரில் வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியுமாயின் தங்களால் உலக 'ரி-20' தொடருக்கு அது உதவியாக அமையும் என்று ஹபீஸ் தெரிவித்தார்.

இந்தத் தொடரில் வெற்றிபெற்ற அதேவெற்றி முனைப்போடு தங்களால் உலக 'ரி-20' போட்டியில் பங்குபற்ற முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முதலாவது ஆட்டத்தில் 2 இலக்குகளை 24 ஓட்டங்களுக்குக் கைப்பற்றிய ஹபீஸ், ஏனைய சுழற்பந்து வீச்சாளர்களின் உதவியோடு ஆஸ்திரேலிய அணியை உருட்டியிருந்தார். தனது பந்துவீச்சுக் குறித்து ஆச்சரியமடையவில்லை எனத் தெரிவித்த ஹபீஸ், தனது பந்துவீச்சில் தனக்கு முழுமையான நம்பிக்கை உள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சல்லிகள் விற்பனைக்கு**

தரமான கருஞ் சல்லிகள் (½", ¾", 1", 1½", 4", 9x6) போன்றவை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு- 0775890730.

**செங்கல் விற்பனைக்கு**

தரமான செங்கற்கள் வன்னி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு விநியோகம் செய்யப்படும்.

தொடர்பு: பிரணவன் மண்ரப் பிறைசஸ் இல.365, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே.: 077 381 8799 (22518)(5-6-7)

**CIMA @ MCS** சாதனைச் சித்திகள் Foundation Leval 100%

F.M(67%), F.O(80%), P.O(70%), E.O(66%)

Schol. UK Reg Free 15500/=

New Batches

Weekdays Mon10th 8.30 AM (Fast track)

Week End Sun 9th 8 AM

SMS <your name> <schol. CIMA> to 0772395895

Supported By UNDP/JRRP 324, Palaly Road, Parameswara Junction, Jaffna.

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
No 15, Sirambiyadi Lane, Jaffna. 0212228250

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான புதிய கணனி வகுப்புக்கள் 80% கட்டண கழிவுடன் ஆரம்பமாகின்றன.

வகுப்புக்கள் ஆரம்பம்

Batch I : 08/09/2012
Batch II : 09/09/2012
Batch III: 12/09/2012
Batch VI: 14/09/2012
10AM / 03PM

உதயனில் உங்கள் விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com 0215671111

வெல்லுங்கள் பரிசு Rs.6000

புதிர் போட்டி

அடுத்து வரும் உருவை தெரிவு செய்க?

உங்கள் விடையை MCAI1, A/B/C/D _<Name>, <Nic No> <address> என்பவற்றை type செய்து 775520940 என்ற இலக்கத்துக்கு 09.09.2012 க்கு முதல் அனுப்பி வைக்கவும்.

கணினி கம்பஸ் MCAI CAMPUS கல்வியங்காட்டில் 243, Adiyapatham Road,

**ACCA**
Association Of Chartered Certified Accountants
புலமைப்பரிசில் திட்டம் - 2012/2013

க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றிய அனைத்துத்துறை மாணவர்களுக்குமான புலமைப்பரிசில்பரீட்சை 2012/2013 நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின்றது. பரீட்சைக்கு தோற்ற விரும்புகின்ற மாணவர்கள் நாளை காலை 9.30 மணிக்கு யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். பரீட்சைகள் அலகு,

யாழ்ப்பாணம் தொழில்நுட்ப நிறுவனம், இல.7, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

0215670345 (22442)(3.14) email:-jtiedu@gmail.com

**கணினி மலிவு விற்பனை**

Intel 3.2 GHZ D/Core, 160GB Harddisk, 1 GB Ram, Keyboard, Mouse, Speaker, 19" LED Monitor, DVD Writter,

Free : Web Cam/ 4 GB Pen/ Cover/ Head phone

மூன்று வருட உத்தரவாதம்

39500/= மட்டுமே

SKY Computer
162, Main Street, Jaffna
021 2221417, 077 7271645 (சி/3025)(6-97-8)

**Sky Computers (Pvt) Ltd**

A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

(பிரத்தியேகமாக/ குழுக்களாக விரும்பிய நேரத்தில் கற்கும் வசதி)

Ms Office, DTP, Hardware, Graphic Designing, Web Designing, Internet & E-mail, Computer Type Setting, Kids Program.

162, Main Street, Jaffna. TP:-021 222 1417


# மரண அறிவித்தல்

## சண்முகலிங்கம் அன்னபூபதி



மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் அன்னபூபதி நேற்று (07.09.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், சின்னத்தம்பி - சண்முகலிங்கத்தின் அன்பு மனைவியும், சண்முகலிங்கம், சிவப்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீதரன், விஜயராணி (சுவிஸ்), ஸ்ரீலிங்கம், காலஞ்சென்ற கலாராணி, மற்றும் ஸ்ரீபவன், மலர்விழி, மதிஒளி, கோகுலஸ்ரீ (நியூ ஆனிதா நகைமாடம், யாழ்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.09.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு இல.35, பிரப்பங்குளம் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் மண்டைதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6ஆம் வட்டாரம்,
மண்டைதீவு தெற்கு.

தகவல்
குடும்பத்தினர்.
(நியூ ஆனிதா நகைமாடம், யாழ்) (22637)(3.14)


**வவுனியாவில் ஜேர்மன் டொச் மொழிகள் புதிய பிரிவுகள் ஆரம்பமாக**

எதிர்வரும் 2012.09.14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

குறிப்பு:- ஓடியோ, வீடியோ மூலம் மிகச்சிறந்த முறையில் ஜேர்மனியில் வசித்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படும். கடந்த பரீட்சையில் பல மாணவர்கள் சித்தி அடைந்துள்ளார்கள்.

தொடர்புகளுக்கு :- 0779707322
Sun British Business College
Station Road, Vavuniya. (20873)(3.6.7)

**இலவசக் கருத்தரங்கு**

கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான வேலை விசா.

இலவச IELTS வகுப்புக்கள்
* நிபந்தனைக்குட்பட்டது
காலம்- செப்ரெம்பர் 8ஆம், 9ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு)
இடம்- Orient Breeze இல 713, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
நேரம்- காலை 9.00 - 1.00 மணி வரை

அவுஸ்திரேலியா, லண்டன், நியூசிலாந்து, ஜேர்மனி, சுவிஸ், சிங்கப்பூர், மலேசியா, சைப்ரஸ், ஆகிய நாடுகளில் கல்வி.........
ICS கல்வி வெளிநாடுகளில்

தொ.பே - 0114343322, 0773013060, 0723062636 (சி/3222)(3.6.7)

**ஆங்கிலப்பயிற்சி நெறி**
உயர் கல்வி அமைச்சின் சான்றிதழ்

English Course From nodes
National Online Distance Education Service
The Online University



0212219460

Course Fee 4,500/= Only

இணையதளத்தினூடாக மிகவும் இலகுவாக, சுயமாக, குறுகிய காலத்தில் ஆங்கில மொழியை கற்றுக்கொள்ளுங்கள்

பாடசாலையில் பயிலும் மணவர்கள், பரீட்சைக்குத்தோற்றியோர், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் உகந்தது

20/09/2012 இற்கு முன்னதாக உங்கள் பதிவுகளை உறுதி செய்து கொள்ளுங்கள்

Certificate issued by
National Online Distance Education Service of the Ministry of Higher Education

MindVishion College of International Studies
Authorized Center For
NODES of the Ministry of Higher Education
2nd Floor, No 4, Clock Tower Lane, Jaffna

**After A/L......?**

இம் மாத பதிவுகளுக்கு எங்களுடன் இணைந்து Pendrive ஒன்றினை இலவசமாக பெறுங்கள்

New batches
08 Sept 2012
10 Sept 2012
15 Sept 2012
@ 9.00 am

DiTEC Diploma in Information Technology 4 Months
DiCA Diploma in Computerized Accounting 4 Months
DiBM Diploma in Business management 4 Months
DiSE Diploma in Software Engineering 6 Months
DiWE Diploma in Web Engineering
DiE Diploma in English 4 Months



HOTLINE 077 309 9 308

(சி/3154)

ESOFT Computer Studies (Pvt)Ltd.
17/1, Brown Road, Jaffna.
Tel :021 2224142 , Web :www.esoft.lk

| Nelliady | Kilinochchi | Uduppidy |
| --- | --- | --- |
| 151, Jaffna Rd 021 226 4940 | 01, Kanagapuram Rd, 077 990 5611 | Jaffna Rd, Uduppidy. 021 320 1303 |

**Aptech** COMPUTER EDUCATION
Unleash your potential

உலகின் No. 1 கணனிக்கல்லூரியின் 65 இலட்சம் மாணவர்களுடன் நீங்களும் இணையுங்கள்




ACCP பயிற்சி நெறியில் இணைபவர்களுக்கு Laptop இலவசம்
* Conditions Apply

தொழில்வாய்ப்பிற்கு ஏற்ற பயிற்சி நெறிகள்

- Desktop Office Specialist
- Website Developer
- DataBase Programmer
- Web Application Developer
- System Administrator
- IT booster - .NET
- IT booster - Java
- Smart Professional - .NET
- Smart Professional – Java
- Smart Accountant
- Smart Professional MIS
- C / C++ / C# Programmer
- AutoCAD Designer

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Weekend 9/9/2012
Weekday 10/9/2012
at 9 AM

(சி/3146)

APTECH Computer Education World Wide
No.04, Clock Tower Lane, Navalar Road, Jaffna.
(பொருளியல் கல்லூரி அருகாமை Science corner ஒழுங்கை)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ஸ்கந்தாவின் நன்றிப் பெருவிழா



## A man of multifaceted personality

I have great pleasure in penning this message related to the felicitation organised by the Skanda society as an expression of gratitude to the services rendered by Dr. Aru.Thirumurugan to Skandavarodaya College. He Has retired after nineteen years of dedicated service to Skanda. He has maintained the traditions of the great principals of the past and carried out the ideals and expectation of the founder the late Mr.Kandiah Upathiyayar. He gave of his very best to the college. No college function was complete without his meticulous planning and organisation. He set the infrastructure for each activity, be it a college sports meet or a prize giving or a ceremonial occasion or any other college function. He gave of his very best to the college.

It is with great regret and reluctance,we accepted his premature retirement on account of his other pressing commitments which require his services. We are resigned to the fact that the services rendered by him to the society is of paramount importance. It is with great regret we bid him farewell.

He is a multifaceted person. He has a multitude of other capabilities. He possesses many admirable qualities such as humility, simplicity, transparent honesty and affability.

May Lord Scandan give him long life and good health so that he may ever be useful to the society.

**K.Sivaji** ***Former Principal***

## என்வாழ்வில் ஒளியேற்றிய உத்தமர்



என்னை எனக்கறியவைத்து அவனியிலே என்னை மனிதராக வாழ வைத்து அன்னை, பிதா, குருவாகி நின்று ஜயமெல்லாம் போக்கியவர் எமது பேராசான் கலாநிதி ஆறு. திருமுருகன் ஐயா. ஒருவனது வாழ்வில் நல்ல எதிர்காலத்தை - ஒளிமயம் மிக்க வாழ்வை ஏற்படுத்துபவர்கள் தாரமும் குருவும். இதனாற்றான் தாரமும் குருவும் தலைவிதிப் பயனே என்று ஆன்றோர்கள் கூறியுள்ளனர். அந்த வகையில், ஆன்றோரின் வாக்கிற்கமைய இவை யாவும் அமைந்த நற்பேற்றை நான் பெற்றுள்ளேன்.

1995ஆம் ஆண்டு முதல் 1997ஆம் ஆண்டு வரையிலான இரண்டு வருட காலப்பகுதியில் ஸ்கந்தா அன்னையின் நல்லாசியுடன் எமது மதிப்புக்குரிய குருநாதர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஐயா அவர்களிடம் கல்வி கற்கின்ற பெரும் பாக்கியம் - பேறு - எனக்குக் கிடைத்தது. அவர் எமக்குக் கற்பிக்கும்போது அங்கு அவரிடம் ஒரு நல்லாசிரியருக்குரிய பண்பு காணப்படும். அவரது கற்பித்தல் திறமை (Art of teaching), வகுப்பில் மாணவர் அனைவரையும் கட்டுக்கோப்புக்குள் வைத்திருக்கும் திறன் - தலைமைத்துவப் பண்பு (Leadership) என்பன வேறு அவர் தனித்திறன்கள். ஒழுக்கம், நற்பண்பு என்பவற்றைப் போதிக்கும்போது அங்கு ஒரு சிறந்த தந்தையாக எம் அனைவரிடமும் கரிசனையுடனும் உரிமை எடுத்து எம்மைத் தண்டிப்பார். எம்மோடு கற்ற பல மாணவர்களைத் தனது மருதனார்மடம் இல்லத்துக்கு அழைத்து அங்கு அவர்களுக்கு உணவு முதலானவற்றை வழங்கிக் கற்பிப்பார். தன்னிடம் கல்வி கற்ற - கற்கின்ற எத்தனையோ ஏழை மாணவர்களுக்கு தனியார் கல்வி நிறுவனங்களில் மேலதிக வகுப்புகளுக்குச் செல்வதற்கு பண உதவியளித்துள்ளார் - தற்போதும் அளித்து வருகின்றார். இவர் என்றும் நலமுடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

லயன் தெல்லிபூர் சி.ஹரிகரன் (செயலாளர்- விழாக்குழு, உறுப்பினர்வலி.வடக்கு பிரதேச சபை)

## கல்வியியற் கல்லூரியின் வளர்ச்சியிலும் பாடுபட்டவர்



கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் ஆசிரியர் குழாம் மத்தியில் அன்புடனும், பாசத்துடனும், கண்ணியத்துடனும் பழகி பெருமதிப்பைப் பெற்றவர். மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளுமை அனைத்திற்கும் களமமைத்துக் கொடுத்து மாணவர்கள் மத்தியிலும் பெருமதிப்பைப் பெற்றவர். கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர். பாடசாலையின் பண்புசார் விருத்தியிலே கூடிய அக்கறையுடன் நேரம், காலம் பாராது சேவை ஆற்றி மக்கள் மத்தியிலும், வெளிநாடுகளிலும் பெருமதிப்பைப் பெற்றவர். அவரின் சேவைகளை மனப்பூர்வமாகப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

கல்வியியற் கல்லூரியில் ஆளுநர்சபை உறுப்பினராக எம்மோடு கூடவேயிருந்து அதன் ஒவ்வொருபடி வளர்ச்சியிலும் அக்கறையுடன் செயலாற்றுபவர். அவரது சேவைகளைக் குறிப்பிடில் அதை சொல்லில் வடிக்க இயலாது. அவர்நலமுடன் வாழப் பிரார்த்திக்கின்றேன்.

- லயன் Dr.V.தியாகராஜா.

## சிரமத்துக்கு மத்தியில் கல்லூரியை வளர்த்தவர்



கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் மிகவும் நலிந்த நிலையிலுள்ள எமது பாடசாலையை முன்னாள் அதிபர் திருமிகு க.சிவாஜி அவர்களுடன் இணைந்து பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுத்து இவ்வளவுக்கு வளர்த்துள்ளார்கள். இன்று பாடசாலை அபிவிருத்தி என்ற வகையில் சகல வசதிகளும் பெற்றுப் புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றது. கல்வியில் பாடசாலையை முன்னேற்று வதற்கென இவர்கள் இருவரும் மிகவும் சிரமப்பட்டு பல்வேறு இடைஞ்சல்களுக்கு மத்தியில் ஆரம்பப் பாடசாலையை உருவாக்கினார்கள். இன்று அந்தப் பாடசாலை உடுவில் கல்வி வலயத்தில் முன்னணிப் பாடசாலைகளுள் ஒன்றாகத் திகழ்கின்றது. இந்த மாணவர்கள் ஆரம்பக் கல்வி முடித்து உயர் கல்விக்கு எமது பாடசாலைக்கு வருகின்றபோது - அவர்கள் சாதாரணதர, உயர்தரங்களை அடைகின்றபோது எமது பாடசாலையும் வலிகாமம் கல்வி வலயத்திலே சிறந்த ஒரு பாடசாலையாகத் திகழும் என்பதே இவர்களது பெரு நோக்காகும். அறுவடையை தான் செய்யாமல் அதன் பயனை - புகழை - தான் அடையாமல் விட்டுச் செல்கின்றார் என்பது எமக்கு மிக மனவருத்தத்தைத் தருகின்றது.

- கி.ஆனந்தகிருஷ்ணன், (ஓய்வுநிலை தபாலதிபர்)



எங்கள் இனிய அதிபர்

# கலாநிதி ஆறு.திருமுருகன்

தலைமை திருமிகு.க.சிவாஜி (ஓய்வுநிலை அதிபர்)
காலம்:- 08.09.2012 சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணி.
இடம்:- ஒறேற்றர் சுப்பிரமணியம் அரங்கு - ஸ்கந்தா. பிற்பகல் 1.00 மணிக்குக் கந்தரோடை வற்றாக்கை அம்மன் ஆலயத்திலிருந்து விழா நாயகரை அழைத்துவருதல்.

## ஸ்கந்தாவை நிலைநிறுத்திய பெருமகன்



சைவத்தையும் தமிழையும் அகில மெல்லாம் பரப்பும் எமது மத குருமுதல்வர்கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள். பல்வேறு காரணங்களால் கல்லூரியின் வளர்ச்சியில் ஏற்படத் தொடங்கிய தொய்வை, பிற்காலத்தில் நிலவிய அரசியற் சூழ்நிலை உள்நாட்டுப் போர் போன்றவை விரைவுபடுத்தின. குடாநாட்டில் நிகழ்ந்த பாரிய இடப்பெயர்வு, குறுகிய கால இடைவெளிகளில் பல்வேறு ஊர்களில் புகலிடம் தேடவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியதுடன் கலாநிதி ஆறு. திருமுருகன் போன்றவர்களின் சேவையும் செல்வாக்கும் ஸ்கந்தாவுக்கு இன்றியமையாதவை என்ற உண்மையை உணர்த்தவும் செய்தது.

குறிப்பிட்ட சில காலத்தில் - இவரது பிரதி அதிபர், அதிபர் காலத்தில் ஸ்கந்தாவில் பல்வேறுபட்ட அபிவிருத்திகள் பல்வேறு கோணங்களில் முன்னெடுக்கப்பட்டன. போரினாலும் பழைமையாலும் சிக்கிச் சின்னாபின்னமாகி சிதைவுண்டு விழும் நிலையிலிருந்த கட்டடங்களை ''பழையன கழிதலும் புதியன புகுதலும்'' என்பதற்கிணங்க துணிச்சலுடன் அகற்றி, புதிய நவீன கட்டடங்களை அமைப்பித்து ஸ்கந்தாவின் அழகை மெருகூட்டினார். அத்துடன், அதிபர் திருமிகு க.சிவாஜி அவர்களுக்கு உறுதுணையாயிருந்து ஆரம்பப் பாட சாலையை பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து ஆரம்பித்தார்.

சமய, சமூகப் பணிகளை முன்னெடுக்கும் இவர் பல்துறை விற்பன்னர். எமது சண்டிலிப்பாய் பிரதேசத்தில் ஒரு நிகழ் வில் உரையாற்றவென அழைத்தால் எமது ஊரைப்பற்றி எமக்கு - எம்மூதாதையர்களுக்கு - தெரியாத பல விடயங்களைக் குறிப்பிட்டு சபையறிந்து உரையாற்றும் புலமையுடையவர். இவரது சமய, சமூகப் பணிகள் சிறப்புற்று நீண்ட ஆயுளுடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன

லயன் சி.கஜன் (அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர்- காரைநகர்பிரதேச செயலகம்)

## ஸ்கந்தாவின் மீள் எழுச்சிக்காகப் பாடுபட்டவர்



ஸ்கந்தாவின் மீள் எழுச்சிக்காக ஆசிரியர், பிரதி அதிபர், அதிபர் என்ற எல்லா நிலைகளிலும் தன் பங்களிப்பை முழுமையாக வழங்கிய கலாநிதி ஆறு.திருமுருகன் உரிய காலத்துக்கு முன்னர் அதிபர் பதவியில் இருந்து ஓய்வுபெறுவதற்கு எடுத்த முடிவால் வருத்தமும் அதிர்ச்சியும் அடைந்துள்ளது ஸ்கந்தா சமூகம்.

கல்லூரியினுள் காலடி எடுத்துவைக்கும்போது நுழைவாயிலில் ஸ்கந்தன் கோயில் அழகிய மூன்று மாடிக் கட்டடம், ஸ்தாபகர் உருவச் சிலைகள், அழகிய நந்தவனம் என்பன அவரது எண்ணத்தில் உருவானவை என்பதை எவரும் மறுக்க முடியாது. திருமுருகன் நாமம் ஸ்கந்தா உள்ளவரைக்கும் நிலைத்திருக்கும் என்ற திடநம்பிக்கையுடன் அவரது ஆன்மிகப் பணியை மேலும் சிறப்பாக ஆற்றவேண்டும். அவரது பணிகளால் தமிழ்ச்சமூகம் பெறப்போகின்ற நன்மைகளை எண்ணி வாழ்த்தி மகிழ்வோடு இவ்வுலகில் நீண்டகாலம் வாழ்ந்து நிறைந்த ஆயுளும் சிறந்த உடல் நலமும் உளநலமும் பெற துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

''சேவைசெய்வதே ஆனந்தம்
அதைத் திறம்படச் செய்வதே பேரானந்தம்
போற்றுவார் போற்றட்டும் தூற்றுவார் தூற்றட்டும்

பொ.இராமலிங்கம்(J.P)
(13971)(2-6-7) (ஓய்வுநிலை கிராம அலுவலர்- சுன்னாகம்)

## ஸ்கந்தாவின் இனிய அதிபர் கலாநிதி ஆறு.திருமுருகன்



கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் பணி நயப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். அவர் அதிபராகவிருந்து நிர்வகித்த கல்லூரியில் நானும் அதிபராகப் பணியாற்றக் கிடைத்தமை தொடர்பாக என்னுள் ஒரு பெருமிதம் ஏற்பட்டிருக் கின்றது.

கல்லூரிக்குத் தேவையான பெரும்பாலான வளங்களைத் தேடிச் சேர்த்த பின்னரே அவர்ஓய்வை அறிவித்தமை அவரது பெருந்தன்மையைக் காட்டுகின்றது. கல்லூரி வளர்ச்சிக்காக அவரது உழைப்பும் அர்ப் பணிப்பான சேவையும் உயர்வான எண்ணங்களும் ஸ்கந்தா சமூகத்தில் அவர்பெயரை எப்போதும் நினைவூட்டிக் கொண்டே இருக்கும்.

இவரது எதிர்காலம் இன்பகரமாகவும் ஆன்மிக அறிவொளி பரப்பும் காலமாகவும் அமைய எல்லாம் வல்ல எமது ஸ்கந்தப் பெருமான் அவர்களுக்கு உடல், உள வலிமையை வழங்கவேண்டும் எனவும் அவர்நீண்டகாலம் தனது பணியைச் செய்யவேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

இராமநாதன் ஈஸ்வரதாசன்
(அதிபர்- ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

## வாழும்போதே போற்றப்படவேண்டியவர்



எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் ஓய்வு பெறவிருக்கின்றார் என்ற விடயம் கேட்டு நான் ஒரு நிமிடம் அதிர்ந்து போனேன். எமது பாடசாலையின் வளர்ச்சிக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து பல்வேறுபட்ட அபிவிருத்திப் பணிகளை அவர் முன்னெடுத்து வந்தார். பழைய மாணவர்களாகிய எம் எல்லோருடனும் அன்புரிமையுடன் நல்ல ஒரு நண்பராகப் பழகி எமது ஆலோசனைகளைப் பெற்றே பாடசாலை தொடர்பில் எந்த முடிவையும் எடுப்பார். மற்றவர்களை மதிக்கின்ற சுபாவம் பிறப்பிலிருந்தே கிடைக்கப் பெற்றவர்.

இவர் ''வாழும்போதே போற்றப்படவேண்டியவர்''. தனக்குச் சேவை செய்த பெருமகனை ஸ்கந்தா சமூகம் கௌரவிப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

லயன் செ. மகாதேவா (J.P,MJF) பொருளாளர்,
ஸ்கந்தா பழைய மாணவர்தாய்ச்சங்கம்.

## தளரா மனங்கொண்ட சமய, சமூக சேவையாளர்



எங்கள் கல்லூரியின் வாழ்நாள் அதிபர்களில் ஒருவரான செஞ்சொற் செல்வர்கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் இதய சுத்தியான அதிபர்சேவை ஸ்கந்தாவின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டுள்ளது. இது எதிர் வரும் காலங்களில் ஸ்கந்தா கல்விக்கான சகல துறைகளிலும் உன்னத நிலையை எய்துவதற்கு இலகுபடுத்தியுள்ளது என்பது யாராலும் மறுக்க முடியாது.

சமய, சமூக செயற்பாடுகளில் ஈடுபடநேரமில்லாது நவீன தொழில்நுட்பச் சாதனங்களின் செல்வாக்குக்கு மத்தியில் இயந்திரம் போல் செயற்பட்டு உழைத்தும் பூரண மனநிறை வான வாழ்வை அடைய முடியாது அவசர அவசரமாக ஓடிக் கொண்டிருக்கும் மனிதகுல வாழ்வில் சமய, சமூக கலாசாரத் துறைகளில் தொண்டுக்கான விழுமியங்கள் தளராது தொடர்ந்து பேணிப்பாதுகாத்து நிலைநிறுத்தும் சமூகப் பணிக்கு முழுமையாக ஈடுபடப் புறப்பட்டிருக்கும் தங்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். தீர்க்க ஆயுளுடன் நீண்டகாலம் வாழ்ந்து தங்களின் அர்ப்பணிப்புடனான சேவை சிறப்புற வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

லயன் த.தேவராஜன் (ஓய்வுநிலை உதவி பிரதேச செயலர், செயலாளர்- பழையமாணவர்தாய்ச் சங்கம், ஸ்கந்தா)

## பல்வேறு நிர்வாகங்களை ஒரேநேரத்தில் நடத்தியவர்



ஆன்மிக வாழ்வும், கல்விச் சேவையும் இணைப்புப் பாலமாகக் கொண்டு சேவையாற்றியவர். தனது வாழ்வையே சமய வளர்ச்சிக்கும் சமூக சேவைக்கும் அர்ப்பணித்திருக்கும் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் இவற்றுடன் கல்விச் சேவை எவ்வாறு முன்னெடுக்கப்படலாம் என்பதை நிரூபித்துக்காட்டி வெற்றி கண்டார். கோயில் நிர்வாகம், பாடசாலை நிர்வாகம் இரண்டையும் திறம்பட நடத்தியவர். பாடசாலைத் தலைமைத்துவம், சமயத் தலைமைத்துவத்திலிருந்து வேறுபட்ட தல்ல என்பதனை வாழ்ந்து காட்டிய பெருமைக்குரியவர். வேலைப் பளுக்கள் அதிகரிக்கும் பொழுது ஒருவருடைய பணியின் தரம் வீழ்ச்சிய டைவதில்லை என்பதனை உறுதிப்படுத்திய பெருமையும் அவரையே சாரும்.

சுன்னாகம் ஐயனார் ஆலயத்தில் இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன்னரே ஆன்மிகச் சொற்பொழிவாற்ற இளைஞனாக வந்து ஒரு மணிநேரம் உரையாற்றினார். அவரது உரையால் நான் பெரிதும் கவரப்பட்டேன் வியப்படைந்தேன். சிறந்த ஆளுமைகொண்ட இவர்குறுகிய வட்டத்தில் நிற்காது பெருவிருட்சமாக வளர்ந்து அளப்பெரும் சேவையாற்ற ஐயனாரைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

சி.குமரவேல்(J.P) உபதலைவர்- ஸ்கந்தா பழைய மாணவர் தாய்ச்சங்கம், தலைவர்- சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்)

## தமக்கென வாழாச் சிந்தையாளர்



பெருமதிப்பிற்குரிய, விருப்பிற்குரிய ஆசானாய், ஸ்கந்தா அன்னையின் முதல்வனாய் அரும்பணியாற்றி, ஓய்வுபெற்றுச் செல்லும் ஆசானுக்கு வாழ்த்துக் கூறுவதில் பெருமையடை கின்றேன். மாணவர்களது கல்விப் பணி மட்டுமன்றி, அனைத்து விடயங்களிலும் அக்கறையுடையவராக விளங்கினார். யாழ்ப்பாணத்தின் இருண்ட காலப்பகுதியான (2006 - 2008) காலப்பகுதியில் மாணவர்களது பாதுகாப் பிற்காகவும் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்காகவும் இரவு பகல் பாராது சிவாஜி சேருடன் இராணுவ முகாம் களுக்குச் சென்று வந்தவர். அண்மையில் கூட நான் விபத் தில் சிக்கியபோது தனது சமய சொற்பொழிவையும் ஒதுக்கி விட்டு தனது வாகனத்தில் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற பெருமகன். திருமுருகன் சேருடைய திடீர் ஓய்வு ஸ்கந்தா சமூகத்துக்குப் பேரிழப் பாயுள்ள போதிலும் அவரது சமய, சமூகப் பணிகள் மேன் மேலும் தொடர மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

Rtr செ.பிரதாப், 4 ஆம் வருட மாணவன்,
அரசறிவியற்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீர் அஞ்சலி

## நடராசா இராசகணேசன்

(முன்னாள் கணித ஆசிரியர், யா/மந்துவில் றோ.க.த.க.பாடசாலை)

எமது பாடசாலையில் நீண்டகாலம் சேவையாற்றிய கணித ஆசிரியரின் அகாலமரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/மந்துவில் றோ.க.த.க.பாடசாலை, கொடிகாமம்.

(21520) (2-6-7)

# கண்ணீர் அஞ்சலி



எமது விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் செயலாளர் இரட்ணசபாபதி குணரெத்தினம் அவர்களின்

அன்பு மனைவி

## குணரெத்தினம் கமலாவதி

அவர்கள் 06.09.2012 இறைவனடி சேர்ந்தார்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகமும்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சமூகமும்.

(சி/3156) (2-6-7)

# கண்ணீர் அஞ்சலி




எமது விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் செயலாளர் தில்லைநாதன் துஷ்யந்தன் அவர்களின் தாயும் கழகத்தின் அங்கத்தவருமான தில்லைநாதனின் அன்பு மனைவியுமான

## தில்லைநாதன் கமலாசனி

அவர்கள் 06.09.2012 இறைவனடி சேர்ந்தார்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகமும்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சமூகமும்.

(சி/3155) (2-6-7)




வாராது போகுமோ வார்த்தைகள் எம் தெய்வத்தைப் பாடிட
தேறாதே எம் நெஞ்சம் எத்தனை பாடினும்
உன் குறைவற்ற இனிய நற்சொற்கள்
இவை சேர்த்தாலே கோர்த்த நல் முத்தாரமே
காலனின் தீ தடங்கக் காத்தருள் பிள்ளையைப்
பெற்ற பெயர் வினை தீர்த்திடும் வித்தகர் எனத் தொழும் பெயர்
தெய்வசிகாமணி சிறுமுனிக்கு நற்றமிழ் சந்தமும் தந்த
தெய்வசிகாமணி நீ எமக்கு
விட கண்டன் மைந்தனே ஐயா நீ எமக்கு
இன்பத்தை எங்களுக்கு காட்டிட வாய்த்த பெருங்கதியே
வீணாகப் போகுதே நாள்கள் ஐயா உனைப்பிரிந்து
வெய்யவுன் திருவடி பற்றி பரஞ்சோதி காண்கின்றோம்
முத்துமாரி அம்பாள் சக்தி வசமாக ஐயா என்றும் ஒளிர்கவே
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!

கடந்த 09.08.2012 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் நேரடியாகத் துயர் பகிர்ந்தவர்கள் உள்நாட்டில் இருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தொலை பேசி மூலம் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்த அனை வருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். இன்று(08.09.2012) சனிக் கிழமை இடம் பெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புதுவீதி, ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை. (22624)(5-6-7) குடும்பத்தினர்.

# சாவகச்சேரி பிரதேசசபை புதிய கட்டடத் திறப்பு

யாழ்ப்பாணம், செப். 8

சாவகச்சேரி பிரதேச சபைக்கான புதியகட்டடம் எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11மணிக்கு வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சிற்றம்பலம் துரைராசா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளதுடன் புதிய கட்டடத்துக்கான பெயர்ப்பலகையும் திரைநீக்கம் செய்யப்படவுள்ளது. (16)

# பொத்துவில் கடலில் மீன்பிடிக்க சீன நிறுவனங்களுக்கு அனுமதி

பொத்துவில் கடலில் பெரியளவில் மீன் பிடியில் ஈடுபட சீன நிறுவனங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதால் மீனவர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

பொத்துவில் கடற்பரப்பில் இரண்டு பெரிய கப்பல்களில் சீன நிறுவனங்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றன.

பொடம் ட்ரோலின் முறையின் மூலம் வலை விரித்து மீன்பிடிக்கப்படுகின்றது. சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு இலங்கைக் கடற்பரப் பில் மீன்பிடியில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட நபர் அல்லது ஒரு நிறுவனம் இந்த ஊழல் மோசடியில் ஈடுபட்டுள்ளதாக மீனவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இது தொடர்பில் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ)

# பொலிஸ் அத்தியட்சகருக்கு அழைப்பாணை

அம்பாறை, செப்.8

அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகர் பிரேமலால் ரணகலவுக்கு எதிராக உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப் பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு மீதான வழக்குத் தொடர்பாக எதிர் வரும் 17 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அவருக்கு உயர் நீதிமன்றம் நேற்று அழைப்பாணை விடுத்துள்ளது.

இந்த மனுவினை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர்எம்.ரி.ஹசன் அலி,அந்தக் கட்சியின் அக்கரைப் பற்று அமைப்பாளர் ஹனீபா (மதனி) மற்றும் கிழக்கு மாகாண சபை வேட்பா ளர்எம்.தவம்ஆகியோர் தாக்கல் செய்துள்ள னர்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கு எதிராக மேற்கொள் ளப் படும் வன்முறை கள் தொடர்பில் சிரே ஷ்ட பொலிஸ் அத் தியட்சகர் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளார் என்று குற்றம் சுமத்தி யும் அவரை உடன டியாக இடமாற்றம் செய்ய நீதிமன்றத்தின் உத்தரவை கோரியும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது(வ)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
ads@uthayan.com
0215671111


# விற்பனை விநியோகஸ்தர்கள் தேவை

எங்களுடைய தரத்தில் உயர்ந்த "விந்தினு" நாமம் கொண்ட குடிநீர் மற்றும் பழச்சாறு ஆகியவற்றினை வியாபார நிலையத்திற்கு அறிமுகப்படுத்தியுள்ளோம்.

நாங்கள் மிகக் குறுகிய காலத்தினுள் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி மிக உயர்ந்த தரத்தில் உற்பத்தி செய்து கொழும்பு பிரதேசங்களில் வியாபார நிலையங்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளோம்.

எங்களுடைய முயற்சியானது எங்களுடைய உற்பத்தியினை இலங்கை முழுவதும் விற்பனை விநியோகத்தர்கள் மூலமாக விநியோகிப்பதாகும். (SLS உம் சுகாதார சான்றிதழும் பெற்றது)

(விசேடமாக வடக்கு கிழக்கிற்கு முன்னுரிமை வழங்கியுள்ளோம்)

அதற்காக நீங்களும் எங்களுடன் இணைந்து நலன்புரி வியாபாரத்திற்கு உங்களுடைய பெறுமதியான பணத்தினை முதலிட்டு மிக உயர்ந்த அனுகூலங்களையும் விஷேட சலுகைகளையும் பெற்றுக்கொள்ளவும்.



மேலதிக விபரங்களுக்கு இன்றே அழைக்கவும்

விந்தினு வோட்டர் சிஸ்டம்
96 /10, இரத்தினபுரி வீதி, அவிசாவளை.
036-5100370/ 077 0181232

(சி/3221) (2-6-7)


# மரண அறிவித்தல்

## கந்தையா சின்னமணி



இணுவிலைப் பிறப்பிடமாகவும், காங்கேசன்துறையை வதி விடமாகவும் தற்போது தியேட்டர் வீதி, இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்ன மணி கடந்த (06.09.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகன் - பூபதி தம்பதியரின் மருமகளும், கந்தையாவின் அன்பு மனைவியும், சறோஜினி தேவி, கமலராணி, சந்திரகுமார், சதீஸ்குமார், காலஞ்சென்ற தவமலர் ஆகியோரின் பாசமிகு தாயும், சின்னராசா, மருதன், புவனேஸ்வரி ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களாகிய சின்னபிள்ளை, மாணிக்கம், கதிரவேலு மற்றும் சின்னராசா, சின்னம்மா, கந்தையா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, ஐயாத்துரை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (10.09.2012) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற் பகல் 10 மணிக்கு இணுவில் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தியேட்டர் லேன்,
இணுவில் கிழக்கு. (22623) 45.6.7)
தகவல்: குடும்பத்தினர்.


Sri Lanka Insurance

# வேலைவாய்ப்பு

காப்புறுதியின் முன்னோடியாகிய இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் தனது

**50 ஆவது ஆண்டு நிறைவில்**

துடிப்பும் ஆர்வமும் உள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து காப்புறுதி ஆலோசகர்களுக்கான விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது.

- நீங்கள் விற்பனைத் துறையில் ஆர்வமுள்ளவரா?
- பகுதிநேர வேலைவாய்ப்பினைத் தேடிநிற்பவரா?
- துடிப்பும் ஆர்வமும் உள்ளவரா?
- 18 வயதினைக் கடந்தவரா?
- குறுகிய காலத்திலேயே அதிக வருவாயை உழைப்பதில் ஆர்வமுள்ளவரா?
- ஒரு குழுவுடன் இணைந்து செயற்படுவதில் ஆர்வமுள்ளவரா?
- சிறந்த தொடர்பாடல் திறன் உடையவரா?
- ஓய்வூதியரா?

இன்றே காப்புறுதியின் முன்னோடியும் அரச நிறுவனமுமான எம் உடன் இணையுங்கள்!

தகைமை:

G.C.E. O/L 6 பாடங்களில் சித்தி கணிதம், தமிழ் அடங்கலாக
நீங்கள் எம்முடன் இணைந்தால்....

- அரச காப்புறுதியில் இணைவதன் மூலம் காப்புறுதி உலகில் ஓர் அங்கீகாரம்
- வெளிநாட்டுச் சுற்றுலா
- ஆரோக்கியமான போட்டிகளும் அதற்கேற்ற பரிசில்களும்
- இலங்கையின் மாபெரும் நட்சத்திர விடுதிகளில் பயிற்சிகள் மற்றும் விருந்துபசாரங்கள் வாகன கடனுதவி
- போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு வருடாந்த கௌரவிப்புகள்
- தகைமைக் காலத்தில் சிறப்பாக செயலாற்றியவர்களுக்கு Bank Assurance.
- சந்தைப்படுத்தல் அதிகாரி போன்ற நிரந்தர வேலைவாய்ப்பு மற்றும் EPF, ETF, வைத்தியசாலைக் கொடுப்பனவுகள்

காப்புறுதியில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு விசேட மேலதிக சலுகைகள்

இவற்றில் ஆர்வமுள்ளவர்கள் தங்களது விண்ணப்பங்களை எதிர்வரும் 30.09.2012 இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விற்பனை முகாமையாளர்
இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்,
இல. 571, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

(22605) (45.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்துகளுள்
சிறந்தவை
ஓய்வும் உண்ணா
நோன்பும்.
-ஃபிராங்க்ளின்



# வார வசந்தம் 01

உதயன் 08 செப்ரெம்பர் 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு




த.சஜீவன்,
3 ஆம் வருடம், கொழும்பு
பல்கலைக்கழகம்.


# இயன் மருத்துவம்

## மருந்தில்லா மருத்துவம்

**இயன்மருத்துவம் என்பது பிறப்பு முதல் முதுமைவரை சகல வயதினரதும் இயக்கம் மற்றும் செயற்பாட்டுத் திறனை விருத்தி செய்தல்**





01

மருந்தில்லா மருத்துவம் என்பதே ஒரு தனிச்சிறப்பு. அந்த வகையில் இயன்மருத்துவத்துக்கு ஒரு தனி இடம் உண்டு. இங்கு குறிப்பிடப்பட்ட ' இயன் மருத்துவம்' எனும் சொல்லானது, பலருக்கு பரீட்சியமற்ற ஒன்றாகும். இதுவே 'பிசியோ தெரபி' (Physiotherapy) என்று அழைக்கப்படும் சிகிச்சைமுறையின் தமிழ்வடிவமாகும். மிகவும் அவசியமானதாகவும், வேகமாக வளர்ந்து வரும் துறையானதுமான இயன்மருத்துவம் பற்றிய அறிவும், விழிப்புணர்வும் எமது மக்களிடையே காணப்படாமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும். எனவேதான் உலக இயன் மருத்துவ தினமான இன்று (செப்ரெம்பர் -8) அதன் அவசியமும், முக்கியத்துவமும் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் கற்கைநெறிகள் தொடர்பான கையேட்டில் காணப்படும் ' இயன்மருத்துவம்' எனும் கற்கை நெறி தொடர்பாக மாணவர்களிடையே காணப்படும் விளக்கமின்மையைப் போக்கவும் இக் கட்டுரை வரையப்படுகிறது.

இயன்மருத்துவம் என்பது பிறப்பு முதல் முதுமைவரை சகல வயதினரதும் இயக்கம் மற்றும் செயற்பாட்டுத் திறனை (Movement & Functional ability) விருத்தி செய்தல், பராமரித்தல், அதிகபட்ச திறனுடன் ஆயுள் காலம் முழுவதும் செயற்படவைத்தல் என்பவற்றுக்கான சேவையை வழங்கும் சுகாதார பராமரிப்பு (Health care) சார்ந்த ஒரு தொழிற்றுறையாகும். அதாவது மூப்படைதல், காயமடைதல், நோய்வாய்ப்படல் நோய்களால் ஏற்படும் ஒழுங்கீனங்கள் (disorders) மற்றும் சூழற் காரணிகளால் ஏற்படும் பாதிப்புக்கள் போன்றனவற்றால் பாதிக்கப்படும் உடற்தொழிற்பாட்டையும், இயக்கத்தையும் மீண்டும் நிலை நிறுத்துவதாகும். மேலும் மேம்படுத்தல் செயற்பாடுகள், தடுப்பு முறைகள்(Prevention), சிகிச்சை முறைகள், புனர்வாழ்வு முறை கள்( Rehabilitation) என்பவற்றின் மூலம் சுகாதாரம் சார்ந்த தனிநபர் வாழ்க்கைத்தரம் உடல் இயக்கத்திறன் என்பன அதிகரிக்கப்படுகின்றன. இது தனி நபர்களின் உடலியல், உளவியல் உணர்வியல், சமூகநன்மை என்பவற்றை உள்ளடக்குகிறது.

இயன்மருத்துவமானது நோயாளிகளுடனும், மற்றைய மருத்துவம் சார் தொழிற்துறைகளுடனும் சிறந்த இடைத் தொடர்புகளைப் பேணி வரும் (Interactions & Team work) ஒரு துறையாகும். இயன் மருத்துவத்தின் சிகிச்சை முறைகள் தீர்வு, தடுப்பு எனும் இரு கோணங்களை உடையன. உடலில் ஏற்படும் வலிகளைப் போக்கி, பாதிக்கப்பட்ட பகுதிகளை மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதன் மூலம் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பச் செய்து மீண்டும் பிரச்சினைகள் ஏற்படாமல் தடுப்பதே இச்சிகிச்சைகளின் முக்கிய நோக்கமாகும். இவற்றில் மூட்டுக்களின் அசைவு வீச்சு பயிற்சிகள் (Range of mation & mobilisation exercise), சமனிலை, ஒருங்கிசைவு பயிற்சிகள் (Balance & cordination), இழுவை, வலுவூட்டற் பயிற்சிகள் (Stretching &-Strengthening) , நீர்நிலைப் பயிற்சிகள் (Hydrotheraphy) புனர்வாழ்வின் போதான விசேட பயிற்சிகள் போன்ற பல பயிற்சிகளும் இயன்மருத்துவரால் மேற்கொள்ளப்படும் பல நுட்பங்களும் (manipulation, mobilisation, percussion, PNF Bobath techniques....) சிகிச்சைக்களாக மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் வெப்பம், ஒலி, ஒளி, அதிர்வு என்பவற்றின் மூலம் பெறப்படும் சக்தியைக் கொண்டும் சிகிச்சைகள் வழங்கப்படும் (JR, SWD, Cryotheraphy) சில இலத்திரனியல் சாதனங்களைப் பயன்படுத்தி நரம்புகளைத் தூண்டும் (TENS) சிகிச்சையும் வழங்கப்படுகிறது.

**இன்று உலக இயன் மருத்துவ தினம்**

என்பு தசைகளுடன் தொடர்புடைய இயன்மருத்துவமானது மூட்டுக்களிலும், அவற்றைச் சூழ்ந்து காணப்படும் சகல உடற் கட்டமைப்புகளிலும் ஏற்படும் பிரச்சினைகள், என்பு முறிவுகள் என்பு தொடர்பான சத்திரசிகிச்சையின் பின்னரான புனர்வாழ்வு, தசை தொடர்பான பிரச்சினைகள் என்பவற்றைக் கையாளுகிறது.

தசைகளில் ஏற்படும் நோ, வழமைக்கு மாறாக இழுபடுதல், கிழிவடைதல் போன்ற காரணங்களினால் பாதிக்கப்படும் வழமைக்குமாறான உடல்இருக்கை நிலைகள்(Impaired Posture), தசைத் தொழிற்பாடு, மூட்டுக்களின் அசைவாற்றல், தசைகளின் தொழிற்பாடு வினைத்திறன் மூட்டுக்களின் இயக்க வீச்சு, என்பவற்றை சீர்செய்து மீண்டும் முன்னரான சாதாரண நிலையை அடையச் செய்வதில் இயன்மருத்துவத்தின் பங்கு முக்கியமானது. மேலும் மூட்டுக்களில் ஏற்படும் சகலவிதமான நோய் நிலைமைகள், உதாரணமாக மூட்டு வாதம்(Arthritis), மூட்டுவலி, மூட்டுக்கள் இறுக்கமடைதல் (Stiffness), மூட்டுக்களைச் சுற்றியுள்ள இழையங்களில் ஏற்படும் வீக்கநிலை, மூட்டுமாற்று சத்திர சிகிச்சையின் பின்னரான புனர்வாழ்வு, முதுகுவலி, கழுத்துவலி, பாதிப்பான உடல் இருக்கை நிலை (Poor Posture), மூட்டு இழையங்களின் பாதிப்புக்கள் (Ligment strain, muscle pain) என்பவற்றிலும் இதன் பங்கு அளப்பரியது. இந்த நிலைமைகளின் போது இவை மேலும் சிக்கலடையாது கட்டுப்படுத்தல், விருத்திசெய்தல், இயக்க வீச்சை விருத்தியாக்கல், தசைகள், என்புகளை வலுவாக்கல் போன்ற இதர பல செயற்பாடுகளை இயன் மருத்துவர் மேற்கொள்வார்.

நரம்பியல் தொடர்பான இயன் மருத்துவமானது மூளை, முன்னாண் நரம்புகள் தொடர்பாக எழும் பாதிப்புக்களைச் சரி செய்வதாகும். பக்கவாதங்கள் (Paralysis) அதாவது உடலின் வலப்பாகமோ , இடப்பாகமோ செயலிழத்தல் (Hemiplegia)இரு கால்களும் செயலிழத்தல்(Paraplegia) ஒரு அவயவம் மட்டும் செயலிழத்தல்(Monoplegia), நான்கு அவயவங்களும் செயலிழத்தல் (Guadriplegia) மேலும் தசை வளக்கேடு(Musculor dystrophy), பார்க்கின்சன் நோய் நிலமை, மூளை முடக்குவாதம் (Cerebral Palsy), மூளையில் ஏற்படும் காயங்கள் (Head injury) முன்னாண் காயங்கள் (Spinal cord injury) இயக்க நரம்பு நோய்கள் சுற்றயல் நரம்பு பாதிப்புக்கள் (Peripheral nervopathy) பிந்திய போலியோ நோய், சிலைன் பார்ரி நோய் (GBS) போன்றன இயன்மருத்துவம் அவசியம் தேவைப்படும் நோய் நிலைமைகளாகும். இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான விடயம் என்னவெனில், சிகிச்சையை எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாக ஆரம்பிக்க வேண்டும். இதன் மூலமே ஏற்படக்கூடிய உடல் ஒழுங்கீன நிலைகளைத் தடுக்க முடியும் . இவற்றின் சிகிச்சையானது சமனிலைப் பயிற்சிகள் ஒருங்கிசைவுப் பயிற்சிகள், நடத்தல் பயிற்சிகள், PNF எனப்படும் மூளையின் பயன்படுத்தப்படாத இயக்ககலங்களைப் பயிற்றுவிக்கும் பயிற்சிகள், வலுவூட்டற் பயிற்சிகள், நீர்நிலையியல் பயிற்சிகள், போன்ற பல்வேறு கோணங்களை உடையது.

சுவாசத் தொகுதி, இதயம் தொடர்பான இயன்மருத்துவமானது இவற்றின் பௌதிக ஸ்திரத்தன்மையை பேணுதலுடன் தொடர்புடையது. சுவாசக் குழாயின் அடைப்புக்கு காரணமாக உள்ள சுரப்புக்களை (சளி) வெளியேற்றி சாதாரண முறையில் இலகுவாக சுவாசிக்க வைப்பதன் மூலம் தேவையான அளவு ஒட்சிசன் விநியோகத்தை உடலுக்கு வழங்குவதே இதன் பிரதான நோக்கமாகும். மேலும் இதயம், நுரையீரல் தொடர்பான சத்திர சிகிச்சைகளுக்கு இதர பயிற்சிகளுடன் தயார்படுத்தலில் இருந்து, சத்திரசிகிச்சையின் பின்னரான முதலாம் நாளில் இருந்து ( நோயாளி வீடு சென்று செய்ய வேண்டிய முகாமைத்துவம் அனைத்தும் இதில் அடங்கும். அதாவது மூட்டுக்களில் ஒழுங்கீனங்கள் வராமல் தடுத்தல், உடல் இருக்கை நிலையை சரி செய்தல்(Posture Correction), சுயமாகவே சுவாசக் குழாயில் உள்ள மேலதிக சுரப்புக்களை வெளியேற்றும் பயிற்சி(Effective coughing,huffing,ACBT). நுரையீரலின் கனவளவு குறைவடைவதைத் தடுத்தல்(Lung collapse) என்பன அவற்றில் முக்கியமான சிலவாகும். சுவாசக் குழாய் அழற்சி, எம்பைசீமா (Emphysema), ஆஸ்துமா, மூச்சுக் குழாய் தளர்ச்சி(Bronchiectasis) போன்றன இயன் மருத்துவம் தேவைப்படும் சுவாசத் தொகுதி சம்மந்தமான நோய்களில் சிலவாகும். சுவாசக்குழாயில் உள்ள மேலதிக சுரப்புக்களை வெளியேற்றுவதில் Postural drainage எனும் முறையும் இயன்மருத்துவரால் பிரயோகிக்கப்படும் சில நுட்பங்களும்(Percussion technique) மிகச் சிறந்த பயனைத் தந்தவண்ணமுள்ளன.

குழந்தைகள்சார் இயன்மருத்துவமானது, முடியுமானவரை விரைவில் கண்டறியப்படும் நோய் நிலைமைகளுக்கும் உடல் ஒழுங்கீனங்களுக்குமான பல்வேறு சிகிச்சைகளைக் கொண்டது.

இத்துறை இயன் மருத்துவர்கள் கைக் குழந்தை முதல் வளரும் பதின்மவயதினரிடையே காணப்படும் வழமைக்கு மாறான உடல் சார் நிலைமைகளை இனங்காணுதல், சிகிச்சையளித்தல், புனர்வாழ்வு முகாமைத்துவம் அளித்தல் என்பவற்றில் வல்லவர்களாக காணப்படுவர்.


(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் கைரேகைகளின் பலன்கள்

36




### செவ்வாய்-குரு ரேகைகள் செவ்வாய் ரேகை

செவ்வாய் மேடு கையில் இரண்டிடங்களில் அமைந்திருப்பது. புதன் மேட்டுக்கும் சுக்கிர மேட்டுக்கும் மத்தியில் ஒன்று; குரு மேட்டுக்கும் சுக்கிர மேட்டுக்கும் மத்தியிலிருப்பது மற்றொன்று. குருமேட்டுக்கு அடியிலுள்ள செவ்வாயின் ரேகைகள் சுக்கிர மேட்டில் கீழ்நோக்கி ஆயுள் ரேகைக்கருகில் செல்லுகின்றன. இவைகள் செல்வாக்கு ரேகைகளாக மாட்டா. செவ்வாய் ரேகை ஆயுள் ரேகையைப்போல நன்கு பதிந்து காணப்படும். அது தேகதிடத்தையும் உடல் பராக்கிரமத்தையும் குறிக்கும்.

செவ்வாய் ரேகை ஆயுள் ரேகைக்கு மிக்க ஆதரவாயுள்ளது. ஆயுள் ரேகை மெல்லியதாய் அல்லது அகன்று சங்கிலி போன்றுமிருந்து, அருகில் ஒரு செவ்வாய் ரேகை இருந்துவிடில், ஆயுள் ரேகையின் குறையை நிவர்த்தி செய்து அபாரமான தேகசக்தி, நிலை பெற்ற சாந்தம், எதிரியை அடக்குந் தன்மை முதலியன உண்டாகும். ஆத்மசக்தி பூரணமாயிருப்பதால் எந்தக்காரியத்தையும் அரை குறையாய் விடமாட்டார்கள். தமக்குள்ள சக்தியை எவ்வகையிலும் உபயோகப்படுத்தத் தயாராய் இருப்பார்கள். செவ்வாய் ஆதிக்கர்கள் சத்துள்ள ஆகாரத்தைத் திருப்தியாக உண்பார்கள். மதுவும் அருந்துவார்கள். தேக பலத்தைக்கொண்டு எவ்வித




வேலையையும் செய்வர்.


1.ஆயுள் ரேகை அளவுக்கு செவ்வாய் ரேகையும் நீண்டிருந்தால், வாழ்நாளெல்லாம் தேக பலத்தோடிருப்பர். நோய் நொடிகள் ஏற்படா.

2.செவ்வாய் ரேகையின் கிளைகள் மேல் நோக்கி ஆயுள் ரேகையைக் குறுக்கிட்டுச் சென்றிருந்தால், மனத்தைரியத்தைக் கொண்டே படிப்படியாக முன்னேற்றமடைந்து வருவதைக் குறிக்கும்.

3.செவ்வாய் ரேகையின் கிளை புத்திர ரேகையோடு கலந்து விடுமானால், மனத்தைரியத்தையும், புத்திக்கூர்மையையும் குறிக்கும். யுக்தியும் யோசனையும் ததும்பி நிற்கும்.

4.செவ்வாய் ரேகையின் கிளை, விதி ரேகையில் கலந்து விடுமானால் எடுத்த காரியத்தில் நிச்சயமாய் வெற்றி பெறுவோம் என்னும் திடத்தைக் கொடுக்கும். தொழில் முயற்சிகளில் இலாபம் பெறுவர்.


5.செவ்வாய் ரேகையின் கிளைகள் புத்தி ரேகையைக் குறுக்கிட்டுச் சென்றிருந்தால், மிகுந்த ஊக்கத்தோடு வேலை செய்ய நேர்ந்தும், அடிக்கடி மூளையில் களைப்புண்டாகும். அளவுக்கு மிஞ்சி வேலை செய்வதை அறிந்து கொள்ள முடிவதில்லை. கை ஒடுங்கியிருந்து




சுக்கிரமேடு பருத்து (வலுத்து) இருக்குமானால், அந்தக் கை மிக்க உணர்வுடையதாய் இருக்கும். அதனோடு செவ்வாய் ரேகையும் ஆயுள் ரேகைக்குச் சமமாயிருந்துவிடில், காமப் பசியுடையவராய் இருப்பர். திடமான தேகாரோக்கியமுள்ளவராகையால் போக சக்தியும் மிகுந்திருக்கும். போகத்தை அனுபவிப்பதில் ஒழுக்கம் இராது.

6.செவ்வாயின் கிளை ரேகை, சூரியன் அல்லது விதிரேகையைக் குறுக்கிட்டுப் போயிருக்குமானால் எவ்வளவு இச்சையுடையவராயினும் அடக்கமுடையவராயிருப்பர். படத்திலுள்ள ரேகையமைப்போடு, சூரிய ரேகையின் இறுதியில் ஒரு நட்சத்திரக் குறி அல்லது புள்ளி, புள்ளடி, தடை முதலிய எவ்வித குறிகளிருப்பினும் கீர்த்தியை இழப்பர்.

7.செவ்வாயின் கிளை ரேகை பாச ரேகையில் குறுக்கிடுமாயின், விசுவாசமற்ற தன்மையால் விவாக சுகத்தை இழப்பர். பாச ரேகை இரண்டு சிறு கிளைகளுடன் தோன்றுமாயின், மேற்சொன்னதை உறுதிப்படுத்தும்.




8.செவ்வாயின் கிளை கையின் அடி மட்டத்தில் குறுக்கீடாய் சந்திர மேட்டுக்குச் சென்றுவிடில், தேகத்தில் உணர்ச்சிகள் மிகுந்துவிடும். அனுபவிக்க ஆயுள் போதாதிருக்கும்.

(தொடரும்)

# உலக சினிமா வரலாறு

■வலையவன்

பெர்க்மனின் படத்தை பார்ப்பதற்கு நமக்கு மொழி அவசியமில்லை. அவர்கள் என்ன பேசுகிறார்கள் கதை எங்கே நகருகிறது என்ற கேள்விகளும் நமக்கு பயன்படாது. அவரது காட்சிகளை உள்வாங்குவதற்கு இரண்டு கண்களும், அவரது உலகத்திற்குள் நம்மை விரல் பிடித்து அழைத்துசெல்லும். அந்த இசையை கேட்பதற்கு இரண்டு காதுகளும் மட்டும் நமக்கு போதுமானது. நம்மை அறியாமல் நாம் வேறு உலகத்திற்குள் மனித மனங்களின் இருண்மைக்குள் அலைவதை உணரமுடியும். வைல்ட் ஸ்ட்ராபெர்ரீஸ் அத்தகையதொரு படமாக அமைந்தது. இறப்புக்காக காத்திருக்கும் வயோதிபனின் மனதுக்குள் செல்லும் கமெரா நம்மை தனிமையின் ஆழத்துக்குள் அழைத்துச் சென்றுவிடுகிறது. பெர்க்மன் வாழ்க்கையில் ஒரு மைல்கல்.

இதனைத்தொடர்ந்து ''த்ரூ த கிளஸ் டார்க்கி'', ''தி சைலன்ஸ்'', ''பெர்சோனா'', ''வெர்ஜின் ஸ்பரிங் க்ரைஸ் அண்ட் விஸ்பர்ஸ்'' போன்ற மகத்தான காவியங்கள் பெர்க்மனின் கைவண்ணத்தில் உலக சினிமாவுக்கு மாபெரும் நன்கொடையாகக் கிடைத்தன.

பெர்க்மனின் திரைப்படங்களின் வெற்றிக்கு சரிவிகிதாசாரமான பங்களிப்பை தந்திருப்பவர் 1953க்கு பிறகான அவரது எல்லாப் படங்களுக்கும் ஒளிப்பதிவு செய்த ஒளிப்பதிவாளர் சாம் நிக்விஸ்ட். நிக்ச்விஸ்டின் ஒளிப்பதிவுக்குள் பாத்திரங்கள் கட்டுண்டு ஒளிந்து கிடப்பதை ஒரு தேர்ந்த ஒளிப்பதிவாளன் கண்டுணரமுடியும்.

பெர்க்மனின் திரைப்படங்களின் வெற்றிக்கு சரிவிகிதாசாரமான பங்களிப்பை தந்திருப்பவர் 1953க்கு பிறகான அவரது எல்லாப் படங்களுக்கும் ஒளிப்பதிவு செய்த ஒளிப்பதிவாளர் சாம் நிக்விஸ்ட்.




பெர்க்மன் தனது திரைப்படங்களுக்கு உலகமெங்கும் வரவேற்பை கண்டபோதிலும் தன் சொந்த நாடான ஸ்வீடனில் அவர் தொடர்ந்து அவமானப்படுத்தப்பட்டு வந்தார். ஸ்வீடனின் சக இயக்குநர்கள் அவர் மேல் கடும் விமர்சனங்களை வைத்தனர். அவர்களுள் ஆணி Widerberg எனும் இயக்குநர் ஒருபடி மேலே போய் 1962இல் ''பெர்க்மன் உன்னுடைய படங்கள் பழைய பனை மட்டையாக இருக்கின்றன. பார்க்க சகிக்கவில்லை தயவு செய்து உன் வாழ்க்கையில் ஒரு நல்ல படமாக எடுத்துவிடு'' எனும் வாசகங்கள் கொண்ட துண்டுப் பிரசுரத்தை ஸ்வீடனில் விநியோகித்தார்.

இதுமட்டுமல்லாமல் 1976இல் அவரது வீட்டினுள் புகுந்த பொலிசார் அவரைக் கைது செய்தனர். கேட்டதற்கு அவர் வருமானவரி கட்டவில்லை என காரணத்தைச் சொன்னார்கள். இதனால் பெரும் மன உளைச்சலுக்கு ஆளான பெர்க்மன் தீவிர நரம்புத் தளர்ச்சி நோய்க்கு ஆளானார். பின் தனக்கிருந்த ஸ்ரூடியோக்களை மூடிவிட்டு ஸ்வீடனை விட்டே வெளியேறி ம்யூனிச்சிற்கு சென்று தனக்கான வீட்டைத் தேடிக்கொண்டார்.

இந்தப் பிரச்சினைகளுக்கு பிறகு 1983இல் தனது வாழ்க்கையை அடியொற்றி எடுத்த பேனி அண்ட் அலெக்ஸாண்டர் எனும் திரைப்படம் உலகளவில் பிரமாண்டமான வெற்றியை பெற்றதோடு அவரது வாழ்நாளின் மிகச்சிறந்த படமாகவும் உருக்கொண்டது.

[தொடரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் செய்யும் மாயை

பணம் வந்தால் பத்தும் பறந்து போகும் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். பணம் வந்தால் பற்றும் பறந்து போகும் என்றார் நண்பர் ஒருவர்.

''என்ன சொல்கிறீர்கள்?'' என்றேன்.

அவர் ஒரு கதை சொன்னார்.

ஒரு கணவனும் மனைவியும் சுற்றுலா சென்றார்கள். ஓர் இடத்தில் சுற்றுலாப் பயணிகளைச் சிறு விமானங்களில் ஏற்றிச் சுற்றிக் காட்டிக் கொண்டிருந்தார்கள். ''அந்த விமானத்தில் ஏறி சுற்றிப் பார்க்க ஆசையாக இருக்கிறது!'' என்றாள் மனைவி. இருவரும் போய் விசாரித்தார்கள்.

''ஆளுக்கு நூறு ரூபாய் ஆகும்!'' என்று பதில் வந்தது.

''அப்படி என்றால் நாம் இரண்டு பேருக்கும் இருநூறு ரூபா ஆகுமே.. என்னத்துக்கு வீண் செலவு..?'' என்று பேசிக் கொண்டார்கள்.

இவர்களின் தயக்கத்தைப் புரிந்து கொண்ட விமானி, ''சரி.. நீங்க பணம் எதுவும் தர வேண்டாம்.. விமானத்தில் ஏறிக்கொள்ளுங்கள் ...ஆனால், ஒரு நிபந்தனை ..!''

''என்ன, சொல்லுங்கள்?''

''விமானத்துக்குள்ளே ஒரு சிறு சத்தம் கூடப் போடக்கூடாது. அப்படிப் போட்டால் நீங்க இருநூறு ரூபா எனக்குத் தந்துடனும்!''

''அவ்வளவுதானே, நாங்கள் கட்டுப்படுகிறோம்!''

பிறகென்ன... கணவனும் மனைவியும் மிகுந்த உற்சாகத்துடன் விமானத்தில் ஏறி உட்கார்ந்தார்கள்.

விமானம் புறப்பட்டது. உயரத்தில் எழும்பியது...

அது வரை இருவருக்கும் பயம் ஒன்றும் தெரியவில்லை. அதன் பிறகுதான் எல்லாம்!

விமானம் கண்மண் தெரியாத வேகத்தில் பறக்க ஆரம்பித்தது. ஆகாயத்தில் எவ்வளவு உயரம் போக முடியுமோ அவ்வளவு உயரம் போனது.

அங்கேயிருந்து திடீரென்று கீழே வந்தது. குட்டிக் கரணம் அடித்தது!

தலைகீழாகப் பறந்தது!

எந்தெந்த வகையில் பயமுறுத்த முடியுமோ அந்தந்த வகையில் எல்லாம் பயமுறுத்திப் பார்த்தார் விமானி. எப்படியாவது அவர்களைச் சத்தம் போட வைத்து இருநூறு ரூபாயை வாங்கிட வேண்டும் என்பது அவர் நோக்கம். ஆனால், அது நிறைவேறவில்லை.ஏனென்றால், விமானத்துக்கு உள்ளிருந்து கொஞ்சம் கூட சத்தம் வரவில்லை!

'இனியும் இவர்களைச் சத்தம் போடவைக்கமுடியாது' என்று முடிவெடுத்து விமானத்தைக் கீழே இறக்கினார் விமானி.

அந்தப் பெண்மணிதான் முதலில் கீழே இறங்கினாள். அவளை நெருங்கி தன் பாராட்டுதலைத் தெரிவித்தார் விமானி. ''பரவாயில்லையே... நீங்கள் ஒரு சிறு சத்தம் கூட போடவில்லையே!''

''ஒரு கட்டத்துல என்னையும் அறியாமல் சத்தம் போட இருந்தேன். நல்ல வேளை, அடக்கி இருந்தேன்!''

''எப்போ அது?''

''என் வீட்டுக்காரர் விமானத்திலிருந்து கீழே விழுந்த போது ...!''

நண்பர் சொன்ன கதையைக் கேட்டு நான் வாய்விட்டுச் சிரித்தேன். ஆனாலும் அது என்னை சிந்திக்கவும் வைத்தது.

பணம், பற்றையும் பறக்கவைத்து விடுகிறது. சரி, இதற்கு என்ன செய்யலாம்? ஞானிகள் சொல்கின்றார்கள். பணத்தின் மீது வைக்கிற பற்றையே கொஞ்சம் விலக்கி வையுங்கள்!''

பணம், கணவன்-மனைவி என்கிற வார்த்தைகளையே கூட அர்த்தம் இல்லாமல் செய்துவிடும் என்பதற்கு ஓர் உதாரணம்.

மேல் நாட்டில் ஒரு கணவன்-மனைவி. மனைவியின் ஊதாரித்தனத்தைப் பொறுக்க முடியாத கணவன் பத்திரிகையில் ஓர் அறிவிப்புக் கொடுத்தான். 'இனி என் மனைவி வாங்கும் எந்தக் கடனுக்கும் நான் பொறுப்பாளியாக முடியாது!'



மறுநாள் அதே பத்திரிகையில் மனைவி கொடுத்த அறிவிப்பு;

'என் கடன்களுக்கு யார் பொறுப்பாளியாக இருக்கிறாரோ... அவர்தான் இனி என் கணவர்!''

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# வாசகர் திருமுகம்

## வடக்கின் வசந்தம் சிங்களவருக்கு கிட்டியது

போருக்குப் பின்னரான வசந்தம் வட மாகாணத்துக்கு கிடைத்ததோ இல்லையோ, சிங்கள மக்களுக்கு கிட்டியுள்ளது என்பதை விடுமுறை நாள்களில் யாழ். வீதிகளில் பவனி வரும் பஸ் வண்டிகளின் எண்ணிக்கை பறைசாற்றத் தவறவில்லை. சொகுசு பஸ் வண்டிகளில் நிறைந்திருக்கும் பயணிகள் சாரிசாரியாக பாதைகளில் தடுமாறுவது சமீபத்தில் காணக்கூடிய காட்சியாக இருப்பதை எவரும் கண்டிருப்பர். வார இறுதி நாள்களுடன் போயா விடுமுறையும் சேர்ந்துவிட்டால் சுற்றுலாப் பயணிகளின் வருகை கட்டுக்கடங்காமல் இருக்கிறது. வடக்கின் வசந்தம் சிங்களவருக்கு கிட்டியுள்ளது.

சிங்களப் பகுதிகளிலிருந்து வட பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகள், முன்னொரு காலத்தில் நயினாதீவிலிருக்கும் பௌத்த விகாரையைத் தரிசிக்கவும், யாழ்ப்பாணத்திலிருக்கும் நாகவிகாரையைத் தொட்டு வணங்கவும் அதிக ஆர்வம் காட்டியமை தலைமுறைக்குத் தெரிந்த விடயம். அப்போதெல்லாம், சொகுசு பஸ் வண்டிகள் இல்லாதிருந்தாலும் அகப்பட்ட பஸ் வண்டிகளை கமுகுத் தோரணங்களாலும், தென்னை இளம் குருத்துக்களாலும் அழகாக அலங்கரித்து பஸ் வண்டியின் முன் ஆசனத்தில் ஒரு பௌத்த பிக்குவையும் இருத்திக் கொண்டு சுலோகங்களை உச்சாடணம் செய்தவண்ணம் மத வழிபாட்டுக்கென பயணம் செய்த சிங்கள பௌத்த குடும்பங்களையே காணக் கூடியதாக இருந்தது.

இப்போதெல்லாம் அத்தகைய பக்குவத்தைப் பயணிகளிடம் காண முடியாது போனாலும், சுற்றுலாப் பயணிகளின் கூட்டத்தில் அனேகமாக நடுத்தர வகுப்பினரையே காணக்கூடியதாக இருக்கிறது. இவர்களின் உடை, நடை, பாவனைகளில் மாற்றங்கள் காணப்பட்டாலும் இவர்கள் காண விரும்பும் இடங்களில் அதிசயமான மாற்றங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

ஒரு சனிக்கிழமை, நல்லூர் முருகனின் வாசலில் வீதியின் இருமருங்கிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களின் எண்ணிக்கை பத்துக்கும் குறைவில்லாமலிருந்தது. ஆலயத்துக்குள் பிரவேசிக்கும் சுற்றுலாப் பயணிகளின் நடமாட்டம் எந்த விதத்திலும் சைவ வழிபாட்டு முறைகளுக்கு ஒத்துப் போகாமல் இருப்பதை அவர்களை தவறாக கருத முடியாது. ஏனெனில் அவர்கள் பௌத்தர்களாக அனுஷ்டிக்கும் வழிபாட்டு முறைகள் வேறு விதமாக இருப்பது தெரிந்ததே. எனினும், ஓரளவுக் கேனும் இவர்களை வழி நடத்திச் செல்ல ஆலய நிர்வாகம் முயன்றதாகத் தெரியவில்லை. குறிப்பாக கைகால்கள் கழுவிய பின்னர்தான் சுத்தமாக ஆலயத்துக்குள் நுழைய வேண்டுமென்ற விதி கூட அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. தெரியப்படுத்தவும் இல்லை. கோயிலின் உள் வீதியில் கூட சுற்றி வரும் போது வழிமுறைகள் தெரிந்ததாகக் காணப்படவில்லை. அவற்றை வழி நடத்தவும், ஆலய நிர்வாகம் ஒழுங்கு செய்யவில்லை. அர்ச்சனை செய்ய விரும்பும், பயணிகளுக்கு பெயர்களைக் கூட கேட்டறியும் மொழி பரிவர்த்தனை சுத்தமாகக் கிடைக்கவில்லை. இதில் கோயில் நிர்வாகம் கவனம் செலுத்த வேண்டியது அவசியமான செயற்பாடாகும். இனத்தால், மதத்தால், மொழியால் வேறுபட்டிருக்கும் மக்களை, காலப்போக்கில் மனத்தால் அன்பால் ஆதரவால் ஐக்கியப்படுத்தும் ஒரு மாற்றம் உண்டாகுமாயின், எவர் தான் விரும்பமாட்டார்கள். கோயிலுள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் மூல விக்கிரகங்களை வெறும் காட்சிப் பொருள்களாக மட்டும் பார்த்துவிட்டுச் செல்லும் பயணிகளைக் காண மனம் வேதனைப்படுகிறது.

வட மாகாணத்துக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் அடுத்தகட்ட காட்சியிடம் புதுக்குடியிருப்பிலிருக்கும் விடுதலை இயக்க தலைவரின் மறைவிட மர்மப் பிரதேசம். இந்த இடத்தைக் காண்பதற்கு விடுமுறை நாள்களில் கூடும் மக்களின் எண்ணிக்கை உத்தேசமாக 4000 - 5000 வரை இருக்கலாமென, அங்கு வரிசையில் காத்திருந்த பயணிகளின் எண்ணிக்கையை வைத்து மதிப்பிடக் கூடியதாக இருந்தது. இவர்களின் ஆர்வம் விடுதலைப்புலிகளின் வீரம் செறிந்த போராட்டத்துக்கு தரும் அங்கீகாரமா அல்லது இவர்களை போரில் தோற்கடித்த இராணுவத்தின் வீரத்துக்கு அளிக்கும் சன்மானமா என்பது புரியாத புதிராக இருக்கத்தான் செய்கிறது.

எது எப்படியிருப்பினும், சிங்கள மக்களின் சுற்றுப்பயணங்கள், தமிழ் மக்களின் அன்றாட வாழ்வின் அவலங்களை நன்றாக உணர வைக்க முடியுமானால், வடக்கில் உண்மையான வசந்தம் வீசும் வாய்ப்புக் கிடைக்காமல் போகாது.

**உமா மகாலிங்கம், லண்டன்.**

## ஒலி பெருக்கியின் சத்தத்தை குறையுங்கள்

ஒலி பெருக்கி பாவனையானது கடந்த காலங்களை விட அண்மைக் காலங்களில் எமது பிரதேசத்தில் அதிகரித்துக் காணப்படுகின்றது. கோயில் திருவிழாக்கள், திருமண வைபவங்கள், சனசமூக நிலைய ஆண்டு விழாக்கள் போன்ற பல நிகழ்வுகளின் போது ஒலி பெருக்கிப் பாவனை கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு போய்விட்டது. ஆனால் இது பற்றி அடிக்கடி பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தும் எந்தப் பயனும் ஏற்படவில்லை.

ஒரு திருமண நிகழ்வு எனில் நிகழ்வுக்கு 3 நாள் முன்பு இருந்தே அவர்களின் வீட்டில் உரத்த சத்தமாக சினிமாப் பாடல்கள் ஒலிக்கும்.

திருவிழாவின் போது பக்தர்கள் கோயிலுக்குச் செல்லாமல் வீட்டிலிருந்தே வழிபடக் கூடியவாறு மந்திரங்கள், தோத்திரங்கள், மேளக் கச்சேரிகள் போன்றன ஒலி பெருக்கியில் ஒலிக்க விடப்படுகின்றன. கோயில் நிர்வாகங்களில் கல்விமான்களே பொறுப்பாக உள்ளனர். அதனால் இந்த விடயத்தில் அக்கறை காட்ட வேண்டும். ஒலிபெருக்கிப் பாவனையால் மாணவர்கள், முதியோர்கள், நோயாளிகள் போன்றோர் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.

இதனால் மாணவர்கள் பாடசாலையில் கற்ற கல்வியை வீட்டில் வந்து மீட்டுப் பார்க்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து ஒலிபெருக்கிப் பாவனையைக் கட்டுப்படுத்தவும், எதிர்கால மாணவ சமுதாயத்தினரின் கல்வி நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்காது அவர்களின் முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்குக.

**கைதடி வாழ் மாணவர்கள்.**

## மக்களின் சேவை நாளில் கூட்டத்தை தவிர்க்கலாம்

கடந்த 22 ஆம் திகதி புதன்கிழமை கோப்பாய்ப் பிரதேச செயலகத்துக்குச் சென்றேன் . காலை 9.30 மணிக்கு அங்கு சென்ற போது என்னால் எந்த ஒரு மேலதிகாரியையும் முற்பகல் 11.30 மணி வரை சந்திக்கமுடியவில்லை. ஏனெனில் அவர்கள் அலுவலகத்தில் இருந்த போதும் பிரதேச செயலரின் அறையில் இருந்து உரையாடிக்கொண்டிருந்தனர். அது அலுவலக விடயமாக இருக்கலாம், ஆனால் புதன்கிழமை வேலைநாளாக இருப்பது நடைமுறையில் உள்ள வழமை. இந்த நாளில் தான் பொதுமக்கள் கூடுதலாக அலுவலகங்களுக்கு வருகிறார்கள்.

கிராமசேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள். மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் அன்றைய தினத்தில் கலந்துரையாடலை நடத்துவதால் பொதுமக்கள் பலர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அன்றையதினம் பிரதேசசெயலர் தனது சகஅதிகாரிகளுடன் அலுவலக ஒழுங்கு முறை பற்றி ஆராய்ந்து சுற்றிப் பார்ப்பதற்காக சென்றுவிட்டார். அலுவலகத்தைஅழகாக வைத்திருப்பது, ஏனைய உத்தியோகத்தர்களுடன் அலுவலகம் சம்பந்தமாக கலந்துரையாடுவது வரவேற்கத்தக்கது. ஆனால் பொதுமக்களைச் சந்திக்கும் தினத்தில், இவற்றைத் தவிர்ப்பது நன்று.

**இரா. கனகவடிவேல், கோப்பாய் மத்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகுக்கு அழகு சேர்க்கும் தேங்காய்!



நமது சமையலில் முக்கிய இடம்பெறும் தேங்காய், நமது தேகத்தை அழகாக வைத்துக்கொள்ளவும் உதவுகிறது. தலை முதல் பாதம் வரை மென்மை, பளபளப்பை தாராளமாய் அள்ளித்தரும்.

★ வழுக்கை தேங்காயை நன்கு அரைத்து, அதனோடு சிறிதளவு இளநீர் கலந்து முகத்தில் கீழ் இருந்து மேல் நோக்கிப் பூசி, அது உலர்ந்ததும் நீர் கொண்டு சுத்தம் செய்துகொள்ள வேண்டும். தினமும் இப்படி செய்து வந்தால் மாசு மருவின்றி முகம் மிளிரும். கரும் புள்ளிகள் இருந்தால் கூடிய விரைவில் அவை காணாமல் போய் விடும்.

★ வெயில் காலங்களில் சூரியஒளி பட்டு முகம் கருப்பாவது வழக்கம். பலருக்கு வெளியூர் சென்றால்கூட இதுபோன்ற நிலை ஏற்படும். முகம் கருப்பாவதை தடுக்கவும் தேங்காய் உதவுகிறது. தேங்காய் பால் 2 ஸ்பூன், கடலை மாவு ஒரு ஸ்பூன் எடுத்து, இரண்டையும் கலந்து பசைபோல ஆக்கிக்கொள்ள வேண்டும். இந்தப் பசையை முகத்தில் பூசிக்கொண்டு, உலர்ந்ததும் தண்ணீர் கொண்டு கழுவிவிட வேண்டும். வாரம் இருமுறை இப்படி செய்து வந்தால் முகம் பிரகாசமாகும்.

# அழகுக்கு அழகு சேர்க்க....

★ தினமும் காலை, மாலை வேளைகளில் 5 நிமிடம் மூச்சுப் பயிற்சி செய்து வந்தால் அன்றைய தினம் முழுவதும் 'ப்ரெஸ்' ஆக காணப்படுவீர்கள்.

★ தினமும் காலையில் எழுந்ததும் ஒரு லீற்றர் தண்ணீர் குடித்து வந்தால் அன்றைய நாள் முழுவதும் சுறுசுறுப்பாக வலம் வருவீர்கள். சோர்வு என்பதே எட்டிப்பார்க்காது.

★ தினமும் காலையில் எழுந்ததும் பழங்கள் சாப்படுவது இளமையை அதிகரிக்கும். குறிப்பாக, அப்பள், ஒரேஞ்சு, பப்பாசிப் பழங்கள் சாப்படுவது நல்லது.

★ தினமும் காலையில் ஒன்று அல்லது இரண்டு கேரட்டை பச்சையாக சாப்பிட்டு வந்தால் உடலில் ஒருவித மினுமினுப்பை பெறலாம்.

★ கறிவேப்பிலையின் இளம் தளிர்களை காய வைத்து பொடியாக்கி, அதை தேங்காய் எண்ணெயில் கலந்து தலையில் தேய்த்து வந்தால் முடி கருகருவென்று வளரும்.

★ தயிருடன் கடலை மாவு சேர்த்து முகத்தில் பூசி வந்தால் முகப்பருத் தொல்லை வராது.

★ 10 அல்லது 15 நாள்களுக்கு ஒருதடவை முல்தான்மெட்டியுடன் பன்னீர் கலந்து முகத்தில் பூசி வந்தால் முகம் பளிச்சென்று காணப்படும்.

★ 2 டீஸ்பூன் தேனுடன் எலுமிச்சம் பழச்சாறு 4 சொட்டு கலந்து குடித்து வந்தால் உடலில் தேவையற்ற கொழுப்பு சேர்வது தடுக்கப்படும்.

★ பப்பாசி வயிற்றுக்கோளாறுக்கு மருந்தாகப் பயன்படுகிறது, செரிமானத்தை ஊக்குவிக்கிறது, பப்பாசிக் காயின் பால் வயிற்றில் உள்ள பூச்சிகளை அகற்றுகிறது.



## தலைமுடி செழித்து வளர முருங்கைக்கீரை

தலை முடி நன்கு வளர...தினமும் முருங்கைக்கீரையை சூப் செய்து சாப்பட்டால் தலை முடி நன்கு செழித்து வளர ஆரம்பிக்கும். நல்ல பலன் கிடைக்கும்.

தேவையானவை

முருங்கைக்கீரை - 2 கப்

வெண்ணெய் 1 - டீ ஸ்பூன்

கார்ன் ஃப்ளோர் - 1 டீ ஸ்பூன்

உப்புத்தூள், மிளகுத்தூள் - சிறிதளவு

முதலில் சுத்தம் செய்து வைத்த கீரையை 2 டம்ளர் தண்ணீர் சேர்த்து 7 நிமிடங்கள் வேகவைத்துகொள்ள வேண்டும். கீரையில் உள்ள சத்து தண்ணீரில் இறங்கி விட்டிருக்கும்.

அதை உடனே எடுத்து வடிகட்டி (இல்லையெனில் சத்துக்கள் திரும்பவும் கீரைக்கே சென்றுவிடும்), தேவைப்பட்டால் வெண்ணை சேர்க்கலாம் சூட்டிலேயே உருகிவிடும். திக்காக வேண்டும் என்று நினைப்பவர்கள் கார்ன் ஃப்ளோரை சிறிது தண்ணீரில் கரைத்து சேர்த்துக்கொள்ளலாம்.(வடிகட்டியபின் இதை சேர்த்து இரண்டு கொதி விட்டு இறக்கவும்) பின்பு மிளகுத்தூள், உப்புத்தூள் சேர்த்து பருக வேண்டும்

## மீன் சாப்பிட்டால் சருமம் பளபளக்கும்..!

மீனில் காணப்படும் ஓமேகா 32 என்ற பொருள், நம் சரும செல்களை புதுப்பிப்பதோடு, சருமத்தை பளபளக்கவும் செய்கிறது. அதனால், வாரத்துக்கு 3 நாள் மீன் சாப்பிடுவது நல்லது. மீன் சாப்பிடாதவர்கள் மீன் மாத்திரை சாப்பிடலாம்.

சோயா பீன்சை வாரத்துக்கு 3 நாள் உணவில் சேர்த்துக்கொண்டால் சருமம் புதுப்பொலிவுடனும், ஈரப்பசையுடனும் இருக்கும். முகப்பருக்களும் வராது. கரட்டில் உள்ள பீட்டா கரோட்டின் சருமத்தை பொலிவுடன் வைக்கும். ஒரேஞ்சு, பப்பாசி, பூசணி, மாம்பழம் சாப்பிட்டாலும் சருமம் பொலிவுடன் இருக்கும்.

# வேட்டி வேர் தரும் அழகு

முகம் முழுக்க அடிக்கடி பருக்கள் தோன்றி அவதிப்படுகிறவர்களுக்கு, அருமருந்தாக திகழ்கிறது இந்த வெட்டிவேர்


தேவையானவை

சிறு துண்டுகளாக்கிய வெட்டிவேர் - ஒரு டீஸ்பூன்

கொட்டை நீக்கிய கடுக்காய் - 1

இந்த இரண்டையும் முந்தின இரவே கொதிநீரில் ஊறவையுங்கள். மறுநாள் இதை அம்மியில் அரைத்து, அந்த விழுதை பருக்கள் மீது முழுவதுமாக மறைப்பதுபோல் தடவுங்கள்.

ஒரு நாள் விட்டு ஒருநாள் இப்படிச் செய்து வந்தாலே பருக்கள் உதிர்ந்துவிடும். பருக்கள் இருந்த வடுவும் தெரியாது என்பதுதான் இந்த சிகிச்சையின் சிறப்பம்சம்!



**தழும்புகள் நீங்க**

பழைய பருக்கள் ஏற்படுத்தி விட்டுப் போன தழும்புகளால், சிலருக்கு முகம் கரடு முரடாக இருக்கும் அதற்கான நிவாரணம் இதோ...

ஒரு படி வெட்டிவேரை சிறு துண்டுகளாக்கி வெந்நீரில் போட்டு மூடுங்கள். ஒரு இரவு இது ஊறட்டும். மறுநாள் ஒரு பாத்திரத்தில் தண்ணீரை கொதிக்க விடுங்கள். முந்தின நாள் ஊறவைத்த வெட்டிவேரையும் தண்ணீரையும் தனியே பிரித்து வையுங்கள்.

இப்போது கொதிநீரில் வெட்டிவேரைப் போட்டு ஆவி பிடியுங்கள். அப்படியே முகத்தைத் துடைக்காமல், வெட்டிவேர் ஊறிய தண்ணீரில் சுத்தமான வெள்ளைத் துணியை அமிழ்த்தி பிழிந்து முகத்தை ஒற்றி எடுங்கள்.

வாரம் இரு முறை இப்படிச் செய்து வந்தால், தழும்புகள் மறைந்துவிடும்.

சிலர் எப்போது பார்த்தாலும் வியர்வையில் குளித்திருப்பார்கள். அதனாலேயே பருக்களும் அதிகமாக இருக்கும்.

வெட்டிவேர், ரோஜா மொட்டு, மகிழம்பூ, செண்பகப்பூ, சம்பங்கி விதை. இவற்றை சம அளவு எடுத்து மெஷினில் கொடுத்து அரைத்துக் கொள்ளுங்கள். (இவற்றை எவ்வளவுதான் அரைத்தாலும் திப்பிதிப்பியாக இருக்கும். இதை நன்றாக சலித்து, நைஸான பவுடரை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள்). இந்தப் பவுடரை தண்ணீரில் குழைத்து முகத்தில் பூசி, கழுவுங்கள்.

வெட்டிவேர் முகத்தில் உள்ள எண்ணெய் பசையை எடுத்துவிடும். சம்பங்கி விதை முகத்துக்கு புத்துணர்ச்சியை கொடுக்கும். ரோஜா மொட்டு சோர்வைப் போக்கி நிறத்தைக் கொடுக்கும். மகிழம்பூவும், செண்பகப்பூவும் வியர்வை நாற்றத்தைப் போக்கி வாசனையை கொடுக்கும்.

**சருமம் மிருதுவாக:-**

சிலருக்கு தோள்பட்டையிலும் முதுகுப் புறங்களிலும் பரு போன்ற சிறு கட்டிகள் இருக்கும். சில ஆண்களுக்கு உடலில் வரிவரியாக இருக்கும்.

இந்த இரு பிரச்சினைகளுக்குமான ஒரே தீர்வு வெட்டிவேரில் இருக்கிறது.

பச்சைப்பயறு - 100 கிராம்

சிறு துண்டுகளாக்கின வெட்டிவேர் - 50 கிராம்

இந்த இரண்டையும் சேர்த்து நன்றாக அரையுங்கள். இந்தப் பவுடரை உடலுக்குத் தேய்த்துக் குளியுங்கள்.

தினமும் இப்படி குளித்து வந்தாலே சிறு கட்டிகளும் வரிகளும் ஓடிப் போகும். சருமமும் மிருதுவாகும்.

**கூந்தல் மணக்க....**

அப்போதுதான் குளித்துவிட்டு உற்சாகமாக வந்தாலும் முகம் முழுக்க எண்ணெய் வழிந்து உங்களை டல்லாக்குகிறதா? வாரம் இருமுறை தலைக் குளியலுக்கு இந்த வெட்டிவேர் பவுடரை உபயோகியுங்கள். உடனடியாக வித்தியாசம் தெரியும்.

வெட்டிவேர் - 100 கிராம்

வெந்தயம் - 100 கிராம்

இரண்டையும் சீயக்காய் மெஷினில் கொடுத்து அரைத்து வைத்துக் கொள்ளுங்கள். எண்ணெய் தேய்த்து குளிக்கும் போதெல்லாம் சீயக்காய்க்குப் பதில் இந்த பவுடரை பயன்படுத்துங்கள்.

தொடர்ந்து இதைச் செய்தாலே முகத்தில் எண்ணெய் வழியாது. அதோடு உங்கள் கூந்தலின் நறுமணத்தால் ஏரியாவே மணக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org